ஜனு-தை JANUARY, 1944 விலை 6 அணா

காவேரி

EAD **The Cauveri-**
IDEAL MAGAZINE FOR THE HOME

ரஸிகர்கள் நாடும்

கிட்டப்பா புகையிலை

சங்கீத உலகில் அழியாப் புகழ் படைத்த கிட்டப்பாவின் — இனிமையான கானத்தை ரஸிக்காதவர் யார்? —

அவ்வாறே அவருடைய பெயர் பெற்ற புகையிலையையும் சீவலையும் விரும்பாதவர் இல்லை எனலாம். ஒருதரம் உபயோகித்தால் அவைகளையே தேடியலைவார்கள். ஏன்? —

உயர்ந்த **சிவபுரிப் புகையிலையினால்** தயாரிக்கப்பட்டது **இயற்கையான சுவை, மணம், குணம்** இவை ஒருங்கே பொருந்தியது. இதுவே அதன் வசீகரசக்தி —

கிட்டப்பா சீவலும் இதேரகம் தான். சங்கீத வித்வான்கள் யாவரும் இதையே உபயோகிக்கின்றனர். சங்கீதத்திற்கும் இவைகளுக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளது போலும்!

ஒருதரம் உபயோகித்துப் பாருங்கள்

தயாரிப்பவர்கள்

A. D. சுல்தான் & Co.,
கும்பகோணம்

சென்னை பிராஞ்சு:-
16, ஹைரோட்
திருவல்லிக்கேணி, சென்னை.

இந்தியக் கைத்தொழிலை நீங்கள் ஆதரியுங்கள்

குழந்தைகள் இருக்கும் வீட்டிற்கு நீங்கள் வெறுங்கையுடன் போக மாட்டீர்கள். கைக்கு எளிதாய் உங்கள் பணப்பைக்கும் எளிதாய் **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்ட் ஒரு டின் வாங்கிக் கொண்டு போங்கள். **வி. எஸ். & ஸன்ஸ்** பெப்பர்மெண்டையே குழந்தைகள் விரும்பித் தின்னும். அக்குழந்தைகளின் மென்மொழிகளில் இப்பெப்பர்மெண்டின் இனிமையை நீங்களே கண்டு ஆனந்தப்படுவீர்கள். உயர்ந்த முறையில் கைதேர்ந்த வேலைக்காரர்களால் சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்டவை.

ஒரு தடவை வாங்கிப்பாருங்கள்.

தென் இந்தியா கன்பெக்ஷனரி தொழிற்சாலை

புரோப்ரைடர்கள்:— வி. எஸ். & ஸன்ஸ்

கும்பகோணம்.

The Southern India Confectionery Factory

Proprietors:- V. S. & Sons,

KUMBAKONAM.

இண்டோ கம்மர்ஷியல் பாங்க் லிமிடெட்

★

ரிஜிஸ்டர்டு ஆபீஸ்: மாயவரம்

ஸென்ட்ரல் ஆபீஸ்: மதராஸ்

ஸிடி ஆபீஸ்கள் :

சைனுபஜார் ரோட், மாம்பலம், மைலாப்பூர்

[illegible]ளிக்கப்பட்ட	மூலதனம்	ரூ. 25,00,000
செலுத்தப்பட்ட	மூலதனம்	ரூ. 18,75,000
சேமிப்பு நிதிகள்		ரூ. 1,27,500

●

கிளை ஆபீஸ்கள் :

ஆமதாலவலஸா
அனகாபள்ளி
சிதம்பரம்
காஞ்சீவரம்
ஈரோடு
காரைக்குடி
கும்பகோணம்
மதுரை
பாலக்காடு
புதுக்கோட்டை
சீயாழி
நாடேபள்ளிக்கூடம்
தஞ்சாவூர்
திருநெல்வேலி
திருவாரூர்
திருச்சினுப்பள்ளி
வேலூர்
விருதுநகர்
விஜயநகரம்

எல்லாவித பாங்க் அலுவல்களும் ஏற்றுக்கொண்டு நடத்தப்படும்.

S. N. N. Sankaralinga Iyer,
Managing Director.

218544

ஜவுளி தினுசுகள் :: தேவைக்கு!

நம்பிக்கைக்கு உகந்ததாய்த் தற்கால மோஸ்தரில்
உடைக்குத் தக்க போட்டி விலையில்

புதுச் சரக்குக்கள் கிடைக்குமிடம்

M. N. நாகேந்திரம் ஸன்ஸ்

ஜரிகை பட்டு ஜவுளி வியாபாரம்.

(மலைவாசல் உள்மண்டபம்)

தெப்பக்குளம் போஸ்ட், திருச்சினுப்பள்ளி.

N. B.-உயர்ந்த பனாரிஸ் தினுசுகள் 6, 8 கெஜம் சேலைகளும் ஏராளமாய் இருக்கின்றன.

21 JAN 1944
MADRAS

★ பொருளடக்கம் ★

சுபானு
மலர் 3

தை
இதழ் 6

பத்திரிகாசிரியர்கள் மகாநாடு	... ...	4
புத்தக விமர்சனம்	... ...	5
கதம்பம்	... ...	7
மந்திரிசபை நினைவுகள்	... தி. சே. சௌ. ராஜன்	9
அம்மாஞ்சியின் அபிப்பிராயங்கள்	... 'ராமய்யா'	13
ஏமாற்றம்	... ரா. ஸ்ரீ தேசிகன்	17
திருப்பள்ளியெழுச்சியும் தைந்நீராடலும்	... வி. நாராயண அய்யர்	22
சித்திரமும், கற்பனையும்	... "ஸ்ரீரா"	25
பாசம்	... "விஜயஸ்ரீ"	33
எட்டுச்சேர் அரிசி	... க. சந்தானம்	41
சீர்திருத்தம்	... "ஹரிணி"	44
உடைந்த வீணை	... கே. சுந்தரம்மாள்	50

குறிப்பு:—காவேரியில் வெளியாகும் கட்டுரைகளிலுள்ள பெயர்கள் கற்பனைப் பெயர்கள். அவைகளில் அடங்கிய அபிப்பிராயங்கள் அவற்றை எழுதியவர்களுடையனவே. அவைகளுக்குப் பத்திரிகாசிரியர் பொறுப்பாளியல்லர்.

நெ. 111, நயினியப்ப நாயக்கன் தெரு, மதருஸ்.

★ கியாதி பெற்ற S.R.B. MUTHUKRISHNA IYER SRB ஜவுளிக் கடை ★

பொங்கல் பண்டிகைக்கு சேலைகளில் சிறந்தவை

எங்கு கிடைக்குமென்றால் கீழ்கண்ட விலாசத்தில் அவரவர் சக்திக்கேற்றவாறு சகாயமான விலையில் மனதிற்கு திருப்தி அளிப்பவையாயும், உடுக்க உடுக்க உற்சாகமானவையாயும் உள்ள சேலைகளும் வேஷ்டிகளும் தாவணிகளும் துப்பட்டாக்களும் ரவிக்கைகளும் பாவாடைகளும் இதர பட்டு ஜவுளி தினுசுகளையும் இங்கு வாங்குவதால் உங்களுக்கு நிச்சயமாய் சௌகர்யம் உண்டு.

ஒரு முறை நேரில் வந்து பாருங்கள்

S. R. B. முத்துகிருஷ்ண அய்யர்

பழைய விலாசம்:

S. R. பாலுசாமி அய்யர் & ஸன்ஸ்.

நெ. 111, நயினியப்ப நாயக்கன் தெரு-பி. டி. மதருஸ்.

(Phone: 2314) Tel: BALMO

235, கீழ மாரட் வீதி, மதுரை. Tel: MUTHUCO

காவேரி

சுபானு மலர் 3 | "சென்றிடுவீர் எட்டுத்திக்கும்—கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"—பாரதியார் | தை இதழ் 6

பத்திரிகாசிரியர்கள் மஹாநாடு

இன்று சென்னையில் அகில இந்தியப் பத்திரிகாசிரியர்கள் மஹாநாடு நடக்கிறது. இது ஆரம்பிக்கப்பட்டு மூன்று ஆண்டுகள்தான் ஆகின்றன. அதற்குள் அது ஒரு பெரிய ஸ்தாபனமாய் ஊன்றிவிட்டது. ஒற்றுமையின்றி இருந்த இத்தொழிலில் இன்று எதுவும் ஏகோபித்து நடத்தப்பட்டுவருகிறது. கவர்மெண்டார் பத்திரிகைகளின் ஜீவநாடியான சுதந்திரத்தைக் குலைக்கச் சதிசெய்தார்கள். முரண்டிக்கொண்டு எழுந்தார்கள் பத்திரிகையாசிரியர்கள். அப்பொழுது எழுப்பப்பட்ட மஹாநாடு இன்று நாட்டில் ஒரு அழிக்கமுடியாத ஸ்தாபனமாகிவிட்டது. கவர்மெண்டார் இதன்முன் அனேகம் தடவை தலை வணங்கியிருக்கிறார்கள். அவ்வளவு சக்தியைத் திரட்டிக்கொண்டுவிட்டது இந்த ஸ்தாபனம். இதையெல்லாம் இவ்வளவு சீக்கிரத்தில் சாதிப்பது எளிதான காரியமல்ல. இதைச் செய்துகாட்டிய தலைவர் இன்று பிறருக்கு இடம் கொடுப்பதற்காகத் தலைமைப் பதவியிலிருந்து விலகுகிறார். இவர்தான் ஸ்ரீ கே. ஸ்ரீநிவாஸன்.

இவர் பார்வைக்குப் பகட்டில்லாதவர். சிறிய ஆகிருதி; நரைத்த தலை. புன்சிரிப்புடன் கூடிய பேச்சு. சகஜமாகப் பழகும் குணம். நெடுநாள்வரை தம்முடைய அபார சக்தியை வெளிக்காட்டவேயில்லை. முதன் முதலாகச் சென்ற மூன்று ஆண்டுகளாகத்தான் இந்த ஸ்தானத்தில் அவர் ஈடுபட்டு வந்தார். அவர் அடைந்த வெற்றி அவருடையதல்ல, இந்தியாவினுடையது.

பத்திரிகைச் சுதந்திரம் நாட்டின் சுதந்திரத்திற்கு அடிநிலை. இதை ஒருவாறு கவர்மெண்டாருக்கும் நாட்டு மக்களுக்கும் எடுத்துக் காட்டினார் ஸ்ரீ ஸ்ரீநிவாஸன்.

மஹாகனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் சென்னையில் கூடியிருக்கும் பத்திரிகை ஆசிரியர்களுக்கு ஓர் விருந்து அளித்தார். அதில் பேசுகையில் பத்திரிகாசிரியர்கள் காங்கிரஸ் தலைவர்களை விடுவிப்பதில் சிரத்தை காட்ட வேண்டும் என்று குறிப்பிட்டார். கவர்மெண்டாருடன் பேசி அவர்கள் மனப்பான்மையை மாற்றுவதில் ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸன் கைதேர்ந்தவர். இத்துறையிலும் அவர் கொஞ்சம் ஊக்கம் எடுத்துக் கொண்டு இந்திய மக்களின் நன்மதிப்பைப் பெறுவார் என எதிர்பார்க்கிறோம்.

தியாகப்ரும்ம உத்ஸவ நிதி

ஸ்ரீ தியாகப்ரும்ம சபையாரால் கும்பகோணத்தில் நடத்தப்பட்ட சங்கீதவிழா சிறப்பாக நடந்தேறியது. சுமார் ரூ. 12,000 வசூல். கும்பகோணத்தில் இந்தக் கச்சேரிகள் நடந்த ஒரு வாரமும் பெரிய திருவிழாவாகவே இருந்தது—எங்கும் ஜனக் கூட்டம், கலகலப்பான பேச்சு, சிரித்த முகங்கள், நன்கு அலங்கரித்துக்கொண்ட ஸ்திரீ புருஷர்கள். ஏழு கச்சேரிகளும் ஒரு நாட்டியக் கச்சேரியும் நடந்தன.

ஆரம்ப தினத்தன்று செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீனிவாஸ ஐயர் பாடினார். நன்றாகத்தான் பாடினார், ஆனால் பழைய செம்மங்குடியாக இல்லை. ரஸிகர்களைப் பிரமிக்கச்செய்யும் சக்தி அன்று காணப்படவில்லை. மறுதினம் மதுரை மணி ஐயர் பாட்டு. சில ராகங்களை அபூர்வமாகப் பாடினார். ரஸிகர்களுக்குப் பரம திருப்தி. அரியக்குடி ராமானுஜ ஐயங்கார் அடுத்த தினம் பாடினார். கர்னாடக சங்கீதத்தின் வரம்பை எட்டிப் பிடித்தவர் என்பதை எடுத்துக் காட்டினார். ஸ்ரீ தியாகையர்வாளுடைய கீர்த்தியை நிலைநாட்ட அவர் செய்த கச்சேரி ஒன்றே போதும்! அதற்கு நிகராக எதையும் குறிப்பிடமுடியாது. தமிழ்ப்பாட்டுக்கள் ஒன்றிரண்டுதான். ஆனால் பாஷையை யார் கேட்டார்கள்? அங்கே கூடியிருந்த சுமார் ஆயிரம் ஜனங்களும் ஆனந்தத்தில் மூழ்கி நின்றார்கள். அவர் அன்று பாடிய பல்லவி இன்னும் காதில் இனிமையை ஊட்டுகிறது. தியாகையரின் சங்கீதப்பெருமையைப் பரப்பச் சங்கீதக் கச்சேரி ஏற்படுத்தவேண்டுமென்றால் இக்காலத்திலுள்ள வித்வான்களில் இவர் கச்சேரிதான் தலை சிறந்தது.

அடுத்தபடி ஜி. என். பாலசுப்பிரமணியம் பாடினார். பக்கவாத்தியம் த்வாரம் வெங்கடஸாமி நாயுடுவும், பாலக்காட்டு மணியும். மணி அன்று மணியாகவே வாசித்தார்.

த்வாரம் வெங்கடஸாமி நாயுடு இப்பக்கங்களுக்கு புதியவர். ஏராளமான கூட்டம் அன்று. எல்லோரையும் பிரமிக்கச்செய்துவிட்டார் அவர். என்ன ஜிலுஜிலுப்பு, என்ன ஸுஸ்ஸ்வரம்! ஆஹா! அதை அனுபவித்தவர்கள் அதைப்பற்றியேதான் இன்னும் பேசிக்கொண்டிருக்கிறார்கள். பிடில் வாத்தியத்திற்கு அவர் ஒப்பற்ற நாயகன் என்பதை நிரூபித்தார் போலும்!

மறுநாள் ஸ்ரீமதிசுந்தராம்பாள்கச்சேரி. அவர் கீர்த்தனங்கள் பாடும்பொழுது ஸுஸ்வரமாக இருந்ததென்றாலும் ஜனங்களைக் கவரவில்லை. ஆனால் அவர் நாடகமேடை நினைவுகளில் சில விருத்தங்களும் ராகமாலிகையும் பாடும்பொழுது ஜனங்கள் மெய்மறந்து ஆனந்த பாஷ்பம் சொரிய ஆரம்பித்துவிட்டார்கள். ஸ்ரீமதி சுந்தராம்பாள் அம்மாள் நாடக மேடையைவிடுத்துச் சங்கீதக் கச்சேரி மேடைக்கு வந்தது நாடகக் கலைக்குப் பெருத்த துர்ப்பாக்யம் என்பதை நினைப்பூட்டுவதுடன், சங்கீதமேடைக்குப் பாக்யமென நினைக்க இடமில்லையே என்பதையும் எடுத்துக் காட்டுவதாயிருந்தது. மறுதினம் ஆலத்தூர் சகோதரர்களும் பாடினார்கள்.

கடைசி நாள் ஸ்ரீமதி கலாநிதி தம் உடல் நிலையையும் பாராட்டாது சென்னையிலிருந்து வந்து நாட்டியமாடினார். மிகச் சிறுமி, ஆனால் எத்தகைய பாவங்களை எல்லாம் காணச் செய்தார். இத்துறையில் அவர் ஈடுபட்டு உழைத்து வருவது மிகவும் போற்றத்தக்கது. அவர் நடனத்தைக் கியாதிபெற்ற கும்பகோணம் நடிகர்களுடன் ஒப்பிடுவது தவறு. கலாநிதி காலக்கிரமத்தில் இக்கலையின் முன்னணிக்கு வரக்கூடியவர் என்பதை அவர் நடனத்தைக் கண்டுகளித்த யாவரும் ஒப்புக்கொள்வார்கள்.

ஸ்ரீ தியாகப்பிரும்ம சபையின் காரியதரிசியான ஸ்ரீ வி. எஸ். ராமசந்திரன் அவர்கள் இவ்விழா திறம்பட நடந்ததற்கு முக்கிய புருஷர். அவர் நிர்வாக சக்தி மிகவும் போற்றத் தக்கது.

புத்தக விமர்சனம்

‘ஜயமணி’ (நாடகம்)

[ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதியது—அன்பு நிலையப் பிரசுரம். விலை ரூ. 1-4-0]

இனிய சமுதாய நாடகம். இளைய மனைவியின் அட்டகாசம், இளம் காதலர்களின் மன உறுதி, சவடால் சங்குவின் அக்கிரமங்கள், டாக்டர் ஹரிராவின் தன்னலமற்ற சேவை இவைகள் உயர்ந்த கற்பனா சித்திரங்கள். நாடக நடையும் நன்றாயிருக்கிறது. சுவையுள்ள சிறந்த நாடகம். நடிப்பதற்கேற்ற முறையில் உள்ளது. நல்ல பாட்டுக்களுமுண்டு.

“கள் ஒழிக”

[ராஜாஜி எழுதியது. கமலா பிரசுராலயம், சென்னை. விலை அணா 12.]

இந்தியாவிலேயே மதுவிலக்கு இயக்கத்திற்கு நிகரற்ற தலைவராக விளங்குகிறார் ராஜாஜி. இப்புத்தகம் வெறும் பிரசாரமாக இல்லாமல் ஆராய்ச்சிகளும் ஆதாரங்களும் கொண்டுள்ளது. மதுவில் போதைப்பொருளைத்தவிர உணவுப்பொருள், சத்துப்பொருள் இவைகள் யாதொன்றுமில்லையென்பதை ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார்.

“சென்னை மாகாணத்தில் போதைப்பொருள்களுக்கு வருஷந்தோறும் மக்கள் கொடுக்கும் பணம் 16 கோடி ரூபாய். இந்தியா பூராவும் விரயம் செய்யும் தொகை 100 கோடி. இந்தப் பொருள் நஷ்டத்தில் சர்க்காருக்கு சேரும் வரி சேர்க்கப்படவில்லை. பொருள் நஷ்டத்தோடல்லாமல் மனிதனின் ஆரோக்யம், அவனது சுகம், குடும்ப வாழ்க்கைஎல்லாம் பாழாகின்றன. மதுவின் மூலபொருள் விஷம்” இந்தவிஷயங்கள் தக்க சான்றுகளுடன் நன்கு விளக்கப்பட்டுள்ளன. மதுவிலக்குச் சட்டத்தை ரத்து செய்ய சர்க்கார் சொல்லும் பிதற்றலான காரணங்களுக்குச் சரியான பதில் இவ்வாராய்ச்சி நூல் நல்ல சமயத்தில் இந்த உயர்ந்த புத்தகத்தை வெளியிட்ட ராஜாஜிக்கும் கமலா பிரசுராலயத்திற்கும் தமிழ் மக்களின் நன்றி உரித்தாகும்.

“இராணி மங்கம்மாள்” (வீரச்சுவை நாடகம்)

[ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் எழுதியது அன்பு நிலயப் பிரசுரம் விலை அணா 12]

மங்கம்மாள் பாண்டி நாட்டரசி. அரசியின் எதிரிகள் பலர். அவளுடைய மந்திரி அழகிரி, இளவரசன் விஜயரங்கன் இவர்கள் முக்ய சதிகாரர்கள். அழகிரியின் சூது வெளிப்பட்டு அவனும் கைது செய்யப்படுகிறான். ராணி அவனை மன்னித்தும்கூட தற்கொலை செய்து கொள்ளுகிறான். இளவரசன் கடைசியில் ராணியைச் சிறைப்படுத்துகின்றான். ராணி பட்டினி கிடந்து உயிரை விடுகிறாள் சிறையில்.

நாடகத்துக்கேற்ற கதை. காலத்துக்கேற்ற கதையுங்கூட. வீர ரஸம் ததும்பும் சரிதை. நடை உயர்தரம். பாட்டுக்களும் சந்தர்ப்பத்துக்கேற்றவாறு நல்லமுறையில் அமைக்கப்பட்டுள்ளன. வாசிக்க ருசிகரமாயிருக்கின்றன.

மேடையில் நடிக்கக் கதையின் போக்கைச் சற்று விஸ்தரிக்கவேண்டும். ஆரம்பம் ராணியின் தர்பார் காட்சியாக இருத்தல் நாடகத்துக்கு மேன்மையளிக்கும். இரண்டாங் காட்சி கதைக்கும் நாடகத்துக்கும் முக்யமன்று. இளவரசன் விஜயரங்கன் பாகத்தைச் சற்று அதிகம் விஸ்தரிக்கலாம். இவைகள் குறைகளல்ல.

இந்தியா சுதந்திரம்பெற வழிஎன்ன?

[(How to Secure Indian Independence) ஸட்லெஜ் ஆங்கிலத்தில் எழுதியது. ஆக்ஸ்போர்ட் யூனிவர்ஸிடி பிரஸ் பிரசுரித்தது. விலை அணா 8.]

இச்சிறிய புத்தகத்தில் இந்தியா இன்று இருக்கும் நிலையில் எப்படிச் சுதந்திரமடையலாம், அதற்கு எத்தகைய முயற்சிகள் வேண்டும் என்பதை எல்லாம் விவாதித்துவிட்டு, இந்தியாவை ஹிந்துஸ்தானம், பாகிஸ்தானம் என்று பிரித்துத்தானாகவேண்டும் என்பதையும் எடுத்துக்காட்டி, அதை எவ்வகையில் செய்ய இயலும் என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளார் இப்புத்தகாசிரியர். இப்புத்தகம் அனைவரும் படித்துச் சிந்திக்கவேண்டிய நூல்.

ஔவையார்

[P. எதிராஜுலு நாயுடு எழுதியது. ஸ்ரீ பாலஷண்முகானந்த சபையை நடத்தும் டி. கே. எஸ். சகோதரர்களால் பிரசுரிக்கப்பட்டது. விலை ரூ 1—8—0.]

ஔவைப் பிராட்டியைப்பற்றிய பற்பல கதைகளையும், அவர் தொகுத்த நீதி வாக்யங்களையும், இரண்டறக் கலந்து மக்கள் மனதில் அவை நன்கு வேரூன்றும்படி இந்நூலில் நாடக ரூபத்தில் சித்திரிக்கப்பட்டிருக்கிறது. பன்னிரண்டு அங்கங்கள்கொண்ட நாடகம் இது. இதை வாசிக்கும்பொழுதே அதில் சித்திரிக்கப்பட்டிருக்கும் காட்சிகள் சம்பவங்கள் நம் கண்முன் நடப்பதாகவே தோன்றுகின்றன. திறமைவாய்ந்த நடிகர்கள் இதை நடித்தால் கேட்கவும் வேண்டுமா?

இத்தகைய பண்டைக்காலத்துத் தமிழ்ப் பெரியார்களின் சரித்திரங்களையும் அவர்கள் சிறப்பையும், அவர்கள் சமூகத்திற்கோ கலைக்கோ செய்த தொண்டையும் நாடக வாயிலாக எடுத்துக்காட்டி, மக்கள் கண்டுகளிக்கும்படி செய்யும் முயற்சி மிகவும் போற்றத் தக்கது.

இத்துறையில் ஈடுபட்டுச் செய்துவரும் டி. கே. எஸ். சகோதரர்களின் தொண்டுக்குத் தமிழன்பர்கள் கடமைப்பட்டுள்ளார்கள்.

இவ்வரிய நூல் இரண்டாவது பதிப்பிலாவது நல்ல காகிதத்தில் நன்றாக அச்சிடப்பட்டு மக்களுக்கு வழங்கப்பட்டால் நலமாயிருக்கும்.

தாமஸ் பாரி

[ஜி.எச். ஹாட்ஸன் ஆங்கிலத்தில் எழுதியது.]

சென்னையிலுள்ள பாரி & கம்பெனியை (1788) ஸ்தாபித்த தாமஸ் பாரி அவர்களின் சரித்திரம் இது. தம் சொந்த முயற்சியால் எப்படி இப்பெரிய ஸ்தாபனத்தை ஏற்படுத்தி விருத்தியடையச் செய்தார் என்பதை இதில் காணலாம். இந்தியர்கள் யாவரும் படிக்க வேண்டிய புத்தகமிது.

NICO FERRIN

Iron and Vitamin B Tonic.

நிக்கோ-பெரின்

அயர்ன் வைடமின் B டானிக்்

———:o:———

ரத்த சோகை, பெர்னீஷஸ் அனிமீயா (Anaemias-Primary, Secondary) பலஹீனம், ரத்தக்குறைவு, முதலிய வியாதிகளுக்குச் சிறந்த டானிக்.

ஜீரண சக்தியைச் சீர்படுத்துவதிலும், ரத்தத்தை விருத்தி செய்வதிலும் நல்ல உதவி செய்கிறது. ஜ்வரங்களுக்குப் பிறகு ஏற்படும் பலஹீனத்தையும், கர்ப்ப ஸ்திரீகளுக்கு ஏற்படும் சோர்வு, ஓச்சல் பலஹீனத்தையும் போக்குகிறது.

மருந்துகள் எல்லா ஊர்களிலும் எல்லா இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

"THE KAUSALYA PHARMACEUTICALS Ltd.,"
19, Sankurama Chetty St., G. T. Madras.

1944! **1944!!**

புது வருஷத்தின்
நமது வாழ்த்துகள்

டாக்டர். ரெவ். பிரதர்

தேவநேசன் S. H. J., I. M. P.

அவர்களால் தயாரிக்கப்பெற்ற

★ பிரதர் கோரோஜனை பேதி மாத்திரை
★ பிரதர் கஸ்தூரி ஜ்வர மாத்திரை
★ பிரதர் விஷக்கடி மருந்து
★ பிரதர் காலரா பவுடர்
★ பிரதர் பிலாஸ்திரி
★ பிரதர் மலேரியா மிக்சர்

Apply to

Distributors

DHATHATHRAYA & Co.

GENERAL TRADERS

Ayengar Street, KUMBAKONAM.

கதம்பம்

நமது நன்றி!

நம்முடைய நன்மைகள் நமக்கு விளங்குவதில்லை. அதனால்தான் வெள்ளையர்கள் நம்மீது அக்கரைகொண்டு நமது க்ஷேமத்தில் கண்ணும் கருத்துமாயுள்ளனர். இந்தியாவில் வியாபாரம் செழித்தோங்கவேண்டும், தொழிற்சாலைகள் அதிகம் வேண்டுமென்று எண்ணுவதில் நம்மைவிட வெள்ளையர்கள் அதிகமாகச் சிந்தனை செய்துவருகிறார்கள்.

"யுத்தத்துக்குப்பின் இந்திய வியாபாரம்" என்ற விஷயமாய் ஸர். ஆல்பெரெட் வாட்ஸன் என்ற வெள்ளையர் 'கிரேட்பிரிட்டனும் கிழக்கும்' என்ற பத்திரிகையில் விள்க்கியுள்ளார்.

"இந்திய முதலாளிகள் யுத்தத்துக்குப்பின் பிரிட்டிஷ் முதலாளிகளிடமிருந்து வியாபார ஆதிக்கத்தைத்தாங்கள் பெற்றுவிடலாமென்று எண்ணுவது மதியீனம்! பிரிட்டிஷ் முதலாளிகளிடம் இந்திய முதலாளிகளைவிட இந்தியர்களுக்கு நம்பிக்கை அதிகம்! தவிர இந்தியாவின் ஏற்றுமதி வியாபாரத்தின் பெரும்பாகம் பிருட்டனுடன். அதை மாற்றி இந்திய முதலாளிகள் தங்கள் இஷ்டம்போல் யாருடனும் வியாபாரம் செய்யலாமென எண்ணினால் அது ஏமாற்றத்தைத்தான் கொடுக்கும். தவிர கோடிக்கணக்கான முதல்போட்டு அஸ்திவாரம் பலமாகப்போட்டு இந்தியாவில் வியாபாரம் செய்யும் வெள்ளை வியாபார ஸ்தாபனங்களை அடக்க ஒடுக்க முடியாது. வெள்ளை முதலாளிகள் இன்னும் நாலாயிரம் லக்ஷம் பவுன் மூலதனத்தை இந்தியாவில் போட்டு அஸ்திவாரத்தை இன்னும் நன்றாக வலுப்படுத்தவேண்டும். அப்படிச் செய்தால் நம்மை அசைத்துத் திருப்ப முடியாது."

வெள்ளை வியாபாரிகளின் நோக்கத்தை இவ்வளவு ஸ்பஷ்டமாக விளச்கிக் காட்டிய வாட்ஸன்துரை அவர்களுக்கு இந்தியர்கள் பெரிதும் கடமைப்பட்டுள்ளார்கள்!

வங்காளத்தின் அதிர்ஷ்டம்!

சீமைச்சரக்கு மட்ட ரகமாருந்தாலும் இந்தியாவில் இறக்குமதியானவுடன் அலாதியான சிறப்பையும் மதிப்பையும் பெறுகிறது. யுத்தக் கோளாறுகளினால் மற்ற உபயோகமுள்ள சீமைச் சரக்குக்கள் இங்குவந்து சேருவதில் தட்டுத்தடங்கல்கள் ஏற்பட்டாலும் ஒரு சரக்கு மட்டும் தவறாமல், குறித்த காலத்தில் பறந்தாவது வந்து இங்கே குதித்துவிடுகிறது. இந்தச் சீமைச்சரக்கை நமக்கு அனுப்பிவைப்பதில் பிரிட்டிஷ் அரசாங்கம் விசேஷ சிரத்தை கொண்டுள்ளது. இப்படிப்பட்ட சரக்கு என்னவென்று \நினைக்கிறீர்கள்? வெள்ளை உத்தியோகஸ்தர்கள்தான்.

வைசிராய், கவர்னர்கள் இவர்களெல்லாம் அசல் சீமை வெள்ளையர்களாகத்தானிருக்க வேண்டுமென்பது ஆண்டவனது கட்டளை, அடிமை நாடுகளின் பாக்யம். ஒரு நிமிஷம் அல்லது ஒரு மணி, அதிகமாகப்போனால் சில மாதங்கள், ஒரு கருப்பன் தற்காகலிமாக, கவர்னர் உத்தியோகத்தைப் பார்க்கலாம். நிரந்தரமாக ஒரு கருப்பன் கவர்னர்போன்ற மிக உயர்ந்த உத்யோகத்திற்கு நியமிக்கப்பட்டுவிட்டால் எங்குப் பூகம்பமே ஏற்பட்டு இந்தியா அழிந்துவிடும்! கருப்பன் வெள்ளையனைவிட எவ்வளவோ திறமைசாலியாக இருக்கலாம். ராஜபக்தி வெள்ளையனைவிட வீசம் பங்கு அதிகம்கொண்டிருக்கலாம். ஆனாலும் கருப்பன் கூடாது. அடிமை நாட்டின் சின்னங்களை மாற்ற நினைப்பது மதியீனம்; முடியாத, நடவாத கார்யம்.

சமீபத்தில் திடீரென்று இவ்வித சீமைச் சரக்குக்களை அனுப்புவதில் மாறுதல் தோன்றியுள்ளது. பிரிட்டிஷ் அரசாங்க தொழிற்சாலைக்காரர்கள் யாது காரணம்பற்றியோ ஆஸ்திரேலிய சரக்கை நமக்கு அனுப்பியுள்ளார்கள். நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் அனுப்பிய சரக்கைப்பெற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். நேற்றுவரை கவர்னர்களாக அசல் சீமைத் துரைகளே நியமிக்கப்பட்டுள்ளார்கள். இப்பொழுது வங்காள கவர்னர் பதவிக்கு ரிச்சார்ட் கேஸி என்ற ஆஸ்திரேலிய வெள்ளையரை நியமித்திருப்பதின் மர்மமென்ன என்ற கேள்வி எங்கும் அடிபடுகிறது.

"ஆஸ்திரேலியாவில் கேஸி சில கூட்டத்தாருடன் சேர்ந்துகொண்டு பிரிட்டனுக்கு விரோதமாக நடந்துவந்தார். அங்கிருந்து நாஸூக்காக அப்புறப்படுத்தப்பட்டார். நடுக்கிழக்கில் அவருக்கு வேலையில்லை; திருப்பி அவரை ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பவும்

இஷ்டமில்லை. ஆகையால் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டார்"—இது சில விஷமிகளுடைய குயுக்தி வாதம்.

"ஆஸ்திரேலியாவைக் குஷிப்படுத்தவும், பிரிட்டன் பஸிபிக் அரங்கத்தை மறந்துவிடவில்லையென்பதை அமெரிக்காவுக்கும், ஆஸ்திரேலியாவுக்கும் விளக்கிக்காட்டவும்" என்று சில பத்திரிகைகள் கூறுகின்றன.

இன்னும் மனத்தில் தோன்றினவாறு கற்பனை சக்தி நிறைந்த பலவித காரணங்கள் சொல்லப்படுகின்றன.

நமக்குமட்டும் மேற்சொல்லிய காரணங்கள் சரியெனப் புலப்படவில்லை. கவர்னர் போன்ற உயர்ந்த உத்தியோகங்களை வகிக்க எவ்வித யோக்யதாம்சமாவது வேண்டியதில்லை. சீமை உத்தரவுகளை அப்படியே நிறைவேற்றக்கூடிய மனப்பான்மை வேண்டும். இந்திய விஷயம் யாதொன்றும் அறியாதவர், தெரியாதவர் என்ற ஒரு காரணத்தைக்கொண்டே கேஸி துரைக்குக் கவர்னர் உத்தியோகம் கிடைத்துள்ளது என்பதே நம்முடைய அபிப்பிராயம்!

கேஸி துரையின் யோக்ய தாம்சத்தைப்பற்றி ராய்டர் செய்தி நமக்குத் தெரிவிப்பதாவது:—"சில மாதங்களாக வங்காளத்தைப்பற்றிப் படித்துள்ளார். பஞ்ச நிலைமையை அறிவார். அவரது மத்திய கிழக்கு அனுபவம் வங்காளத்துக்குப் பயன்படும்."

புத்தகப் படிப்பினாலும், கேள்வி அறிவைக்கொண்டும் லக்ஷக்கணக்கான மக்களை அடக்கியாளும் விந்தை இந்தியாவைவைத் தவிர வேறு எந்த நாட்டிலும் நடக்காது. சீமையைப்பற்றிப் படித்துவிட்டதினால் இந்தியன் ஒருவனைச் சீமையில் அதிகாரம் செலுத்த நியமிப்பார்களா?

ஆனால் யார் வந்தால் நமக்கென்ன? மன மாறுதலில்லாமல் மனித மாற்றத்தைக் கண்டு ஏமாறும் காலம் மலையேறிவிட்டது!

புதிய கக்ஷி! உஷார்!

"வீரர் முப்பத்திரண்டு கோடி விளைவித்த பாரதமாதா"; "மன்னிய புகழ் பாரததேவி"; "பாரத சமுதாயம் வாழ்க" என்றெல்லாம் பாரதியார் இந்தியா தேசத்தைப்பற்றிப் பாடியுள்ளார். பாரதியார் தமிழர். தமிழ்நாட்டில் பிறந்தவர். தமிழன் என்பதிலும் பெருமை கொண்டவர். குறுகிய மனப்பான்மையை விட்டவர். பாரதநாடு விடுதலை அடைய வேண்டுமென்ற நோக்கங்கொண்டவரேயல்லாது தமிழ்நாட்டிற்குத் தனி சுயராஜ்யம் வேண்டுமென்று எண்ணினவரல்லர். அதனாலேயே

"முப்பதுகோடி ஜனங்களின் சங்க
முழுமைக்கும் பொது உடைமை
ஒப்பிலாத சமுதாயம்
உலகத்துக்கொரு புதுமை"—என்று

சொன்னார்.

இப்பொழுது நம் நாடு இருக்கும் நிலையில் ஒரு கக்ஷிக்குத்தான் இடமுண்டு. பாரத நாட்டின் விடுதலைக்குப் பாடுபடும் கக்ஷிதான் அது. அந்த அரிய சேவை காங்கிரஸ் சபையால்தான் முடியும். ஏன்? காங்கிரஸ் இன்று நேற்று தோன்றினதன்று. பணக்காரர்களின் கக்ஷியன்று. முதலாளிகளின் குதுவாதன்று. சுயநலக்காரர்கள் ஆரம்பித்தது அன்று. நேற்றுவரை பிரிட்டிஷ் சர்க்காராலும், உலகத்தாலும் 'பெரியதான ராஜீய கக்ஷி' (Greatest Political Party)யெனப் பெருமை அளிக்கப்பட்டது. இன்னும் மக்களது நம்பிக்கைக்குப் பாத்திரமான கக்ஷி அது ஒன்றுதான்.

ஆகையால், காங்கிரஸ் மகாசபைக்கு ஆதரவு தந்து அதை இன்னும் அதிகமாக வலுப்படுத்த வேண்டியதே மக்களுடைய கடமை. தமிழனுடைய கடமையும் அதுவே.

இந்த உன்னத லக்ஷியத்தை மறந்து தான் சுயநலக்காரர்கள் சிலர் புதிய கக்ஷிகளை ஆரம்பித்தார்கள். அந்தக் கக்ஷிகள் துர்மரணமடைந்ததில் ஆச்சரியமில்லை. இன்று ஜஸ்டிஸ் கக்ஷி சென்னை மாகாணத்தில் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துபோனதற்குக் காரணம் அதனுடைய குறுகிய நோக்கம்தான். ஜமீன்தார்களும், செல்வம் படைத்த பலரும் அந்தக் கக்ஷியிலிருந்தார்கள். ஆதரவு அளித்தார்கள். பிரயோஜனம்? மக்களது மனதைக் கவரவில்லை, ஆதரவுமில்லை. அதனால் அந்தக் கக்ஷியின் தலைவர்கள்கூட மறக்கப்பட்டுவிட்டார்கள்.

சரித்திர உண்மை இவ்வாறிருக்கப் புதிய கக்ஷி ஒன்றை ஆரம்பிக்க முயல்வது மன்னிக்கமுடியாத குற்றம்!

"தமிழ்ராஜ் கக்ஷி" என்பதாகக் கக்ஷியொன்றைச் சிலர் ஆரம்பித்துள்ளார்கள். தமிழர்களுக்குத் தனியாகச் சுயராஜ்யம் கொண்டுவர நோக்கமாம். பழைய ஜஸ்டிஸ்கக்ஷியின் கொராடாக்கள் பலர் இதில் உள்ளனர். தமிழர்களை ஒன்றுபடுத்தப்போகிறார்களாம்.

இந்தக் கக்ஷி பிழைத்து வாழுமென்று சொல்ல முடியாது. காங்கிரஸ் அபிமானம் தமிழ் நாட்டில் இன்றும் தலை தூக்கி நிற்கையில் எப்படிப் புதிய கக்ஷி உயிர்வாழ முடியும்?

இவ்வித கக்ஷிகளுக்கு நாட்டில் வேலையில்லை. தமிழன் தனியாக வாழமுடியாதென்பதை அறிவாளிகள் ஒப்புக்கொள்வார்கள். பாரதநாட்டில் எந்தப் பகுதியினரும் தனித்து வாழமுடியாது. ஏன்?

"எல்லோரு மோர்குலம் எல்லோரு மோரினம்
எல்லோரு மிந்திய மக்கள்
எல்லோரும் இந்நாட்டு மன்னர்!"

மந்திரி சபை நினைவுகள்

டி. சே. சௌ. ராஜன்

●

1937ஆம் வருஷத்தில் ஜுலைமாதம் 11-ஆந் தேதி வழக்கம்போல விடியற் காலையில் உடற்பயிற்சி செய்துகொண்டிருந்து, பிறகு எனது அறையைவிட்டு வெளி வந்தேன். வந்ததும் சாந்தமும், புன்சிரிப்பும் சதா தாண்டவமாடிக்கொண்டிருக்கும் முகத்துடன் எனது நண்பர் ஸ்ரீ நரசிம்மனைக் கண்டேன். எதிர்பாராதவர் திடீரென வந்ததால் எனது மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. ஸ்ரீ ராஜாஜி அவர்களிடமிருந்து எனக்கு ஓர் முக்கியமான கடிதத்தை வாங்கிக்கொண்டு காலை ரயிலில் வந்ததாக தெரிவித்தார். ஸ்ரீ நரசிம்மன் ஸ்ரீ ராஜாஜியின் புதல்வன். சிறுவயதிலேயே தாயை இழந்துவிட்டதால், தமது தந்தையையே அன்னையாகக்கொண்ட இளைஞர். "தபாலில் போடக் கூடாத ஓர் கடிதம், அண்ணா இதை நேரில் கொடுக்கும்படி சொன்னார். நீங்கள் இதைப் படித்து யோசனை செய்து தங்களது முடிவைத் தந்திமூலம் உடனே தெரிவிக்கும்படி சொல்லியிருக்கிறார்" என்றார். கடிதத்தைப் படித்தேன். மனம் திடுக்கிட்டது. கடிதம் சிறியதாகவிருந்தாலும் விஷயம் பெரியது. "சில நாட்களாகச் சென்னை மாகாண மந்திரி சபை கூட்ட முயன்று வருகிறேன். என்னுடன் ஒத்துஉழைத்துப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடியவர்களைத் தெரிந்தெடுப்பது மிகவும் கஷ்டமாயிருக்கிறது. இந்த மந்திரி சபையில் நீயும் ஒருவனாகச் சேருவதற்கு மனமுண்டா? ஆழ்ந்த யோசனைக்குப் பிறகுதான் இந்தக் கடிதம் எழுதத் துணிந்தேன். பதவி சுமார் ஆறுமாத காலம் நீடிக்கக் கூடும். சம்பளம் மாதம் ஐந்நூறு ரூபாய்தான். உனது சம்மதத்தைத் தந்திமூலம் உடனே தெரிவிப்பதோடு, நேரில் மறு ரயிலில் வந்துசேர்ந்தால் நலமாகவிருக்கும்." இதுதான் கடிதத்தின் முக்கியபாகம்.

1936ஆம் வருஷத்துடன் எனது அரசியல் வாழ்வு ஓர் முடிவை அடைந்துவிட்டது. அதற்கு நானேதான் காரணம். நான் வேண்டுமெனச் செய்த குற்றத்தை வேறு எந்த வகையிலும் நீக்க முடியாததால், காங்கிரஸ் மூலம் செய்து வந்த அரசியல் சேவையைக் கைவிட்டேன். எனது தொழில் எனது தேவைக்கு மீறிய பொருள் அளித்துவந்தது. எனினும் மனதிற்கு ஆறுதல் கிடையாது.

இந்த மந்திரிசபைக்குத்தான் என்னபோட்டி! எவ்வளவு சிபார்சுகள். ஜாதியின் பிரதிநிதித்துவங்கள். மதங்களையொட்டிய கட்சிகள். தாழ்த்தப்பட்ட ஜாதியாகையால் அதற்குத் தனிப்பிரதிநிதி. உயர்த்தப்பட்ட வகுப்பு, அதனால் அதற்கு வேறுபிரதிநிதி. இம்மாதிரி பார்க்கப்போனால் சட்டசபைமெம்பர்கள் ஒவ்வொருவரும் யாதாகிலும் ஒரு காரணத்தினால் மந்திரி சபையில் இடம்பெற நியாயமுண்டு. ஆனால் மந்திரி சபைக்கு ஓர் அளவுமுண்டு. அதில் எவ்வளவு பெயர்களைச் சேர்க்கமுடியுமோ அவ்வளவு பெயர்களை அதிகப்படியாகச் சேர்க்கவும் திட்டம்போட்டார் ராஜாஜி. ஆனால் சுமார் இருபது வருஷகாலம் ஒத்துழையாமைத் திட்டத்தின் பயனாக விலகிநின்ற காங்கிரஸ், முதன் முதலாக நிர்வாகப் பொறுப்பு ஏற்கும் நாளில் சட்டசபை அங்கத்தினனாகக்கூட இல்லாதவன், தேர்தல் காலங்களில் விலகிநின்றவன், காங்கிரஸ் ஒழுங்கை மீறியவன், இப்படிப்பட்ட என்னை அவர் அழைத்துப் பதவி வகிக்கக் கூப்பிட்டது எனக்கு வியப்பை உண்டாக்கியது.

என்னிடமுள்ள அன்பு மிகுதியால் செய்தாரா அல்லது நான் அவருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாகவிருக்கலாம் என்று எண்ணினாரா,

அல்லது சுகாதார இலாகாவிற்குப் பொருத்தமானவனென்று நினைத்தாரா அது எனக்குத் தெரியாது. பலதடவை சத்யாக்கிரகம் செய்து, ஏராளமான வருவாயை இழந்து; அல்லற்பட்டுக் கடைசியாக அரசியல் தளைகளிலிருந்து விலகிக்கொண்டு வயது முதிர்ந்த காலத்தில் பசிக் கவலைக்கிடமில்லாமல் சிறிது பொருளைச் சேமித்துவைக்கும் முறையில் ஈடுபட்டஎனக்குப் போதும் போதாதுமான சம்பளத்தில் குறிப்பிட முடியாத ஓர் குறுகிய காலத்திற்கு உயர்ந்த பதவியை வகிப்பது கவலைக்கிடமில்லாமல் போகவில்லை. ஆனால் ராஜாஜியின் மனோதிடத்தைக்கண்டு திகைத்துவிட்டேன். தாம் செய்யும் திட்டம் பலனைக்கொடுக்கும் என்ற முடிவான எண்ணம் மனதில் வேரூன்றியிருந்தாலொழிய அவர் என்னை கூப்பிட்டிருக்க முடியாது என்ற முடிவிற்கு வந்தேன். அன்று சாயங்காலத்திற்குள்ளாகச் செய்யக்கூடிய ஏற்பாடுகளைச் செய்துவிட்டு அன்றிரவே நரசிம்மனுடன் சென்னைக்குப் புறப்பட்டேன். நான் சென்னை சென்றது எனது வீட்டார்களைத்தவிர மற்றவர்களுக்குத் தெரியாது. அன்று காலையில் ராஜாஜியுடன் ஒரு மணி நேரம் பேசியபிறகு பதவியை ஏற்க முடிவுசெய்தேன். அதற்கு மறுநாளே மந்திரியுமாகிவிட்டேன். பதவி வகித்த பலன் அந்த வாரத்தில் ஆறு நோயாளிகளுக்கு சஸ்திர சிகிச்சை செய்ய ஏற்பாடு செய்திருந்ததைச் செய்யமுடியாமல் போயிற்று.

சட்ட சபை மெம்பர்களில் பெரும்பாலோர் என்னுடன் தேசிய இயக்கத்தில் தோழர்களாக உழைத்தவர்கள். எனினும் கனவில்கூட நான் ராஜாஜியின் மந்திரி சபையிலிருக்கக் கூடுமென அவர்கள் நினைக்கவில்லை. என்னுடைய சேர்க்கையினால் ராஜாஜியின் செல்வாக்கு எவ்வளவு பாதிக்கப்பட்டதென எனக்குச் சொல்லமுடியாது. நான் ராஜாஜியாகவிருந்தால் அவர் செய்த துணிகரமான வேலையை நான் செய்திருக்க முடியாது. அவர் எனது அரசியல் வாழ்விற்குப் புத்துயிர் அளித்தார். ஆனால் அன்றோடு எனது தொழிலும் முடிவடைந்து விட்டது. தடைபட்டு தடைபட்டு, தப்பிப் பிழைத்து நான் கையாண்ட வைத்திய முறையும், பொருளீட்டலும் நின்று போனதோடு இன்று உணவு உண்டாக்கும் உழைப்பாளியாக என்னைக் கிராமவாழ்விற்குக் கொண்டுவந்து நிறுத்தியது. இந்த மாறுதலால் இன்று எனக்கு யாதொரு மனக்குறைவும் உண்டாகவில்லை.

தேசத்தொண்டு ஆற்றுவதற்கு ஓர் அரிய சந்தர்ப்பத்தை எனக்கு அளித்த ராஜாஜி அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டவனாகி விட்டேன். அவரது தயையையும், பெருந்தன்மையையும், தூயமனப்பான்மையையும் நான் என்றென்றைக்கும் மறக்கமுடியாது. எனது மனதில் பன்முறை தியாக உணர்ச்சியையும், விடாமுயற்சியையும் வேரூன்றச் செய்தவரும் அவரே. இரண்டரை வருஷகாலம் நெருங்கிப் பழகிய பிறகு அவரிடத்து எனக்கு என்றும் அழியாத பக்தியும், மரியாதையும் நிலைத்தன. இது எனது வாழ்வில் ஓர் பெரிய லாபம்.

1937-ஆம்வருஷ ஜுலை-மீ 14-ஆம் தேதியன்று சென்னையில் காங்கிரஸ் மந்திரிசபைவேலைசெய்யத்தொடங்கியது. அன்று முற்பகல் மந்திரிகள் பதின்மரும் சென்னை மாகாண கவர்னர் பிரபுவின் முன்னிலையில் சர்க்கார் மாளிகையில் ராஜபக்திப் பிரமாணம் செய்தோம். அன்றிரவு 7½-மணிக்கு என்னைச் சென்னை மேல் சபைக்குக் கவர்னர்பிரபு மெம்பராக நியமனம் செய்தார். அதனால் நான் சட்டசபைத் தேர்தலுக்கு நிற்கவேண்டிய தொல்லையும் ஒழிந்தது. ஒருமாகாண கவர்னரைத் தனியாகச்சந்தித்தது இதுதான் முதல்தடவை. கவர்னர் மாளிகையை நான் வெகு தூரத்திலிருந்து பார்த்தது தவிர உள்ளே போனதில்லை. மவுண்ட்ரோட் பக்கத்திலுள்ள வாசலின் இருபுறமும் குதிரை மீதேறிக் காவல்புரிவதற்காகவோ அல்லது அலங்காரத்திற்காகவோ நிறுத்தப்பட்டிருக்கும் இரு இந்தியச் சிப்பாய்களைத் தாண்டி உள்ளே போகும்பொழுது ஒரு புது உணர்ச்சி உண்டாயிற்று. நான் மந்திரியாக உள்ளே போகிறேன் என்கிற ஞாபகம் என்னை விட்டொழியவில்லை. கவர்னர் மாளிகை பெரிய தோட்டத்தின் மத்தியில் அழகாக அமைக்கப்பட்டிருந்தபோதிலும், அது பழையகாலத்துக் கட்டிடம். எனது வருகையை முன்னதாகவே அறிவித்துக் குறிப்பிட்ட நேரத்தில் நான் வந்தவுடன் கவர்னருடைய அந்தரங்க காரியதரிசி என்னை வரவேற்று ஓர் ஆசனத்திலமரச் செய்தார். நான் வந்த செய்தியைக் கவர்னருக்குத் தெரிவித்துவிட்டு, என்னை மேலே அவருடைய அறைக்குக் கூட்டிச்சென்றார். கை குலுக்கி வரவேற்று என்னிடம் சிறிதுநேரம் பேசிய பிறகு சட்டமியற்றும் மேல் சபையில் அங்கத்தினராக்கி அதற்குரிய பிரமாணம் செய்யும்படி சொன்னார். எனது முதல் அபிப்பிராயம் கவர்னர் கள்ளம் கபடு அற்ற பெரிய மனிதன் என்பதுதான், கடைசிவரை அதே அபிப்பிராயம்தான். பழகும்பொழுது அவரிடம் அதிகாரத் தன்மை வெளிவராமல் மனிதத் தன்மை மிகுந்திருந்ததை அறிந்தேன். ராஜாஜி பொறுப்பு ஏற்பதற்குமுன் அதிகார முறையில் சிக்கலான இடையூறுகள் தலைக்கிளம்பாவண்ணம், தெளிவுபடுத்துவதற்காகச் சுமார் ஆறு மாதகாலம்வரை இந்தியா மந்திரி, வைஸ்ராய், இவர்களோடு வாதாடி; கடைசியாக மந்திரி சபையை கூட்டியது தெரிந்த விஷயம். வங்காளம், சிந்து முதலிய மாகாணங்களில் சமீபத்தில் கவர்னர்களால் மந்திரி சபைகளை மாற்றவும், கலைக்கவும் ஏற்பட்ட நிகழ்ச்சிகளிலிருந்து; ராஜாஜி எவ்வளவு முன்யோசனையுடன் கூடி, கவர்னருக்கும், மந்திரிகளுக்கும் உள்ள முறையை ஒழுங்குபடுத்தினர் என்பது நன்கு விளங்கும்.

1935-ஆம் ௵ கிடைத்த அரசியல் அமைப்பு நமது நாட்டினர் கோரியதல்ல. மூன்று வட்ட மேஜை மகாநாடுகளை ஏராளமான செலவில் லண்டனில் கூட்டி, பிரதிநிதிகளை ஆங்கில ஸர்க்கார் தாங்களே பொறுக்கி எடுத்துச் சீமைக்கு வந்த இந்தியர்களை ஒருவரை ஒருவர் மோதவிட்டு ஜாதிமதப் பூசல்களைக் கிளப்பி ஒற்றுமையான ஓர் திட்டம் வகுக்கமுடியாமல் செய்துவிட்டு, தாங்களாகவே ஓர் திட்டத்தைத் தயாரித்தார்கள். அதிகாரத்தை மாகாணங்களில் பொது ஜனங்களுக்கு மாற்றும் தோரணையில் கவர்னருக்கு ஏகபோகப்பொறுப்பைச் சட்டபூர்வமாக உண்டாக்கிவிட்டார்கள். இங்கிலாந்தில் அரசியல் முறையில் மன்னருக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பை ஒத்தது எனக் கவர்னர்களைக் குட்டி மன்னர்களாகச் செய்துவிட்டார்கள். உண்மையில் மந்திரிகள் ஆலோசனையாளர்களே. ஆனால் பொது மக்களின் பெயரால் ஆட்சி நடத்தும்பொழுது மந்திரிகளின் பொறுப்பிலுள்ள விஷயங்களில் கவர்னர் தலையிடக்கூடாது என்பதான ஓர் வழக்கத்தையொட்டி நிர்வாகம் நடைபெற வேண்டுமென்பதற்காக ராஜாஜி பாடுபட்டார். கவர்னர் எர்ஸ்கின் பிரபு இருந்தவரையிலும், காங்கிரஸ் மந்திரி சபையிருந்தவரையிலும் இந்த ஒப்பந்தம் சரிவர நடந்துவந்தது. ஆனால் இதிலும் பலவித சங்கடங்கள் நேர்ந்தன. அநேக விஷயங்களில் வைஸ்ராய்க்கும், இந்திய மந்திரிக்கும் நடுவில் ஓர் தபால்பெட்டி போலவே கவர்னர் நடக்கவேண்டி இருந்தது. அரசியல் திட்டம் வகுத்தவர்கள் நல்ல கைதேர்ந்த சட்ட நிபுணர்கள். மக்களை அடக்கி ஆள்வதற்கு உண்டான சக்தியை முற்றிலும் தங்கள் வசமிருக்கும்படி செய்துகொண்டு, பல தொல்லைகளுக்கும், கஷ்டங்களுக்கும் பொது மக்கள் மனதில் மந்திரிகள் காரணமாகும்படி தோற்றுவிக்கும்படியான முறையில் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு ஒரு உதாரணமே போதுமானது. ஐரோப்பிய, ஆங்கிலேய அதிகாரிகளை நீக்கவோ, அவர்களது ஊதியத்தைக் குறைக்கவோ, அவர்களை வைத்திய இலாகாவில் ஓர் ஜில்லாவிலிருந்து மற்றொரு ஜில்லாவிற்கு மாற்றுவதற்கும்கூட, மந்திரிக்கு அதிகாரம் கிடையாது. ஆனால் இந்த இலாகாவின் பொறுப்பு முழுதும் மந்திரியைச் சார்ந்தது. இந்த இந்த ஜில்லாக்களில் ஆங்கிலேய வைத்தியர்கள் இருக்கவேண்டுமெனச் சீமையிலிருந்து இந்தியா மந்திரி உத்தரவு பிறப்பித்திருக்கிறார். இங்கிருக்கும் வெள்ளை ஐரோப்பியர்கள் மந்திரியின் கீழ் வேலை பார்க்கவேண்டும். இந்த வைத்தியர்கள் பிசகாக நடந்தால், அந்த இடத்திற்கு எவ்வளவு கெட்டிக்கார கறுப்பு அல்லது வெளுப்பான இந்தியராலும் போடக்கூடாது. இம்மாதிரியான எண்ணற்ற சிக்கல்களோடு பொருந்தியது மாகாண ஆட்சிமுறை.

சென்னை மாகாண ஆட்சியின்கீழ் வேலைசெய்யும் ஆங்கிலேயர் சுமார் நூறு பெயர்களிருக்கலாம். இந்த நூறு பெயர்களுக்கு எட்டு ஜில்லாக்களில் மாதம் சுமார் ஆயிரம் ரூபாய் சம்பளத்திற்குக்குறையாமல் வெள்ளைக்கார டாக்டர்கள் இருக்கவேண்டும். இந்த வெள்ளைக்காரர்கள் ஜில்லா அதிகாரத்திலுமிருக்கவேண்டும். இவர்களிருக்கும் இடங்கள் நியாயமாக நமது நாட்டினருக்குக் கிடைக்க வேண்டியது. வெள்ளைக்கார டாக்டர்கள் சமீபத்திலில்லாவிட்டால் அவர்கள் எங்கே இருக்கிறார்களோ அந்த இடத்திற்குச் சர்க்கார் செலவில் ஆங்கிலேய நோயாளிகள் போகவும், போக முடியாவிட்டால் சர்க்கார் செலவில் ஆங்கில டாக்டர்களைத் தாங்களிருக்குமிடத்திற்குத் தருவிக்கவும் அதிகாரமுறையில் சலுகை காட்டப்பட்டு வருகிறது. இவ்வளவு வசதிகளும் செய்திருந்தும்கூட எட்டு ஜில்லாக்களில் ஆங்கில டாக்டர்கள் இந்த நூறு பேர்வழிகளுக்கு வைத்தியம் செய்வதற்காக வைத்திருக்கவேண்டுமெனக் கட்டாயமான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனுடைய நுட்பம் ஒன்றே ஒன்றுதான். "ஆங்கில நோயாளிகளுக்கு ஆங்கில டாக்டர்கள்தான் வைத்தியம் பார்க்கவேண்டும். இதனால் நமது மக்களுக்கு எவ்வளவு இடையூறுகள் நேரிடினும், அதைப் பொருட்படுத்தக்கூடாது." அடிமைத்தனத்தின் தளைகள் எவ்விதம் நமது வாழ்க்கையில் அரசியல்மூலம் ஊடுருவிச்சென்று வருகின்றனவென்பதற்கு இதுபோன்ற நிகழ்ச்சிகள் எண்ணற்றவை. சட்டபூர்வமாகவே ஏற்பட்டவை பெரும்பாலானவை. மற்றவைகள் இந்தியா மந்திரியின் உத்தரவின்பேரில் வழங்கப்பட்டு வருகின்றன. அரசாங்க அமைப்பு, திட்டங்கள் எல்லாம் வெகுநாட்களாக யதேச்சாதிகாரத்தின் முறையில் வகுக்கப்பட்டன. 1919-ஆம் வருஷத்தில் வகுக்கப்பட்ட திட்டத்தின்கீழ் சில இலாகா இந்தியர்களின் தலைமையின்கீழ் மாற்றப்பட்டன. 1935-ஆம் ௵ சட்டப்பிரகாரம் எல்லா இலாகாக்களும் மாகாணங்களில் இந்தியர்கள் கைக்கு மாற்றப்பட்டன. இந்த அரசியல்முறைப் பொறுப்பு, சர்வாதிகாரத்துடன் கவர்னர் ஆட்சியாக அமைக்கப்பட்டு, சட்ட சபைகளுக்கு உத்தரவாதமுள்ள மந்திரிகளின் சார்பில் விடப்பட்டது. ஒருபுறம் சட்ட சபைகளுக்குப் பதில்சொல்லும் பொறுப்பு மந்திரிகளுக்கு வந்தது. நிர்வாகத்தை மக்களுக்கு லாபகரமான முறையில் மாற்றி அமைக்கமுடியாத பலவித நிபந்தனைகளுக்கும் உத்தரவுகளுக்கும், நெடுநாளாகக் கையாளப்பட்ட வழக்கத்திற்கும் மாறுபடாமல் நடத்தவேண்டிய அவசியமும் மந்திரிகளுக்குப் புதுத் திட்டத்தில் சேர்ந்தது. இந்தத் திட்டத்தின்கீழ் ராஜாஜியின் மந்திரிசபை வேலை துவக்கியது.

மந்திரி சபை கூட்டி வேலையில் அமர்ந்த நடவடிக்கைகள் எனக்குப் புதியனவாக இருந்தன. பகல் 11 மணிக்குக் கவர்னர் மாளிகையில் ராஜபக்திப் பிரமாணம் செய்தவுடன் எங்களுக்கு உத்யோகமுறையில் வேலை ஆரம்பமாயிற்று.

சென்னை சர்க்காரின் பிரதம காரியதரிசி எங்
களைக் கவர்னர் மாளிகையினின்று கோட்டை
யிலுள்ள கார்யாலங்களுக்கு அழைத்துவந்து
அங்கிருக்கும் அறைகளில் எங்களுக்கு எந்
தெந்த அறைகள் பிடித்தமாக இருக்குமோ
அவைகளை வைத்துக்கொள்ளும்படி ஒவ்வொ
ன்ருகத் திறந்து காண்பித்தார். நாங்களும் அவ்
வாறே வைத்துக்கொண்டோம். பிறகு எங்கள்
ஒவ்வொருவரிடமும் இரண்டு சாவிகளை ஒரு
கயிற்றில்கட்டி, இதை நீங்கள் வெகு ஜாக்கிர
தையுடன் வைத்துக்கொள்ளவேண்டும். சர்க்
கார் காரியதரிசிகளிடமிருந்து மந்திரிகள் பார்
வைக்கு வரவேண்டிய பல ரகசிய தஸ்தாவே
ஜிகள் பெட்டிகளில் பூட்டப்பட்டு அனுப்பப்
படும். இந்தப் பெட்டிகளின் சாவியின் ஜோடி
அந்தந்த மந்திரிகளுக்கு ஏற்பட்ட காரியதரிசி
களிடத்திலிருக்கும். அவர்களால் பூட்டி அனுப்
பப்படும் பெட்டிகளைத் திறக்கும் மறு சாவிகள்
இவை என்று எங்களிடம் கொடுக்கப்பட்டன.
"இந்த இரண்டு சாவிகளையும் உங்கள் கையை
விட்டு யாரிடத்திலும் கொடுக்கக்கூடாது"
என்றஎச்சரிக்கையும் எங்களுக்குக்கொடுக்கப்
பட்டது. இதை வேத வாக்கியமாகவே நான்
ஏற்றுக்கொண்டு வேலையை ராஜிநாமா
செய்யும் வரையில் வேறு ஒருவரிடத்திலும்
கொடுக்கவில்லை. ஆனால் இந்தப் பெட்டிகளில்
வரும் ரகசியக் காகிதங்கள், உத்தரவுகள், நட
வடிக்கைகள் வெளியிடும்வரையில் எவ்வளவு
தூரம் பிறருக்குத் தெரியாமல் இருந்தன என்
பதுவேறு விஷயம். அதைப்பற்றிப் பின்பு தெரி
விக்கிறேன். ஒவ்வொரு மந்திரியும் தமக்கென
இரண்டு நம்பிக்கையுள்ள குமாஸ்தாக்களை
நியமனம் செய்துகொள்ளலாமென்றும், தங்
களுக்கு இஷ்டமும் நம்பிக்கையுமுள்ளவர்
களான ஆறு பியூன்களும் வைத்துக்கொள்ள
லாமென்றும், அப்படி தகுந்தவர்கள் கிடைக்கா
விட்டால் சர்க்கார் காரியாலயத்திலிருந்தே
தேவையானவர்களைக் கொடுக்க முடியுமெ
ன்றும் சொல்லிவிட்டுச் சர்க்கார் பிரதம காரிய
தரிசி விடைபெற்றுக்கொண்டு சென்றுவிட்
டார். நான் எனது அறையைவிட்டு வெளியே
சென்றதும் வரிசையாக ஐம்பது பியூன்கள்
உடை தரித்துக்கொண்டு வராந்தாவில் நின்று
கொண்டிருந்தார்கள். அவர்கள் எல்லோரும்
பழைய மந்திரிகளிடத்து வேலைபார்த்தவர்கள்.
நாங்கள் அவர்களை அமர்த்திக்கொள்ளுகி
ருேமா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்
வதற்காகக் காத்திருந்தார்கள். எனது அறை
யின் பின்புறத்து வழியாக மிக்கபணிவுடன்
எட்டி எட்டி ஸலாம் செய்துகொண்டு ஒருவர்
என்னிடம் பேச விரும்பினுர். அவர் வெகு வரு
ஷங்களாக மந்திரிகுமாஸ்தாவாக வேலைசெய்த
வர். என்னிடத்தில் நான் விரும்பினுல் தானிருப்
பதற்குப் பிரியப்படுவதாகச் சொன்னதின்
பேரில் அவரை எனது குமாஸ்தாவாகவைத்துக்
கொள்ள முடிவுசெய்தேன். "பியூன்கள்
கூட்டம் இவ்வளவும் நமக்குத் தேவையா"
என்று புன்சிரிப்புடன் ராஜாஜி கூறிவிட்டுத்
தமக்கு மூவர் போதுமென்றும் சொல்லிவிட்
டார். நான் எனது குமாஸ்தாவிடம் எவ்வளவு
நபர்கள் அவசியமெனக் கேட்டபொழுது
குறைந்தது ஐவர் தேவையாக இருக்குமெனச்
சொன்னுர். எனினும் நாலு பியூன்கள் போது
மென முன் மந்திரிகளிடத்து வேலையிலிருந்த
நால்வரை எடுத்துக்கொண்டேன். எனக்குத்
தேவையான மற்ருெரு குமாஸ்தாவை நான்கு
வாரத்திற்குப் பிறகுதான் அமர்த்திக்கொண்
டேன். எனது குமாஸ்தாவோடு சற்றுநேரம்
பேசியபின், நான் வேலையை அன்றே செய்ய
முற்படவேண்டுமென்றும், இல்லாவிட்டால்
பிறகு வேலை பல சேர்ந்து செய்வது கஷ்டமாக
இருக்குமென்றும் தெரிவித்தார். வேலையைத்
தொடங்குவதற்கு முன்பாக ராஜாஜி எனக்குக்
கூறிய புத்திமதி ஒன்றை நான் மறக்கவில்லை.
"சர்க்கார் காரியதரிசியிடமிருந்து வரும் சகல
காகிதங்களையும் சரிவரப் படித்து உத்தரவு
போடவேண்டும். சந்தேகம் ஏதாகிலும் இருப்
பின் காரியதரிசியை வரவழைத்து எல்லா விப
ரங்களும் அவரிடம் தெரிந்துகொள்ளவேண்
டும். காகிதங்கள் எப்படி பைசல் செய்யவேண்
டியதோ அதைக் குமாஸ்தாவிடம்காட்டி அவர்
அபிப்பிராயம் கேட்கவோ அல்லது தெரிந்து
கொள்ளவோ கூடாது. எல்லாக்கட்டுக்களையும்
நீங்களே நேரில் பார்த்து விஷயம் தெரிந்து
கொண்டு வேலை செய்யவேண்டும்". என்று
சொன்னுர். அன்று முதல் வேலையை விடும்
வரையில் அந்த எச்சரிக்கையைத் தவருது
கவனித்து வேலை பார்த்துவந்தேன். நான்
எனது ஆசனத்தில் அமர்ந்து அரைமணி நேர
மான பிறகு என் உத்தரவின்பேரில் பெட்டி
களும் எனது அறைக்கு வர ஆரம்பித்து
விட்டன.

அம்மாஞ்சியின் :: :: அபிப்பிராயங்கள்

“ ராமையா ”

—:o:—

சில வருஷங்களுக்குமுன் ஆந்திர மாகாணக் கிளர்ச்சி நடந்துகொண்டிருந்தபோது ஆந்திர பிரமுகர் ஒருவர், மதராஸ் பட்டணத்தைத் தம்முடைய பிரதான பட்டணமாக்கிக்கொள்ளும் பக்ஷத்தில், கூவம் ஆற்றங்கரைக்கு வடக்கே ஆந்திர பாகம் என்றும் தெற்கே தமிழ்ப்பாகம் என்றும் பிரிக்க வேண்டும் எனவும் அமூலித்தார். அந்தப்பிரமுகர் தற்சமயம் வெளிக்கிளம்ப சந்தர்ப்பப் படாமலிருப்பதால்போலும், அந்த அமூல் ஒதுக்கப்பட்டுத் தமிழ் இசை இயக்கத்தினர் கூவம் ஆற்றுக்கு வடக்கே தம்முடைய கச்சேரிகளை நடத்தவும், ஆற்றுக்குத்தெற்கே தெலுங்கு முதலிய அரோசக பாஷைகளில் உள்ள சங்கீத இயக்கத்தினர் தம்முடைய கச்சேரிகளையும் ஸதஸ்களையும் நடத்தவும் தீர்மானித்தனர். இது என்ன பைத்தியக்கார பட்டணம் என்கிறான் அம்மாஞ்சி! ஆந்திர மாகாண பிரஸ்தாபம் நடந்தபோது, கொத்தவால் சாவடி கோமுட்டிகள், சைனு பஜார் நாயுடுக்கள், கடங்குத்தெரு பொந்திலியன்கள், காலே அரைக்கால் தெலுங்கு வார்த்தை தெரிந்த கம்பளிப்பூச்சிகள் எல்லாம் சேர்ந்து கூவத்துக்கு வடக்கே எங்களுடைய ஜண்டாமரம் என்று பிரமாதமாகப் பேசித்துகளே, அதுகள் எல்லாந்தான் தமிழ் இசை மகாநாட்டுக்குத் திரண்டு உருண்டு சென்று கரகோஷம் செய்ததுகளாம்—தெலுங்குப் பயல்களுக்கும் நமக்கும் எப்படி ஸார் ஒத்துக்கும், என்றும், கோங்கூர் என்றும், வடக்கத்தியன் எனவும், ஆந்திரவாடு என்றும் ஏளனம் செய்துகொண்டிருந்த தஞ்சாவூர் ஜில்லா புகையிலைப்பேர்வழிகள் இப்பொழுது மயிலாப்பூரில் கூட்டம் போட்டு பாஷையாவது, புண்ணாக்காவது, நிஜ சங்கீதத்துக்குப் பாஷையுண்டோ, என்று கேட்டுக்கொண்டிருந்தால் விஷயம் சரிப்பட்டு வருமா? வருஷத்தில் ஒருமுறை மயிலாப்பூர் சுந்தரேச்வரர் ஹாலில் பத்துநாள் கூட்டம் போட்டு, முதல் நாளில் புகைப்படம் பிடித்துக்கொண்டு, கடைசி நாளில் இட்லிபார்டி வைத்துவிட்டு, நடுவேயிருந்த நாட்களில் கச்சேரிகளையும், சங்கீதப்பேச்சுக்களையும் நடத்தி, சும்மா இருந்துகொண்டிருந்த, சஞ்சீவராயருக்கு ஒரு பட்டத்தையும் கொடுத்து, பிருதுவையும் மாட்டி, பத்து வெள்ளிக்கிண்ணங்களையும், அரை டஜன் மெடல்களையும் குழந்தைகளுக்குக்கொடுத்துவிட்டால் கர்னாடக சங்கீதம் நிலைநின்றுவிடுமா? பாக்கி 355 நாட்கள் —அல்ல, இந்த வருஷத்தில் 356 உண்டு— இவர்கள் நித்திரையும் ஸ்வப்னமும் ஆகவல்லவோ இருப்பார்கள்! வித்வான்கள் இந்த 356 நாட்களிலும் உஞ்சிவிருத்திசெய்வதா, ஈரத்துணிகளை வயிற்றில் மடித்துப்போட்டுப் பட்டினி கிடப்பதா, அல்லது ஏ. ஆர். பி. ஸர்விஸில் சேருவதா? ஸ்ரீ தியாகப்பிரும்ம ஆராதனை மஹோத்ஸவ ஸபையாரைப்பற்றி ஒன்றும் சொல்வதற்கில்லை; அவர்களுடைய கருத்து முக்யமாக அய்யர்வாளுடைய ஞாபகம் பழுதுபடாமலிருக்க வேண்டுமென்பது; அதற்காக அவர்கள் யுத்த பரிஸ்திதியை வழுவி இப்பொழுது செய்துகொண்டிருக்கும் காரியங்களே பெரிதாகக் கருதவேண்டும். ஆனால் மியூஸிக் அகாடமி என்ற பெரியபேர் வைத்துக்கொண்டு சிறியகாரியம் செய்பவர்கள்தான் ஆழ்ந்த யோசனைகள் செய்யவேண்டும்! யோசனைகள் மாத்திரம் அல்ல, காரியங்களும் செய்யவேண்டும்.

இந்த மியூஸிக் அகாடமியார் என்ன செய்ய வேண்டும் என்று அம்மாஞ்சியைக்கேட்டால் அதற்குப்பதில் பின்வருமாறு நூதனமான நிபந்தனைகளைச் சொல்லுகிறான். (1) அவர்களுடைய கமிட்டியில் இருக்கும் ஆட்களில் பாதிப் பேர்வழிகளையெடுத்துவிட்டு, ஆந்திர தேசத்திலிருந்து பொறுக்கியெடுத்த ரசிகர்களில் சிலரை நுழைக்கவேண்டும் (2) வஸூல் செய்த பணத்தை வைத்துக்கொண்டு, ஆந்திர ஜில்லாக்களுக்குத் தமிழ்நாட்டு வித்வான்களை அனுப்பிவைத்து, கச்சேரிகளைச்செய்யும்படி ஏற்பாடுசெய்து, ஆந்திரர்களை வசீகரிக்க வேண்டும். (3) சங்கீதம் வரை ஆந்திரர்களுக்கும் தமிழர்களுக்கும் முற்றும் சமரசம் உண்டு என்பதைத்தெளிவாகவும் விரைவாகவும் ஏற்படுத்தவேண்டும். (4) குண்டூர், பெஜவாடா, ராஜமந்திரி, காகிநாடா, விசாகப்பட்டணம், கடப்பை, அநந்தப்பூர், பல்லாரி, கர்னூல் இந்த ஊர்களில் ஸபைகளை ஸ்தாபனம் செய்து, கர்னாடக ஸங்கீதத்தில் அனைவரையும் ஈடுபடச்செய்து, முன்னால் அகாடமியின் பணத்தைச் செலவழித்து, ஆந்திரர்களுடைய அபிமானத்தை விருத்திசெய்து பின்னால் ஆங்காங்குள்ள பிரமுகர்களுடைய ஆதரவை

விருத்திசெய்து, தியாகய்யர், தீக்ஷிதர், சர்மா சாஸ்திரியார், க்ஷேத்ரஞ்யர் இவர்களுடைய உருப்படிகளை பத்திரப்படுத்தவும், பிரசாரப் படுத்தவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும். (5) மியூஸிக் அகாடமி என்பது சென்னை ராஜதானியிலுள்ள அனைவருக்கும் பொதுவான ஒரு சங்கம் என்ற தத்துவத்தை நிலைநிறுத்தி, லாயிட்ஸ் ரோடிலிருந்து சித்ர குளத்தெருவு வரையிலிருக்கும் பேர்வழிகளுக்குமாத்திரம் அல்ல என்பதையும் தெளிவாக விளங்கச் செய்யவேண்டும் (6) போரிலும் தீவைத்து மாரிலும் அடித்துக்கொள்ளும் மானிடர்களைச் சிறிது ஜாக்கிரதையுடன் கவனிக்கவேண்டும்!

இனி அம்மாஞ்சி சொல்வதைக் கவனித்தால் வெறும் புதிர்போடுவதுபோல் ஆய்விடும். அவனுடைய போக்கு, யுக்தி, யோசனையெல்லாமே அவ்வளவு லௌகிகமாகவிருக்காது. அவனைச்சொல்லிப் பிரயோஜனம் இல்லை, அவன் பிறந்தவேளை அந்தமாதிரி. மனுஷன் மகா சந்தேகப்பேர்வழி—தொட்டதெல்லாம் அவநம்பிக்கை. உதாரணமாக, வித்வான்களெல்லாம் சேர்ந்து கடைசி நாளில் ஒரு மத்தியான மீட்டிங்குபோட்டு, எங்கள் இஷ்டப்பிரகாரம்தான் பாடுவோம், ஒருவர் சொல்வதுபோல் பாடமாட்டோம், பாஷைக்கிளர்ச்சியில் மாட்டிக்கொள்ளமாட்டோம் என்றெல்லாம் சொன்னதாகப் பேப்பரில்வந்தது. இதைச் சுட்டிக்காட்டி அம்மாஞ்சியின் அபிப்பிராயம் என்னவென்று கேட்டேன். அதற்குப்பதில் "சரிதான், நம்மாத்து துலுக்காணம் பயல்மாதிரிதான் இவர்களெல்லாரும்" என்றான். துலுக்காணம் ஒருநாள் மாரியம்மன் கோவிலுக்குப் போய், "அம்மா, தாயே, என்மகன் சும்மா வயறு வலிக்குது, வலிக்குதுன்னு கத்தறான். அந்த வயத்தவலியைத் தீத்துட்டையானா, நம்ம ஊட்டிலே இருக்கிற ஆட்டுக்குட்டிங்கள்ளே, கொழுத்த வெள்ளை ஆட்டை உனக்கு பலி கொடுத்துட்றேன்" என்று சொன்னானாம். அதைக் கேட்டுக்கொண்டிருந்த அவன் மனைவி "என்ன சொன்னே? யார்ஊட்டு ஆட்டை யார் பலிகொடுக்கிறது? எங்க ஊட்டு வெள்ளை ஆட்டை நீ யாரைப்போலே காவுகொடுக்கா?" என்று கேட்கவும், துலுக்காணம் முகத்தைத் திருப்பிக்கொண்டு மனைவியைப்பார்த்து, மாரியம்மனுடைய திக்கில் வாயை மூடிக்கொண்டு, "சும்மனாங்காட்டியும் சொன்னாக்கூட நீ என்ன இப்படிக் கத்தறயே! மாரியாத்தா கோவிலுக்குள்ளே வந்தால் அப்படித்தான் சொல்லனும். மகனுக்கு உடம்பு சரியானப்பரம் பாத்துக்கிட்டா போச்சு!" என்றுசொல்லி மனைவியைத் திருப்தி செய்தானாம். அந்தமாதிரி அந்த வெட்கக்கேட்டை ஏன் கேட்கவேண்டும்?

இதெல்லாம் போகட்டும். சங்கீதக்கச்சேரிகளைப்பற்றிச் சிறிது கவனிப்போம்! மியூஸிக் அகாடமி ஸீரிஸில் நடந்த கச்சேரிகளில் அம்மாஞ்சி மிகவும் மெச்சிக்கொண்டது (1) ரோஷனாராபீகம் செய்த இரண்டு கச்சேரிகள் (2) பிஸ்மில்லா வாசித்த நாகசுரம். பிறகு? பிறகா? எங்கே, அம்மாஞ்சியைக் காணோமே. இவை இரண்டுகளைப்பற்றியும் மாத்திரம் சொல்லிவிட்டு நழுவிவிட்டான். இவையிரண்டு கச்சேரிகள்தான் மெச்சத்தக்கவையென்று நாம் வைத்துக்கொள்ளுவோம். இவைகளில் என்ன விஷயத்தைப்பற்றி முக்கியமாகக்குறிப்பிடலாம்? ரோஷனாரா பீகத்தினுடைய சாரீர சௌக்யத்தைப்பற்றியா? அந்தச் சாரீர பலத்தை வைத்துக்கொண்டு அவர் செய்த தீவிர கல்பனைகளைப்பற்றியா? அந்த கல்பனைகளிலுள்ள கோர்வைகளைப்பற்றியா? அந்த கோர்வைகளில் அமைந்த ஸ்வரங்களின் சுத்தத்தைப்பற்றியா? அல்லது அவைகளின் பிராஸங்களைப்பற்றியா? அவருடைய ராக விளம்பர பத்ததியின் ஆறுதலுக்கும், படிப்படியாகச் செல்லும் நடைக்கும், அங்கங்கு ஸ்ருதியுடன் சேர்ந்துநின்று, தடால்என்று தாவிப்பிடித்து ஒரு கிருக்கியடித்து, ஒரு பிருகா, ஒரு மொஹரா ஒரு திர்மானம், இவைகளோடு நிற்கும் அழகுக்கோ? ஜனங்கள் கரகோஷம் செய்தபோது அவர் இடது கையால் செய்த ஸலாம்களுக்கோ? மாலையிட்டபோது எழுந்துநின்று அங்கீகரித்துக்கொண்ட ஒரு வினயத்துக்கோ? இவையெல்லாம்விட, எவ்வளவு நேரம் பாடினாலும், ஒருவித திராவகமும் பானம்செய்யாமல் அவரு

ராஜேந்திரா டால்கம் பவுடரைப்பற்றி

ஓர் சம்பாஷணை!

சகுந்தலா: நானும் பேஸ் பவுடர் உபயோகிக்கிறேன். ஆனால் உன்னுடைய முகம் மட்டும் வசீகரத்துடன் இருக்கும் ரஹஸ்யம் என்னடி?

வசந்தா: பேஸ் பவுடர் என்றால் எல்லாம் ஒன்றாய்விடுமாடி, கடைகளில் பல பவுடர்கள் இருக்கிறது.

சகுந்தலா: அப்படியானால் நீ எதையடி உபயோகிக்கிறாய்?

வசந்தா: எல்லோரும் புகழ்கின்றதும், பருவு, தேமல் முதலியவைகளைப் போக்கி, வசீகரத்தையும், அழகும், ஆனந்தத்தையும் கொடுத்து நமக்கு மகிழ்ச்சிதரக்கூடியதுமான "ராஜேந்திரா டால்க்ம் பவுடரைத்தான்"

சகுந்தலா: நானும் இன்றுமுதல் அதையே வாங்கி உபயோகிக்கிறேன்.

ஏஜன்ஸி நிபந்தனைக்கு கீழ்க்கண்ட அட்ரஸிற்கு எழுதவும்

Sole Distributor:

P. S. சுந்திரம் செட்டியார்

ஷாப், பெரியகடை வீதி

பிராஞ்சு: பொற்றாமரை தென்கரை, கும்பகோணம்.

டைய சாதகத்தின் வலிமையைக் காட்டினாரே அந்த அற்புதத்தையோ? என்னவென்று மெச்சிக்கொள்வது? ஸ்ருதியோ ஐந்துகட்டை! காலப்பிரமாணமோ விழிகள் பிதுங்கிவிடும் போலுள்ளவை! இரண்டு தம்புராக்கள், எதிரில் ஜனங்கள் ஆயிரம், சங்கீதத்துக்கு அசல் சத்துருவான மேடை, "மைக்" யந்திரமோ "அட்டிஸ் அபாபா"வில் முதன் முதல் முஸோலினி பேசிவிட்டு வீசியெறிந்த யந்திரமாம், இத்தனை அசந்தர்ப்பத்திலும், அந்த ரோஷனாராபீகம் செய்துவிட்டுப்போன வேலைப் பாடுகளைப்பற்றி என்னவென்று எழுதுவது?

பிஸ்மில்லாவைப்பற்றிப் பல மாதங்களுக்கு முன் நான் "காவேரி"யில் எழுதியதை நீங்கள் கவனித்திருக்கலாம். அவன் வாசித்த வாத்தியம் எப்படிப்பட்டதென்பீர்களோ? நாகசுரத்துக்குச் சிறிய தம்பி; முகவீணைக்குக் கொஞ்சம் ஜேஷ்டன். அவனுடைய ஸ்ருதி சுத்தமும், கமக சுத்தமும், வாத்தியத்தில் கொடுத்த காற்றும், அதற்குள்ளிருந்து வந்த சப்தங்களும், நமக்கு விஷயமே என்னவென்று தெரியவொட்டாமல் வெளுத்துவிட்டுப் போய்விட்டான். அவனுடைய நடத்தையென்ன, அவன் போட்ட சட்டையென்ன, அவன் ரோஷனாராபீகத்தினுடைய சங்கீதத்தைக் கேட்டு ஆனந்தித்த அழகு என்ன? சொல்லி என்ன உபயோகம்?

ஸிந்து பைரவியில் "ஜமுனாகிதீரே" என்று மாத்திரம் ஒரு வரியையெடுத்து 15 நிமிஷங்கள் ரோஷனரா பாடினார். ஜமுனா நதியின் மகத்துவத்தை நேராகக்கண்டு ஆனந்தித்த அம்மாஞ்சி எவ்வளவு சந்தோஷித்தான்! ஒரே வரிதான்! ஆனால் அந்தச் சிறு வாக்கியத்தில் ஸ்ரீ கிருஷ்ணலீலை முழுவதும் கண் தோற்றத்தில் காணுமாறு ரோஷனரா பாடிக் காட்டிவிட்டார்! மகம்மதிய ஸ்திரீதான் அவர். பாடிய வாக்கியம் ஹிந்தி! தத்துவம் ஹிந்து! ஸங்கீத ஸமரஸத்தில் பரவசமான அவரும், கானத்தைக் கேட்டுக்கொண்டிருந்த ரஸிகர்களும் ஒரேவிதமான ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள் என்பதற்குச் சந்தேகம் உண்டா?

மியூஸிக் அகாடமியில் "ஜூனியர்" கச்சேரிகள் செய்தவர்களில் குறிப்பிடக்கூடியவர்கள் மூவர். ஸ்ரீ சாத்தூர் சுப்பிரமணியம், குமாரசாமி, லக்ஷ்மிநாராயண பாகவதர். மூன்றாவது குறிப்பிட்டவர் சப்தத்தையடக்கிப் பாடவேண்டும். இரண்டாவதவர் உருப்படிகளைச் சரியாகத் தேர்ந்தெடுக்கவேண்டும். முதலாமவர் நன்றாக முன்னுக்கு வரவேண்டும் என்கிறான் அம்மாஞ்சி. "முன்னுக்கு வரவேண்டும்" என்றால் "முந்திக்கொள்ளவேண்டும்" என்ற அர்த்தமாயிருக்கலாம்.

வரவர ஸங்கீதத்தில் உழைப்பே குறைந்துவிட்டது. பாடின உருப்படிகளையே வித்வான்கள் பாடிக்கொண்டிருக்கிறார்கள்-கேட்ட சங்கதிகளையே கேட்டுக்கொண்டு எத்தனை முறை ஒரு உருப்படியை ஒரு வித்வானிடத்தில் கேட்பது? அவர்களுக்காவது "ஜுகுப்ஸை" இருக்கவேண்டும், நமக்காவது "நிஷ்கண்டகம்" வளரவேண்டும் என்கிறான் அம்மாஞ்சி. அப்படியேற்பட்டால்தான் சங்கீதம் விருத்தியாகும்.

ஸ்ரீராம் சாக் & இண்டஸ்ட்ரியல் பாக்டரி
கும்பகோணம்

எண்ணிறந்த எங்கள் வாடிக்கைகாரர்களுக்கு
— மகிழ்ச்சிக்குறிய இச்சந்தர்ப்பத்தில் —
எங்கள் மனமார்ந்த பொங்கல் வாழ்த்துக்கள்

25 வருஷ சேவையில் உங்கள் ஆதரவிற்கும் நம்பிக்கைக்கும் பாத்திரமானவை

சிங்கம் மார்க் சாக் குச்சிகள்

"நேஷனல்" புளூ பிளாக் & கலர் இங்க்

"நேஷனல்" சிகப்பு & கலர் அரக்கு குச்சிகள்

TIMES HAVE CHANGED!

& NOW

காலம் மாறிவிட்டது.
அன்று இருந்த மணி காட்டும் கருவிகள் இப்போழுது எவ்வளவு மாறுதலடைந்திருக்கின்றன!

மணி குறிப்பதற்கு 'ஸன்டயல்' தான் முதன் முதலாக கி. மு. 800-ம் நூற்றுண்டில் இருந்து வந்தது. பின்வரும் நூற்றுண்டுகளில் அநேக விதமான மாறுதலுள்ள மணி காட்டும் கருவிகள் தோன்றி ஒன்றை ஒன்று மிஞ்சி வந்தன. கால அளவில் அடைந்த அனுபவத்தாலும் அறிவு வளர்ச்சியாலும் இன்று 'வெஸ்ட் எண்டு' கடிகாரங்கள் தயாரிக்கப்பட்டு. நிகரற்ற கறுவிகளாக விளங்குகின்றன.



நியூ காலிபர் "E"

எக்ஸ்ட்ரா பைன் வாட்ச்-15 ஜுவல்கள்

நிக்கல் ஸில்வர் கேஸ்	...ரூ. 62
பேடண்ட் எவர் பிரைட் ஸ்டீல்	...ரூ. 71
18-காரட் சாலிட் கோல்டு	...ரூ. 197

ரேடியம் டயலும் முட்களும் கூடிய எந்த ரகத்திற்கும் ரூ. 8. பிரத்தியேகம்.



கேட் லூப் ரெக்டாங்குலர்

டீலக்ஸ் குவாலிடி வாட்ச்-16 ஜுவல்கள்

18-காரட் சாலிட் கோல்டு ... ரூ. 304

சாமான்கள் சரிவர வராததின் காரணத்தால் விளம்பரப்படுத்தியிருக்கும் எல்லாவித மாடல்களையும் சப்ளை செய்ய இயலாது. ஆயினும் கூடுமான வரையில் ஆர்டர்கள் ஸ்டாக் உள்ள வரை பூர்த்தி செய்யப்படும்.

வெஸ்ட் எண்டு வாட்ச் கோ.,

பம்பாய் :: கல்கத்தா

WEST END WATCH Co

Bombay · Calcutta

ஏமாற்றம்

OFFICE OF THE REGISTRAR OF
21 JAN 1944
MADRAS

ரா. ஸ்ரீ. தேசிகன்

கூடத்தில் ஒருகட்டில்போடப்பட்டிருக்கிறது. அதில் ஒரு கிழவி படுத்திருக்கிறாள். ஒரு கூடையில் அள்ளி வைத்துவிடும்படியான தோற்றமாயிருக்கிறது அக்கிழவியின் உருவம். வெளிர் பனிபோல நரைத்த தலை. உடம்பில் சதையெல்லாம் சுருங்கிவிட்டன. எலும்புகளை எல்லாம் எண்ணிவிடலாம். சுமார் எண்பது வருஷ வாழ்வுப் புயலைத் தாங்கி நின்ற பழுத்த மரம் எப்பொழுது விழுமோ? ஒருவருக்குந் தெரியாது.

வாழ்வுச் செக்கில் தன்னை வைத்து ஆட்டி நறும் திஞ்சாற்றைக் குடும்பத்திற்கே ஈந்து வருகிற அதிதி எமதர்மராஜனுக்குக் காணிக்கையாகச் சக்கையையும் நாரையுந்தான் வைத்திருக்கிறாள் அக்கிழவி.

பத்து நாட்களாகக் கிழவிக்கு உடம்பு சரியாயில்லை. டாக்டர் விடல்ராவ் வருகிறதும் போவதுமாயிருக்கிறார். டாக்டர் ஏதோ மருந்தைக் கொடுத்து வருகிறார். பயன்பட்டதாகத் தெரியவில்லை.

"அவரை அழைத்துக்கொண்டுவந்து பார்க்கிறதுதானே?"

என்கிறாள் சிவகாமு.

யார்?"

"அவர்தானா அருணாசல ஐயர்; எத்தனை நாள் தாங்குமென்று கேளுங்களேன்."

கிருஷ்ண ஐயர் யோசிக்கிறார்.

"என்ன யோசிக்கிறகள், அவர் கால் வைச்சால் உடனே போயிடும்னு நினைக்கிறகளா?"

"அப்படித்தான் சொல்லிக்கிறா, அருணாசல ஐயர் வந்தால் அரோஹராதான்"

"அதனால் ஒன்றும் பண்ணாது. மருந்து அவர் கொடுக்கவேண்டாம்."

"ஆகா அப்படியே செய்கிறேன்" என்று சொல்லி டாக்டரை அழைக்கப்போகிறார்.

சிறிதுநேரங்கழித்து அவரும் டாக்டரும் ஒரு வண்டியில் வருகிறார்கள்.

வாசலில் காத்துக்கொண்டிருந்த சிவகாமு "டாக்டர் வந்துவிட்டார். நான் உள்ளேபோகிறேன்" என்று சொல்லிக்கொண்டு உள்ளே நுழைகிறாள்.

டாக்டர் அருணாசல ஐயர் குழாயை மார்பில் வைத்துப் பார்க்கிறார், கையைப்பிடித்துப் பார்க்கிறார். "உயர்ந்தால் இரண்டு நாளைக்கு மேல் தாங்காது. மருந்தைக்கொடுப்பானேன்? மருந்தை நிறுத்திவிடலாம்" என்கிறார்.

உள்ளிருந்து வெற்றிலைத்தட்டில் இரண்டு ரூபாயை வைத்து, கிருஷ்ணசாமி ஐயரிடம் நீட்டுகிறாள் சிவகாமு. அவர் டாக்டரிடம் அதைக் கொடுக்கிறார். டாக்டர் அதைப் பெற்றுக்கொண்டுபோய்விடுகிறார்.

"என்ன, அருணாசல டாக்டர் உள்ளே நுழைந்தாரே, அவராத்தில் யாருக்குடம்பு?—யாருக்குடம்பாயிருக்கும்? ஒருவேளை கிழவிக்குத்தான் உடம்பு அதிகமாயிருக்கிறதோ? எத்தனையோதரம் கிழவி பிழைத்துப்பிழைத்து எழுந்தூட்டா. எல்லாத்துக்கும் உள்ளே போவோம்" என்று சொல்லிக்கொண்டே கிருஷ்ணசாமி ஐயர் வீட்டிற்குள் நுழைகிறார் ராமஸ்வாமி கனபாடிகள்.

"வாத்தியாரே, சமயத்துக்கு வந்தகள்" என்கிறாள் சிவகாமு.

"நானும் நேற்றே சொல்லி அனுப்பிக்கலாம்னு நினைத்தேன். ஆனால் நீங்கள் ஊரில் இல்லை என்று சொன்னா."

"நான் இன்னிக்குத்தான் வந்தேன். டாக்டர் அருணாசல ஐயர் வெளியிலே போகிறதைப் பார்த்தேன். யார் சகாயத்திற்கு?"

தெய்வ சகாயந்தான் என்கிறாள் சிவகாமு. "கூடை மனுஷ்யாள் இருந்தால்தான் என்ன? நீங்கள்தான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்ளணும்."

"அம்மா பர்வதம் வந்திருக்காளோ?"

"ஆமாம்"

வரவழைத்துக்கொள்ளவேண்டியது அவசியந்தான்; நம்மாத்துக்காரியத்துக்கு நீ சொல்லணுமா?

"இதோ ஆச்சு"என்று விரலைச்சொடுக்கினார், ராமஸ்வாமி கனபாடிகள்.

ராமஸ்வாமி கனபாடிகளுக்கு ஒரே பரப்புத்தான். பல இடங்களில் உபாத்தியாயம், பல இடங்களில் பூசை நிவேதனங்கள். எப்பொழுதும் ஓட்டமும் பிடியுந்தான். அவருக்கு அபிராமபுரத்திலுள்ளவர்கள் 'ஆச்சுமா' என்று நாமகரணம் சூட்டினார்கள்.

"பிராயச்சித்தத்தை இப்பொழுது பண்ணலாமா?" என்கிறார் கிருஷ்ணசாமி ஐயர்

"பிராயச்சித்தத்தைப்பண்ணிய பிறகு கிழவி எழுந்துவிட்டால் குழந்தை குட்டிகளுக்கு ஆகாதாமே கடுகு? அத்தனை குழந்தை எனக்கிருக்கிறதே" என்று தயங்குகிறாள் சிவகாமு.

"அது யார்சொன்னா? அதெல்லாம் ஒண்ணுமில்லை"

கிழவி இருக்கச்சே பண்ணணும். சரீர மன சுத்திக்குத்தான், வேறொண்ணுமில்லை. அதிருக்கட்டும், டாக்டர் என்ன சொன்னார்.

"இன்னும் இரண்டு நாளைக்குமேல் தாங்காது என்கிறார் டாக்டர்" என்று கிருஷ்ணசாமி ஐயர் சொல்லுகிறார்.

"நாளைக்குப் பண்ணிவிட்டால் போறது"

"அதிருக்கட்டும் கனபாடிகளே, கோதானம் பண்ணுகிறதாயிருக்கிறேன். நல்ல பிராம்மணா பார்த்துச் சொல்லுங்கள்"

"கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகளுக்குப் பண்ணால் போச்சு; பரமசாது. வேதம் வந்தவர் அபார ஸம்சாரம்."

"அவரைத்தான் நான் உத்தேசித்தது. என்னா தானம் பண்ணினதை வித்துட்டா பலன் இல்லாது போய்விடும். வருஷத்தில் பெருங்கட்டாய் வைக்கோல் ஐந்தாறு கட்டுத் தந்துவிடுகிறேன்."

"ஆமாம். நீங்கள் சொல்லறது வாஸ்தவம். அதைப்பற்றி யோசிக்கவேண்டியதுதான். எல்லாத்துக்கும்தக்கமனுஷ்யாளிருக்கிறார்கள். சபிண்டீகரணத்திற்கு மனுஷ்யாளிருக்கிறார்கள். ஏகாகத்திற்கு மனுஷ்யாளிருக்கிறார்கள். இப்பவே எல்லாத்திட்டத்தையும் போட்டுத் தந்துவிடுகிறேன். நக்கினத்திற்கு, வஸ்திர தானத்திற்கு, பாதேய தானத்திற்கு, எல்லாத்துக்கும் ஆசாமிகள் வைத்திருக்கிறேன். நீங்கள் கவலைப்படாதீர்கள், அம்மா காரியத்துக்கு ஒரு குறையும் வராது."

"ஏதோ உள்ளவரையில் அவளுக்குச் செய்தாய்விட்டது, போற ஆத்மாவுக்குச்செய்ய வேண்டாமா?"

"அதுதான் முக்யமாய்ச் செய்யவேண்டும். நாளைக்கு அழைச்சுண்டு வந்துடுறேன். எல்லாத்தையும் செவ்வையாய்ச் செய்துவிடுவோமே"

உங்களுக்குத் தெரியாதா, மாமா?" என்கிறாள் சிவகாமு.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கும் போழுது "அம்மா, அடுத்தாத்து ஸரோஜா, அப்பம் வடை சாப்பிடுகிறாள். எனக்கில்லையா" என்கிறான் ராமு.

"பாட்டிபோனா, வேண்டிய அப்பம் வடை அப்பா", என்று சிரித்துக்கொண்டே சொல்லுகிறாள் சிவகாமு.

"என்னடி குழந்தைகிட்டே இதுமாதிரி சொல்றே" என்கிறார் கிருஷ்ணசாமி ஐயர். "இரண்டாங்கட்டான் பின்னாடி ஏதானும் உளறிவைக்கும்"

கனபாடி சிரிக்கிறார்.

ராமஸ்வாமி கனபாடிகள் வீட்டைவிட்டு அகலுகிறார். போகிறபொழுது அவர் மனம் மேலே நடக்கவேண்டிய காரியங்களைப்பற்றிச் சிந்திக்கிறது. கிரியைகளுக்குத் தேவையான பிராமண உருவங்கள் அவர் கண் முன் உலாவுகின்றன. வருஷாப்தீகம் வரையில் வருகிற

கதைக்கோவை

தொகுதி III

60 எழுத்தாளரின்
சிறுகதைகள் 60

ஹிந்துமத ஸ்தாபன போர்ட் தலைவர்
திரு டி. எம். நாராயணசாமி பிள்ளை
எம். ஏ., பி. எல்.
அவர்கள் முன்னுரை கொண்டது

கிளேஸ் பதிப்பு ரூ. 7—8—0
ஆண்டிக் பதிப்பு ரூ. 9—0—0

திரு வி. க. - வாழ்க்கை வரலாறு ரூ. 2

அல்லயன்ஸ் கம்பெனி
பிராடீஸ் ரோட், மயிலாப்பூர், சென்னை.

சடங்குகளின் நாடகக்காட்சிகள் அவர் மன அரங்கில் தோன்றுகின்றன.

ராமஸ்வாமி கனபாடிகள் போனதும் கிருஷ்ணசாமி ஐயர் தம்மைத்தாமே நொந்து கொள்கிறார்.

"இதென்ன அறிவில்லாத்தனமாயிருக்கிறது. ஒருவர் இருக்கிறபொழுதே அவருக்கு முடிவு கட்டி மேலே ஆகவேண்டிய காரியங்களைப் பற்றி யோசிக்கிறது பாபம் இல்லையா?" என்கிறார். வயதாச்சு செய்யவேண்டிய காரியந்தான்—அம்மா காதில் பட்டால் என்ன நினைப்பாள்? அம்மா காதில்பட்டால்தானு—இப்படி யோசிப்பதே அழகில்லையே. வயதாகி விட்டது. நமக்கும் கஷ்டம்; அவளுக்கும் கஷ்டம். நமக்குக்கஷ்டம் என்று நினைக்கலாமா, தாய் விஷயத்தில் கஷ்டமென்று ஒன்று உண்டா?" என்ற பலவித எண்ணங்கள் அவர் மனத்தகத்தே பாய்கின்றன.

ஃ ஃ ஃ

கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள் மிகுந்த உவகையுடன் வீட்டிற்குள் நுழைகிறார்.

"என்ன விஷயம் சிரிச்சுக்கொண்டே வருகிறளே" என்கிருள் காமாக்ஷி அம்மாள்.

"கிருஷ்ணசாமி ஐயர் தாயாருக்கு உடம்பு அதிகமாயிருக்கு. கோதானம் எனக்குத் தருகிறதாயிருக்கிறார்கள்.

மாடு நல்ல மாடாம். நல்லவாளைப்பார்த்துக் கொடுக்கணும்னு யோசித்திருக்கிறார். வருஷத்தில் ஐந்தாறு கட்டு வைக்கோல் வேறே தருகிறாளாம்.

நன்றாய்ப் பால் கறக்குமாம். வெண்ணெய் கூட எடுக்கும் என்று மாட்டுக்காரன் சொன்னான் என்னிடம்.

"எல்லாத்துக்கும் ஆத்துக்கு வரட்டும். வீட்டுக்கு மாடு வரத்துக்குமுந்தி, புறந்தாத்துக்கு மோர் கொடுக்கிற வியாபாரமாய்ப் போய்விடுகிறது" என்கிருள் காமாக்ஷி அம்மாள்.

ஃ ஃ ஃ

இரவு எட்டு மணி. வீட்டு வேலை ஆகிவிடுகிறது. குழந்தை இராமுவும் தூங்கிவிடுகிறுன்.

"ஏன்னு, பாங்கியிலிருந்து பணத்தைத் தயார்ப்பண்ணிக் கொள்ளுகிறதானே" என்கிருள் சிவகாமு.

"அதற்கென்ன நாளைக்கு வாங்கி வைக்கிறேன்."

"பிராயச்சித்தத்திற்கும் பணமிருக்கோ"

"அதற்குப் பணமிருக்கு"

"வாத்தியாரிடம் எல்லாத்தையும் விட்டுவிடாதேயுங்கள். இந்த ஊர்ச்சேதி உங்களுக்குத் தெரியாது, பிடுங்கித் தின்னுடுவாங்கள்."

"அப்படி மோசம் செய்துவிடுவாரா இவர்."

அதிருக்கட்டும் சுபஸ்வீகாரத்திற்கு அன்னு புடவை வாங்கித்தரேன்னு சொன்னார். மோதிரத்துக்குப் பணமில்லையாம். எங்கிட்ட தங்க மணியிருக்கு, தரேன்னு சொன்னேன்."

"அதற்கென்ன இப்பொழுது? எல்லாம் முடிவுகட்டி விட்டாயா?"

"நான் முடிவு கட்டவில்லையே. டாக்டர் தாங்காது என்று சொன்னாரே."

'டாக்டர்தான் முடிவாகச்சொல்லமுடியுமா?'

உங்களம்மா போகவேண்டாம் எத்தனை காலம் இருந்தாலும் சகிப்போமா? டாக்டர் சொன்னதின்மேல் இந்தப் பேச்சு வந்தது. நீங்க வித்தியாசமாய் நினைச்சுக்கொள்ளாதேயுங்கள். நாளைக்குப் பிராயச்சித்தம் பண்ணப் பேகிறளோ இல்லையோ?"

"அதைப் பண்ணிவிடுவோம். நீ போய்த் தூங்கு. காலை ஏழு மணிக்குக் கனபாடிகள் வந்துவிடுவார்."

கிருஷ்ணசாமி ஐயர் படுக்கையைவிட்டு எழுந்திருக்கக்கூட இல்லை. ராமஸ்வாமி கனபாடிகள் தம் பரிவாரத்தோடு வருகிறார்.

"என்ன ஆச்சா?" என்கிறார் ராமஸ்வாமி கனபாடிகள்.

"இதோ ஆயிடுத்து" என்று படுக்கையை விட்டு எழுந்திருக்கிறார் கிருஷ்ணசாமி ஐயர். சிவகாமு வெந்நீர் விடியற்காலமே போட்டிருக்கிருள்.

"ஸ்நானம் செய்யவேண்டாம். சந்தியா வந்தனம்பண்ணி ஆசமனம் செய்தால் போறும்" என்கிறார் கனபாடிகள்,

"எல்லாத்துக்கும் ஸ்நானம் பண்ணிவிட்டு வருகிறேன்."

"அதுதான் உத்தமம்."

பிராயச்சித்தத்தை ஆரம்பிக்கிறார்கள். மந்திர படனம் நடக்கிறது. வெகு விமரிசையாய் நடக்கிறது. கிழவியின் தலையில் ஜலத்தைத் தெளித்தவுடனே கிழவி கண்ணைத்திறந்து பார்க்கிருள்.

"அம்மா" என்கிறார் கிருஷ்ணசாமி ஐயர்.

"ஏண்டா கிருஷ்ணு, என்னடா இங்கே கூட்டமாயிருக்கிறது? தாகமாயிருக்குக் கஞ்சி கொண்டுவாயேன்."

உண்மையைச் சொல்லத் தைரியமில்லை. "ஒன்றுமில்லை",என்று தயங்குகிறார்.

சிவகாமு தன் தாயார் பர்வதத்தோடு பேசுகிறாள்.

"அம்மா! நம்முடைய குழந்தைக்கு ஒண்ணும் பண்ணாதே. அந்தச் சனியன் இன்னும் எத்தனை நாளைக்கு இருந்து என் கழுத்தை அறுக்கப் போகிறதோ."

வெள்ளிச்சொம்பை உள்ளே வைக்கவருகிற கிருஷ்ணசாமி ஐயர் காதில் 'சனியன்' என்ற வார்த்தை விழுகிறது.

"என்ன சனியன் என்கிறாயே, என்ன சமாசாரம்?"

"காக்கை எண்ணெய்க் கிண்ணத்தைத் தள்ளி விட்டது. அதொண்ணையும் வைக்கிறதில்லை."

"அம்மா,வுக்கு வியாதி தெறிச்சுப்போயிடுத்து. கஞ்சி கேட்கிறாளே தெரியவில்லை? கஞ்சியைப் போடு."

"அடி சிவகாமு! சீக்கிரம் கஞ்சியைப் போடு" என்று சிவகாமு தாயார் பர்வதம் சொல்லுகிறாள்.

"இதோ" என்கிறாள் சிவகாமு.

வைதீகக்கூடத்தில் ஒவ்வொரு முகத்திலும் ஏமாற்றக்குறி; வெளியிலே சொல்லிக்க முடியவில்லை.

"பகவத்சங்கல்பம் ஏதோ நடக்கிறது. அதை மாற்றமுடியுமா" என்கிறார் ராமஸ்வாமி கனபாடிகள். "ஒரு திரணம்கூட நகருமா அவனில்லாமல்" என்றுகூடப் பாடுகிறார் துரைசாமி சாஸ்திரிகள். "இந்தப்பூட்டுக்குப் புழைச்சுண்டாள்" என்கிறார் கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள் அசட்டுச்சிரிப்பு சிரித்துக்கொண்டே.

கூட்டங் கலைகிறது. ராமஸ்வாமி கனபாடிகள் தம் பரிவாரத்துடன் வெளியிலே போகிறார். கொஞ்சதூரம் போனவுடன் ஆரம்பிக்கிறார் ராமஸ்வாமி கனபாடிகள். "கிழவி சாதாரணக் கிழவியா? டாக்டர் அருணாசல ஐயரை ஏமாற்றிவிட்டாளே. அடே! எமனை ஏமாற்றிவிட்டாள்."

"கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகளுக்கு அதிர்ஷ்டமில்லை" என்கிறார் துரைசாமி சாஸ்திரிகள்.

"வேறு யாருக்காவது தானம் பண்ண உத்தேசித்திருந்தால் இப்படி நேராது."

"அவர் என்ன பண்ணுவார்?"

"எந்தக் காரியத்திலும் இப்படித்தான் நடக்கிறது."

"மாட்டை என்ன பண்ணினாள்?"

"பத்து ரூபாய் குறைச்சு வித்தாய்விட்டது."

GRIPE-VIT-D

REGD.

கிரைப் – விட் – டி

குழந்தைகளுக்கு ஏற்படும் வயிற்று வலி, மாந்தம், வயிற்றில் புளிப்பு, உப்பிசம், வாந்தி, வயிற்றுப்போக்கு, விக்கல் முதலிய கோளாறுகளை உடனே நிவர்த்தியாக்கும்.

Gripe-Vit-D
Distributors

The Mohan Medical Agencies,
MARKET SQUARE, TRICHY,
for Trichy District.

The Indian Agencies,
NORTH VELI ST., MADURA,
for Madura, Ramnad,
Tinnevelly Dt. & Pudukottah State.

Sub Distributors for Ramnad Dt. & Pudukotah State:
S. P. M. Manickam & Company,
KARAIKUDI.

N. Swaminatha Pillai,
AYYANKADAI STREET, TANJORE,
for Tanjore Dt.

M/s. Eastern Express Service Co.,
16, APOLLO ST., FORT, BOMBAY,
for Bombay Presidency.

Distributors wanted for:-
Madras City & Salem Dt.

Apply to:-
Proprietors, S. R. Remedies,
Trichinopoly.

"உங்களுக்கெல்லாம் ஏதோ வாங்கித்தரலாம்னு நினைத்தேன். என்னை மன்னிக்கணும்."

"கிழவியின் பிராணன் உங்கள் கையிலா இருக்கு? அந்தப்பெரிய வார்த்தை எதற்காக" என்கிறார்கள்.

"நாங்கள் போய்வருகிறோம்" என்று விடை பெற்றுக்கொண்டு அவர்கள் மறைகிறார்கள்.

உடைந்த கனவு உலகத்தில் திரிந்து கொண்டே ராமஸ்வாமி கனபாடிகள் தம் தனி வழி நடக்கிறார்.

அண்டைவீட்டுக்காரர்கள் கிருஷ்ணசாமி ஐயர் வீட்டிற்குள் நுழைகிறார்கள்.

"அடி சிவகாமு, மாமியார் பிழைச்சுட்டாராமே" என்கிறாள் அம்புஜம்மாள்.

"எல்லாம் அந்தக்காலத்து மண்ணு" என்கிறாள் சிவகாமு.

"இருக்க இருக்க பாக்கியந்தானே" என்கிறாள் மங்களம். "எத்தனை நாள் வைத்துக்கொண்டிருந்தாலும் சலிக்குமா அம்மா. இந்தமாதிரி குடுத்துவைக்கணுமே."

"கிழத்தை வேணும்னு ஆத்திலே கொண்டு வச்சுக்கிறதுதானே" என்று தனக்குள் பேசிக்கொள்ளுகிறாள் சிவகாமு.

"குருடோ, செவிடோ ஆத்தில் ஒரு பெரியவாள் இருந்தால் கவலையேயில்லை" என்று சிவகாமு தாயார் பர்வதம் சொல்லுகிறாள். "பாட்டியும் என் பெண்ணிடத்தில் ரொம்ப பிரியம்."

இப்படி உதட்டு உபசாரங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. ராமு ஓடிவருகிறான். "பாட்டி எப்பம்மா போவா, அப்பம் வடை பண்ணித்தரேன்னியே" என்று கேட்கிறான் ராமு.

"சீ போ, முட்டாள்" என்று சிவகாமு சொல்லுகிறாள்.

"அசட்டுப்பயலே என்னடா, கன்னாப்பின்னான்னு பேசறாய்" என்று திண்ணையிலிருந்து கிருஷ்ணசாமி ஐயர் அதட்டிக்கொண்டு உள்ளே வருகிறார்.

அரிசிப் பஞ்சத்திலும் உத்ஸாகம்!

★

அரிசி போதாததற்கு இக் குடும்பம் **அன்னபூரணி ராகி-மால்டையே** உபயோகபடுத்தி வருகிறது

★



சென்னை ஸோல் ஏஜண்டு: ஸாயிராம் & கோ., திருவல்லிக்கேணி

திருச்சி ஏஜண்டு: V. பாலசுப்ரமணியன் Share Broker, திருச்சி

அன்னபூரணி உற்பத்திசாலை, கும்பகோணம்

திருப்பள்ளியெழுச்சியும் :: :: :: :: தைந்நீராடலும்

வி. நாராயண அய்யர்

திருப்பள்ளியெழுச்சி என்றால் என்ன?

பள்ளி என்றால் படுக்கை; எழுச்சி என்றால் எழுந்திருத்தல்; திரு என்பது மங்களமாகச் சேர்த்துச்சொல்லும் சொல். அதிகாலையில், 'படுக்கையைவிட்டு எழுந்திரு' என்று பாடும் பாடல்களுக்குத் திருப்பள்ளியெழுச்சி என்று பெயர்.

ஒரு நாளைப் பன்னிரண்டு கூறுகளாகப் பிரித்தார்கள் நம் முன்னோர்கள். அவற்றுள் சூரியோதயத்திற்கு முன்புள்ள இரண்டு மணி நேரத்தை 'அபரராத்ரி' என்றும் 'பின்மாலை' என்றும் வழங்கினார்கள். அப்பொழுதுதான் எழுந்திருக்கவேண்டும். அதுதான் அதிகாலைப் பொழுது.

தினத்தைப்போலவே வருஷத்தையும் பன்னிரண்டு மாதமாகப்பிரித்தார்கள். உத்தராயணம் தொடங்கி தக்ஷிணாயனம் வரை, தேவர்களுக்குப்பகல்; மற்றைய ஆறுமாதமும் இரவு. நம்முடைய வருஷம் அவர்களுக்கு ஒரு தினம். ஆகவே, மார்கழி மாதம் தேவர்களுக்கு அதிகாலைப்பொழுது.

இவ்வாறு செய்த கால விபாகத்தைப் பொது மக்களுக்கு உணர்த்துவதற்கு, கோயில்களிலும் மடங்களிலும் மணியடிப்பார்கள். அரண்மனையில் காலத்தை உணர்த்திப்பாடுவார்கள். இப்படிப்பாடுபவர்களுக்கு, சூதர்கள் என்றும் மாகதர்கள் என்றும் காலக்கணக்கர் என்றும் பெயர் உண்டு.

இந்தப்பாடகர்கள் கையாண்ட முறையிலே மாணிக்கவாசகர் பரமசிவனைத் திருப்பள்ளியெழுச்சி பாடியிருக்கிறார்; தொண்டரடிப்பொடியாழ்வார் அரவணையிலே பள்ளி கொண்ட ரங்கநாதனைத் திருப்பள்ளியெழுச்சி பாடியிருக்கிறார். தேசியகவி பாரதியார் பாரதமாதா பள்ளியெழுச்சி பாடியிருக்கிறார்.

இவ்வாறு பள்ளியெழுச்சி பாடும் வழக்கம் அரண்மனைகளிலே நிலைபெற்றிருந்தது. 'பூபால' எழுந்திராய் என்று பாடும் இப்பாடல்களின் இராகம் 'பூபாள' ராகம் என்று பெயர் பெற்றதாயிற்று. தூக்கத்தினின்று எழுகின்றவர்களின் காதுகளுக்கு இன்பமாக அமைந்தது இந்த இராகத்தின் இன்னிசை. எழுப்புகிறவர்கள் மீது 'சிள்'என்று எரிந்து விழத் தோன்றாது.

தேவர்களுக்கு அதிகாலைப்பொழுது மார்கழி மாதமாதலால், அந்த மாதம் முழுவதும் கோயில்களில் அதிகாலையில் பூசை நடக்கும். தினந்தோறும் அதிகாலையில் எழுந்திராவிட்டாலும் இந்த ஒருமாதமாவது அதிகாலையில் எழுந்திருந்து காலைக்கடன்களை முடித்துக்கொண்டு கோயிலுக்குச்சென்று வரவேண்டும் என்று நம் முன்னோர் வற்புறுத்திய வழி இது. சிறு பிள்ளைகளையும் இம்மாதத்தில் படுக்கையினின்றும் எழுப்பி நீராட்டிக் கோயில்களுக்கும் பஜனை செய்யும் இடங்களுக்கும் அழைத்துச்செல்வார்கள். பஜனை செய்வோர் வீதிகளில் பாடிக்கொண்டு வருவதும் இந்த மார்கழிமாதத்திலேதான்.

விவாகமாகாத சிறுமிகளையும் இந்த மார்கழி மாதத்தில் அதிகாலையில் எழுந்திருக்கச்செய்து, அவர்களை நதியிலோ குளத்திலோ குளிக்கச் செய்து உமாதேவியை வழிபடச்செய்வார்கள். இவ்வழக்கத்தை யொட்டியே, "மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாளால்—நீராடப் போதுவீர்போதுமினோ!" என்று தொடங்கும் 'திருப்பாவை'யை ஆண்டாள் பாடியருளினாள்; மாணிக்கவாசகரும் திருவண்ணாமலையிலுள்ள சிறுமிகள் ஒருவரையொருவர் எழுப்பிக் கொண்டு கோயிற் பொய்கையிலே நீராடிப் பாடியதாக 'திருவெம்பாவை'யைப்பாடியருளினார்.

பாவையென்றால் பிரதிமை; பராசக்தியின் பிரதிமையை ஸ்நானஞ்செய்யும் துறைக்கு அருகிலே அமைத்து, அந்தப் பிரதிமையைப் பூஜித்துப்பாடினால், பாடிய சிறுமிகளுக்கு நல்ல கணவர்கள் கிடைப்பார்கள், ஊரில் மாதம் மும்மாரி பெய்யும் என்று கருதியே சிறுமிகள் இந்த நோன்பை நோற்று வந்தார்கள். இந்த நோன்பு பொங்கற்பண்டிகையோடு முடிவுபெறும். இதன் அனுபந்தமாகவே காமன் நோன்பும் நடந்துவந்தது; காமன் வழிபாடு காமன்பண்டிகையோடு முற்றுப் பெறும்.

இனி, இவ்வாறான பழைய பழக்கவழக்கங்களை வால்மீகிமுனிவர் தம்முடைய காவியத்தில் எவ்வாறு பயன்படுத்திக்கொள்கிறார் என்பதைச்சிறிது விளக்குவோம்.

மறு நாள் ஸ்ரீராமனை இளவரசுப் பட்டத்தில் அபிஷேகஞ் செய்வது என்று தீர்மானித்து, வேண்டிய ஏற்பாடுகளையெல்லாம் செய்து விட்டு, இந்தச் சுப சமாசாரத்தை நேரிலே தெரிவிக்க வேண்டும் என்று இராத்திரியில் கைகேயியின் அரண்மனைக்குத் தசரதமன்னர் போகிறார். அங்கே கைகேயி தலைவிரிகோலமாய்த் தரையிலே விழுந்துகிடப்பதைக் கண்டு நடுங்கிப்போய் அவளைத் தேற்றி அவள் வேண்டிய வரங்களைத் தருகிறேன் என்கிறார். அவள் ஓரே பிடிவாதமாக "இராமன் காட்டிற்குப் போகவேண்டும், பரதனுக்கே இளவரசுப் பட்டஞ் சூட்டவேண்டும்" என்று சாதிக்கிறாள். தசரதர் எவ்வளவோ மன்றாடியும் கெஞ்சியும் பலிக்கவில்லை; விடியற்காலத்திலே தம்முடைய படுக்கையிலே மூர்ச்சையாகக் கிடக்கிறார்.

அப்பொழுதுதான், வழக்கம்போல் அங்கே பள்ளியெழுச்சி பாடுவதற்குச் சுமந்திரர் வருகிறார். "காகுத்த மன்னரே! சந்திரசூர்யர்களும், பரமசிவனும் குபேரனும், வருணனும் அக்னியும் இந்திரனும் உமக்கு வெற்றியளிப்பார்களாக! இரவுப் பொழுது மங்களமாகச் சென்றது; நீர் செய்யவேண்டியதைச் செய்தாயிற்று. மன்னர்பிரானே! துயிலெழுந்து மேலே நடக்கவேண்டிய காரியங்களைச் செய்ய வேண்டும். பிராம்மணர்களும் சேனபதிகளான க்ஷத்திரியர்களும் வைசியர்களும் உம்மைத் தரிசிப்பதற்காக வந்திருக்கிறார்கள். இராகவ மன்னரே! எழுந்திரும்" என்று, மங்களகரமான துதிகளைக் கூறிப் பள்ளியறையின் வாசலில் நிற்கிறார்.

இரண்டாவதான பள்ளியெழுச்சி இதைவிட அதிகமான துன்பத்தை எடுத்துக்காட்டுவதாக அமைந்துள்ளது.

சுமந்திரர் இராம லக்ஷ்மணர்களையும் சீதையையும் காட்டிற்குக் கொண்டுபோய்விட்டு, அயோத்திக்குத் திரும்பி, தசரத மன்னரிடம் அந்த விருத்தாந்தத்தைக் கூறிச் சென்றபின், தசரதர் மனமுடைந்து சாகுந்தறுவாயில் இருக்கிறார். தம்முடைய பக்கலிலே பணிவிடை செய்துகொண்டிருக்கும் கோசலையிடம் தாம் இளமையிற் செய்த பாப காரியத்தைக் கூறி மூர்ச்சையாகிறார். கோசலையும் மற்றவர்களும் இராமனைப் பிரிந்த துக்கத்தாலும் மன்னருக்குப் பணிவிடைசெய்த சிரமத்தாலும் கண்ணயர்கின்றார்கள். நடுநிசியில் எல்லோரும் அயர்ந்திருக்கும்போது, தசரதர் பிராணனை விடுகிறார்.

மறுநாள் பொழுது விடியுமுன், பள்ளியெழுச்சி பாடும் வந்திகளும் சூதர்களும் பாடகர்களும், தசரதர் செத்துக்கிடந்த கோசலையின் அரண்மனையின் வாசலில் நின்றுகொண்டு பள்ளியெழுச்சி பாடுகிறார்கள். எட்டுவகை மங்கலப் பொருளும் மன்னர் காணுவதற்காக சித்தமாக வந்துவிட்டன. மன்னர் எழுந்து வரவில்லையே என்று தாதிகள் பள்ளியறையுட் புகுந்து மன்னரை எழுப்புகின்றனர். அப்போதுதான் மன்னர் காலமாகிவிட்டார் என்பது தெரியவந்தது.

மூன்றாவதாகவுள்ள பள்ளியெழுச்சியும் இவ்வாறே விபரீதமாகிவிடுகின்றது. பரதன் கேகய நாட்டினின்று திரும்பிவந்து தகப்பனுருக்குரிய அந்தியச்சடங்குகளைச் செய்தானபின் பட்டாபிஷேகஞ் செய்விப்பதற்கு உரிமையுடையவர்கள் பரதன் மன்னனாகவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். ஆனால் பரதன் "அபிஷேகத்திரவியங்களுடன் காட்டிற்குச் சென்று இராமனை அழைத்து பட்டாபிஷேகஞ் செய்விப்பேனேயொழிய, நான் பட்டங் கட்டிக் கொள்ளமாட்டேன்" என்று அவர்களை அனுப்பிவிட்டு, எப்பொழுது பொழுதுவிடியும் என்று இராமனையே நினைந்துகொண்டு படுத்திருக்கிறான். பொழுதுவிடியுமுன் சூதமாகதர்கள் அவனுடைய பள்ளியறையின் வாசலிலே வந்து "பூபாலா! எழுந்திராய்!" என்று பள்ளியெழுச்சி பாடி மங்கள வாத்தியங்களை வாசிக்கிறார்கள். பரதன் படுக்கையினின்று திடுக்கிட்டு எழுந்து, "நான் இல்லை ராஜா" என்று காதைப்பொத்திக்கொண்டு, தன்பக்கத்திலேயிருந்த சத்துருக்கினனிடம், "கைகேயி இழைத்த கொடுமையைப் பார்த்தாயே!" என்று கூறி வருந்துகிறான்.

KERMES INDICA

கர்மஸ் இன்டிகா

—:o:—

க்ஷயம் இழுப்பு (Asthma) இருமல், கக்குவான், குத்திருமல், ப்ராங்கைடீஸ், நியூமோனியா முதலிய நோய்களுக்கும் இன்னும் சுவாசக்குழாய்கள், சுவாசப்பை சம்பந்தமான சகல வியாதிகளுக்கும் சிறந்த மருந்தென்று வைத்திய நிபுணர்களால் ஆமோதிக்கப்பட்டது.

கபத்தை வெளியாக்கும் தன்மையுடையது. கோழையைச் சுலபமாய் இருமி வெளிப்படுத்தி இருமலைக் குணமாக்கி மார்பு விலாபக்கத்திலுள்ள வலியைப்போக்கி இழுப்பைக் குணமாக்குகிறது.

மருந்துகள் எல்லா ஊர்களிலும் எல்லா இங்கிலீஷ் மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

"THE KAUSALYA PHARMACEUTICALS Ltd.,"
19, Sankurama Chetty St., G. T. Madras.

பள்ளியெழுச்சி பாடும் வழக்கத்தை வால்மீகி முனிவர் இவ்வாறு பயன்படுத்திக்கொண்டதைப்போலவே, 'தைந்நீராடல்' என்னும் பழைய வழக்கத்தையும் மிகவும் அருமையாக அமைத்திருக்கிறார்.

சீதையோடும் இலக்குவனோடும் இராமர் முனிவர்களுடைய ஆச்ரமங்களில் பத்து வருஷகாலம் இனிதாகப் பொழுதுபோக்கிய பின், அகஸ்திய முனிவரைத் தரிசித்து, அவருடைய அனுமதியைப்பெற்று, கோதாவரிக் கரையில் ஐந்து ஆலமரங்கள் இருந்த ஸமபூமியில் பர்ணசாலை அமைத்துக்கொண்டு பதினான்கு வருஷம் எப்போது முடியும் என்று காத்திருக்கிறார். பதின்மூன்றாவது வருஷம் முடியப்போகின்றது. மார்கழிமாதம்; அதிகாலையில் எழுந்து, இலக்குவனும் சீதையும் உடன்வர, கோதாவரிக்குச் செல்கிறார். போகும்போது, இலக்குவன், மார்கழி மாதத்தில் இயற்கையன்னை துயிலெழுவதுபோன்று காட்சியளிப்பதைக்கண்டு இராமரிடம் அக்காட்சியை வருணித்து மகிழ்கிறான். பேச்சோடு பேச்சாக, பரதனுடைய நினைவு வந்துவிடுகின்றது. "அரசர்களும் அரச குமாரர்களும், சூதமாகதர்கள் பள்ளியெழுச்சி பாடக் கேட்டு எழுந்திருந்து சுகமாக வெந்நீரில் ஸ்நானஞ் செய்வார்கள். இவ்வாறு அமைந்த அரசபோகங்களை எல்லாம் துறந்து, பரதன் தவவேடம் பூண்டு எவ்வாறுதான் இந்தக் குளிரிலே ஸரயூ நதிக்குச்சென்று நீராடுகின்றானோ?" என்று பிரலாபிக்கிறான். பரதனுடைய அரிய குணங்களை நினைந்ததும் இத்தகைய குணமுடையோனுக்கு எவ்வாறு இத்தகைய தாய் வாய்த்தாள் என்று கைகேயியை நிந்தனை செய்கிறான். தாயை நிந்திப்பது இராமருக்குப் பிடிக்கவில்லை.

"லக்ஷ்மணா! ஏன் இந்தப்பேச்சு? இக்ஷ்வாகு நாதனான அந்தப் பரதனைப்பற்றியே பேசிக்கொண்டிருப்போம். அவன் தலைவணங்கி என்னை வேண்டியபோதும், நான் அவனுடன் செல்ல மறுத்துவிட்டேனே! எப்போது அவனுடனும் சத்ருக்கினனுடனும் உன்னுடனுமாகச் சேர்ந்திருப்பேனோ?" என்று பிரலாபித்துக்கொண்டே இராமர் கோதாவரிக்கரையை அடைகிறார்.

அன்று ஸ்நானஞ்செய்து திரும்பிவந்து பர்ணசாலையிலே இராமன் வீற்றிருக்கும்போதுதான் சூர்ப்பணகை அங்கே வருகிறாள்— என்று மேலே கதையை நடத்துகிறார் வால்மீகி முனிவர்.

இவ்வாறு வனவாஸத்திலே இராமர் லக்ஷ்மணனுடன் சீதையுடனும் எவ்வாறு சுகமாக வாழ்ந்தார்கள் என்பதையும் சூர்ப்பணகையின் வருகைக்குமுன், எவ்வளவு ஆவலோடு வனவாஸம் முற்றுப்பெறுவதை எதிர்பார்த்தார் என்பதையும் விளக்குவதற்கு ஏற்ற ஸந்தர்ப்பமாக மார்கழி மாதத்திலே நீராடச் செல்லும் வழக்கத்தை உபயோகப்படுத்தியிருக்கிறார் ஆதிகவியான வால்மீகி முனிவர் என்பது அறிந்து இன்புறத்தக்கது.

Apparel Oft Proclaimeth a Man!

Truthful
READY MADE CLOTHES

ரெடிமேட் ஆடைகளுக்கு பெயர் பெற்றது 'ட்ரூத்புல்'

இந்தியாவில் எங்கும் ஏராளமான ஜனங்கள் உபயோகிக்கிறார்கள்.

அவர்கள் அனைவருக்கும் எங்கள் மனமார்ந்த

பொங்கல் வாழ்த்துக்கள்

ட்ரூத்புல் மான்யுபாக்ச்சரிங் கம்பெனி மதுரை.

சித்திரமும், கற்பனையும்

"ஸ்ரீரா"

•

கதை, கட்டுரை எழுதுவது எவ்வளவோ சுலபம்தான், சோம்பேறிகளின் வேலை என்றெல்லாம் நினைத்திருந்தேன். அடுத்த இதழுக்கு எழுதவேண்டுமென்று பேனாவை எடுத்து வைத்துக்கொண்டு உட்கார்ந்தேன்; என்ன எழுதுவது என்றே தெரியவில்லை. ஏதாவது தோன்றினால்தானே? தலையைச் சொறிந்து எரிச்சலெடுத்துவிட்டது; பேனாவிலிருந்த மசியையெல்லாம் உதறி மெழுகியாகிவிட்டது; பலன் ஒன்றுமில்லை.

பெரிய ஆசிரியர்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறேன். ஒருவருக்குக் கற்பனையைக் கிளப்பக் கறுப்புப் பூனை அவசியமாயிருக்கும். அதைக்கண்டமாத்திரத்தில் பேனா துடித்து, இலக்கியத்தை வாரி இறைக்கும். இன்னும் சிலபேருக்கு வேப்பமரத்தைப் பார்த்தவுடன் மூளை அதிகமாக வேலைசெய்யும். சூடான டீ தயார்செய்து தர்மோஸ்கூஜாவில் வைத்துக்கொண்டு பேனாவைத் திறப்பவர் பலபேர்.

"இயற்கை" என்று ஏதேதோ சொல்லிக்கொள்கிறார்களே, அதுவும் பேனாவை நடனமாடவைக்கும், சில சமயங்களில். சில ஆங்கில ஆசிரியர்களின் வீட்டில் நாய்கள் இருக்கும். நாய்கள் என்றால், நாய்களாகவா இருக்கின்றன-அவைகளுக்கு இருக்கும் பவிஷு நமக்குக் கிடையாது! ஸ்வீகாரக்குழந்தைகள்தான்! அந்த ஸ்வீகாரக் குழந்தைகள் மேஜையின் அருகே வந்து, ஆசிரியரின் கையை நக்கிக் கொடுத்தால், கற்பனைத்தென்றல் இலவசமாக வேலைசெய்யும்.

நேற்று இன்னொரு விநோத சம்பவம் கேள்விப்பட்டேன். ஸ்பெயின்தேசத்தில் நரான்கோ (Naranco) என்றொரு பேராசிரியராம். அவர் மேஜையினருகே உட்கார்ந்தவுடன் வேலைக்காரனைக் கூப்பிடுவாராம். வேலைக்காரன் ஓடிவந்து அறையின் மூலையிலிருக்கும் ஒரு விசையைத் திருப்பிவிடுவானாம். உடனே ஒரு பேரிரைச்சல் ஏற்படுமாம். எழுதி முடியும் வரை அது ஓயாதாம். அது அவருக்கு ஒரு வசதி—விநோதமான வசதிதான்.

என்னையும், நானே பெரிய ஆசிரியனென்று நினைத்துக்கொண்டு, யோசனைசெய்து பார்த்தேன், ஏதாகிலும் இம்மாதிரி வசதிகள் எனக்கு உண்டா என்று. ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை!

பேனாவை மூடிப் பையில் போட்டுக்கொண்டு நண்பன் நடராஜனைப் பார்க்கக் கிளம்பினேன். நடராஜன் எங்களூர் காலேஜில் சரித்திர ஆசிரியன். அடித்துப்பிடித்து அவனைச் சிநேகம் பிடித்துவிட்டேன். இப்பொழுது ரொம்ப ஆப்தனாகிவிட்டான்: மனம் வருந்தி ஒன்றும் தோன்றாதிருக்கும் வேளையில் அவனிடம் போவேன். ஏதாவது பேச ஆரம்பித்துவிடுவான். எல்லாம் மறந்துபோகும். நடராஜன் இல்லாவிட்டால் வாழ்க்கையே நடக்காது போலிருக்கும். அது முழுவதும் உண்மைதான்!

நான் அவனது அறைக்குள் நுழைந்த சமயம் அவன் உல்லாசமாகச் சிட்டி அடித்துக்கொண்டிருந்தான். அவனது சகதர்மிணி "டைப் ரைட்டிங்" யந்திரத்தைச் சோதனை போட்டுக்கொண்டிருந்தாள். அதன் பாகங்களைப்பற்றிச் சுருக்கமான விரிவுரையொன்று நிகழ்த்திக்கொண்டிருந்தான். பேனாவின் மேலிருந்த கோபத்தை மறந்துவிட்டேன்!

நடராஜனுக்குக் குழந்தை குட்டி என்று இன்னும் ஒன்றும் பிறக்கவில்லை. அவனுக்குச் சித்திரங்கள், படங்கள், ஓவியங்கள்தான் குழந்தைகள் என்று சொல்லலாம். சுவர் முழுதும் கணக்கற்ற படங்கள். அதோ அங்கே கவி தாகூரின் படம்; இங்கே பங்கிம் சந்திரர், அதோ ஒரு சினிமா ராணி; இதோ அச்சியந்திரத்தைக் கண்டுபிடித்த மஹான்; நெப்போலியன்; மஹான் லூயி பாஸ்டர்; லியோனார்டோ-டி-வின்ஸி—எதைத்தான் சொல்லுவது-ஒன்று பாக்கி கிடையாது! விடுமுறைகளில் வெளியூர்களுக்குச் சென்று போட்டோபிடித்த ரம்மியமான காட்சிகள். அவனுக்கிருக்கும் ஆசைக்கு உலகத்தை வெறுக்கும் என்னைப் போன்றவர்களுக்கு அவனுடன் நட்பு கொள்வதற்கு அர்கதையேயில்லை.

அறைக்குள் நுழைந்தவுடன் செல்லமாகக் கூப்பிட்டான் நடராஜன். நாற்காலியை இழுத்துப்போட்டு உட்கார்ந்தேன். கண்களைச் சுவர்களின்மேல் ஓடவிட்டேன். அன்று சுவருக்கு ஏதோ புது அழகு ஏற்பட்டிருந்தது போல் என் மனதில் பட்டது. அதன் காரணமென்னவென்று கண்களையே கேட்டேன். அவை மறுபடி சுவரின் குறுக்கும், நெடுக்குமாக இரண்டுமூன்று முறை ஓடின. கடைசியில் வெற்றி கிடைத்தது. மற்றப்படங்களுக்கு நடுநாயகமாக ஒரு புதிய ஓவியம் அமர்ந்திருந்தது. ஆக்ருதி, அழகு இரண்டிலும் உயர்ந்ததாகவே இருந்தது.

"யாரெழுதிய சித்திரம்? புதியதாக இருக்கிறதே. அர்த்தம் நிரம்பித்தானிருக்கிறது" என்றேன் நடராஜனைப்பார்த்து. அவன் ஒரு சிரிப்புச்சிரித்தான். படத்தைக் கிட்டநெருங்கிப் பார்க்கலாமென்ற எண்ணத்துடன் எழுந்தேன். கையைப்பிடித்து உட்காரவைத்தான் நடராஜன். கொஞ்சநேரம் மௌனம்.

"அந்தப் புதையலை எங்கிருந்து எடுத்தாய்?" என்று கேட்டேன். ஒரு அழகிய கரம்—கரத்தில் ஒரு புண்—புண்ணிலிருந்து வடியும் உதிரம்—மிக அழகிய சித்திரம்தான். "சோகம் அதிகம்!" என்றேன்.

"அது எங்கிருந்து கிடைத்ததென்பது அவ்வளவு முக்கியமல்ல" என்று மழுப்பினான் அவன். "பின், எதுதான் முக்கியம்?" என்று ஆத்திரத்துடன் கேட்டேன்.

"அச் சித்திரத்துக்குப்பின் மறைந்திருக்கும் கதை. அது எனக்குத் தெரியும்—உனக்குத் தெரியாது" என்றான் நடராஜன். குழந்தை மார்பு தட்டிப்பேசுவதுபோலிருந்தது அவனது பேச்சு. எனக்கும் ஆவல் அதிகமாகிவிட்டது.

"அதென்ன அவ்வளவு முக்கியம்? கதையைச் சொல்லமாட்டாயா?" என்று கேட்டுவிட்டேன்.

ஒரு கனைப்புக் கனைத்துவிட்டு. "அதற்குத் தானே இந்தப் பீடிகையெல்லாம்!" என்றான். திடீரென்று அவனது முகத்திலிருந்து குதூகலம் மறைந்து, சோகம் அவனை ஆட்கொண்டது. புருவங்களின் போக்கிலிருந்து அவன், தான் சொல்லப்போகும் கதையுடன் லயித்துவிட்டான் என்று தெரிந்தது. அவன் சொன்னபடியே இதோ கதை!

2

வீரன் சிவாஜி, சத்ரபதி சிவாஜியாகிவிட்டான். அவனதுகொடி சுதந்திர வீரத்தைக் காட்டி நின்று, எங்கெங்கும் பறந்த காலம். தக்ஷிணத்து முகம்மதிய சுல்தான்களெல்லாம் அவன் முன் கை கட்டி, வாய்பொத்தி நின்ற காலம்.

காசிநாத், பண்டிட்ஜி சிவாஜியின் அரண்மனை வைத்தியர். ஆப்த நண்பரும்கூட. மிகவும் சாந்தகுணமுடையவர்.

ஒரு நாள் பிற்பகல் காசிநாத் தனியே தன் அறையில் உட்கார்ந்திருந்தார். அறைக் கதவு அரைகுறையாக மூடிக்கிடந்தது. கண்களை மூடி ஆழ்ந்த யோசனையுடன் பக்கத்திலிருந்த தலையணை மேல் சாய்ந்துகொண்டிருந்தார் பண்டிட்ஜி.

திடீரென்று அறைக்கதவு வேகமாகத் திறந்தது. அலங்கோலமாக ஒரு உருவம் அறைக்குள் படபடப்புடன் நுழைந்தது. காசிநாத் பரபரப்புடன் எழுந்து உட்கார்ந்தார்.

"பண்டிட்ஜி, பண்டிட்ஜி......ஹா......தாங்க முடியவில்லை. சீக்கிரம்......" என்றுகொண்டே கீழே சாய்ந்தது அவ்வுருவம். காசிநாத் எழுந்து சென்று அவ்வுருவத்தை எழுப்பி உட்கார வைத்து அதன் முகத்தை உற்றுநோக்கினார்.

"ஹா......மானோஜியல்லவா? ஏன் அப்படி அலறினாய்......? காரணமென்ன?" என்றுகொண்டே அவனது தலைமயிரைக் கோதிவிட்டார்.

மானோஜி சிவாஜியின் ஆப்த நண்பன். படைத்தலைவனும்கூட. வீரமும், அழகும் நிறைந்தவன். சிவாஜி தேச பரிபாலனம் ஆரம்பித்தது அப்பொழுதுதான். அதனால் மானோஜிக்கும் ஓய்வு ஏற்பட்டிருந்தது.

காசிநாத் கேட்ட கேள்விக்கு மானோஜி மறுமொழி கோடுப்பதேபோல் தன்வலது கரத்தை அவர் முன்பாக நீட்டி முழங்கைக்குக் கீழே ஒரு இடத்தைச் சுட்டிக்காட்டி, "கனல்போல எரிகிறது......ஹா... ...தாங்கமுடியவில்லை...... பண்டிட்ஜி, அந்தப்பாகத்தில் சதையைவெட்டி எடுத்துவிட வேண்டியதுதான்.....சித்திரவதையாகவிருக்கிறது......" என்று ஆத்திரத்துடன் கூறினான் மானோஜி.

காசிநாத் கரத்தைப் பிடித்துப் பார்த்தார். பச்சிலையொன்றைப் பிழிந்து அந்த இடத்தின் மேல் தடவிவிட்டு, கரத்தைத் தூக்கிப்பிடித்து வெளிச்சத்தில் பார்த்தார்.

"கரத்தில் ஒன்றும் கோளாறில்லையே. நல்ல புஷ்டியான புஜமல்லவா? என்ன, மானோஜி, உளறுகிறாய்?" என்று அன்புடன் கேட்டார் காசிநாத்.

மானோஜி விரக்தியுடன் சிரித்தான். "நீங்கள் நம்பமாட்டீர்கள்... பார்த்தாலும் தெரியாது... ஆனால்...... ஆனால் அது கொடுக்கும் வலி...... அம்புகொண்டு குத்துவதுபோலல்லவா இருக்கிறது. சதையை வெட்டி எடுக்கத்தான் வேண்டும்" என்று அடுக்கிக்கொண்டே போனான் மானோஜி. காசிநாத் மற்றுமொரு முறை கரத்தை மேலே உயர்த்திப் பார்த்தார். வைத்திய பீஜத்தில் பரம்பரை, பரம்பரையாக இருந்து திளைத்த அவருக்கு இது மிக அதிசயமாகவே இருந்தது.

"ரத்த ஓட்டம் நன்றாக இருக்கிறது. ரத்தம் எங்கும் கட்டுப்படவில்லையே, ஆனால் இப்படிப் பிதற்றுகிறானே......" என்று நினைத்தார் காசிநாத்.

"நீங்கள் நம்பவேமாட்டீர்கள். நாழிகை ஆக ஆக வலி தாங்கமுடியாமல் போகிறது. இடது கை எனக்கு வாகில்லை. இருந்தாலும் வெட்டி எடுத்திருப்பேன்...... ஆனால், உடனே மருந்து போட்டுக்கொள்ள இங்கேதான் வர வேண்டும் என்று தெரியும். புண்ணை உண்

டாக்குவதற்கு முன் இங்கே வரலாமே என்று தான் வந்தேன்" என்று விவரமாகக் கூறினான் மானோஜி.

"எல்லாம் சரிதான்...... ஆனால் திடமாக இருக்கும் ஒரு அழகிய புஜத்தைப் புண்படுத்த எனக்கு மனமில்லை. கோளாறு இல்லாத கரத்திற்கு அனாவசியமாக எதற்குத் தீங்கு செய்யவேண்டும்? அந்தப் பாபம் என்னைச் சேரும். என்னால் உன்னை நம்பவே முடியவில்லை. எனக்கே பைத்தியம் பிடித்துவிடும் போலவல்லவா இருக்கிறது?" என்றார் காசிநாத்.

மானோஜி வலி தாங்கமுடியாமல் முகத்தைச் சுருக்கினான். காசிநாத் அவனை ஏற இறங்கப் பார்த்தார். அவனுக்கு ஏற்பட்டிருக்கும் வலி உண்மையானதே என்று ஒரு கணம் அவருக்குத் தோன்றிற்று. வலியின் காரணம் என்னவென்று அவருக்கே புலப்படவில்லை.

கொஞ்ச நேரம் யோசனை செய்துவிட்டு "நான் சதையை வெட்டி எடுக்கமாட்டேன். நீயே உடைவாளால் வெட்டி எடுத்துவிடு. நான் கையைப் பிடித்துக்கொள்கிறேன். சதையை எடுத்தவுடன் ரஸம் போட்டுக் கட்டி விடுகிறேன். புதிய கற்பூர இலைகள் இருக்கின்றன. அப்புறம் புண் ஆறிவிடும்" என்றார் காசிநாத்.

அவர் இதைச் சொல்லி முடிக்கு முன்பே மானோஜி உடைவாளை உருவி, சதையைக் கீறி விட்டான். காசிநாத் அவனது கரத்தை உற்று நோக்கினார். மிகவும் கஷ்டப்பட்டு வாகில்லாத இடது கரத்தினாலேயே சதையை வெட்டி எடுத்துவிட்டான் மானோஜி. காசிநாத் ரஸம் தடவிக் கட்டிமுடித்தார். மானோஜி திருப்தியுடன் பெருமூச்சுவிட்டான்.

"இப்பொழுது துளிக்கூட வலியில்லை, பண்டிட்ஜி. அந்தப் பிணச்சதையுடன் வலியும் மறைந்துவிட்டது. என்னை அது கொஞ்ச நாளாக வாட்டி வதக்கிவிட்டது பண்டிட்ஜி. ரொம்ப வந்தனம்" என்றவாறே சந்துஷ்டியுடன் வெளியே சென்றான் மானோஜி. காசிநாத் இன்னும் திகைப்புடனேயே இருந்தார்.

ஃ ஃ ஃ

சுமார் ஒரு மாதம் கழிந்து ஒரு இரவு, வானம் சில பாகங்களில் மேகம் நிறைந்தும் சிலவிடங்களில் நீலம் திகழ்ந்தும் இருந்தது. சப்த ரிஷிக்கூட்டம் பலகணியின் வழியே தெரிந்தது. காசிநாத் அசைவற்று உட்கார்ந்திருந்தார். விளக்கு மினுக்கு மினுக்கென்று எரிந்து கொண்டிருந்தது ஒரு மூலையில். வாசற்படியருகே காலடிச் சப்தம் கேட்டது. காசிநாத் கதவை நோக்கினார். எதிர்பார்த்தபடி கதவு திறந்தது. மானோஜி படபடப்புடன் உள்ளே நுழைந்தான்.

"ஹா!...... அந்த வலி...... என்னைக் குத்திக் கொல்ல மறுபடி வந்துவிட்டது பண்டிட்ஜி. முன்னையிலும் அதிகமாக இருக்கிறது. தாங்கவே முடியவில்லை. இத்தனை நாழிகை அதன்மேல் நெருப்புத் தணலை வைத்துக் கொண்டு உட்கார்ந்தேன். ஆனால் அது மிகவும் சொல்ப பரிஹாரமாகவே இருந்தது. சதையை எடுக்காவிடில்..." என்றுகொண்டே மானோஜி கீழே உட்கார்ந்தான்.

காசிநாத்தை வேதனையும் ஆச்சரியமும் ஒருங்கே கலந்து வாட்டின. அவரால் பேச முடியவில்லை. எழுந்து சென்று விளக்கைத் தூண்டிவிட்டுத் திரும்பிவந்து உட்கார்ந்து கொண்டு அவனது கரத்தைப் பார்த்தார். முழுவதும் ஆறிப்போன புண்ணின்மேல் மெல்லிய சதை மூடி, சிறு கொப்புளம் தெரிந்தது. அது தணலை வைத்ததனால் ஏற்பட்டது என்று பண்டிட்ஜிக்குத் தெரிந்துவிட்டது. அவன் சதையை எடுக்கவேண்டுமென்று கதறுவது அவருக்கு ஆச்சரியத்தையே கொடுத்தது.

"புண்தான் ஆறிவிட்டதே; மானோஜி...... கொப்புளம் தானாகவே வாடிவிடும்......... எனக்கு ஒன்றுமே புரியவில்லையே..." என்றார் காசிநாத்.

"புரியாது......ஹா......" என்றுகொண்டே, மானோஜி உடைவாளை உருவிச் சதையைக் கீறினான். சதை விலக விலக, அவனது முகத்திலிருந்து, வலி குறைந்ததுபோன்ற உணர்ச்சி அவனுக்கேற்பட்டது தெரிந்தது. காசிநாத் அவனருகில் பச்சிலைகளுடன் அசைவற்று நின்றார்.

"உஸ்......தீர்ந்தது வலி......ஆனால்.........!" என்றுகொண்டே மானோஜி உடைவாளைப் பக்கத்திலிருந்த கிண்ணத்தில் அலம்பினான்.

"ஆனால் என்ன?" என்று ஆவலுடன் கேட்டார் காசிநாத். மானோஜி சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டுப் பிறகு, "ஆனால்... ஒருமாதம் கழித்து......ஹா......நினைப்பதற்குக் கூட பயமாக இருக்கிறது......ஒரு மாதம் கழித்து இங்கே வருவேன். கட்டாயம் வரவேண்டி இருக்கும். வலிதான் திரும்பவும் கட்டாயம் வந்துவிடுமே, பண்டிட்ஜி, என்னை வாட்டுவதற்கு?" என்று அங்கலாய்த்துக் கொண்டான்.

காசிநாத் அவனது முகத்தை உற்று நோக்கினார். தாம் கனவுலகத்திலிருப்பதாகவே அவருக்குத் தோன்றியது. மானோஜி மௌனமாக வெளியே சென்றான்.

காற்று சலனமற்று மௌனமாக இருந்தது. அரண்மனையில் பேரிகை முழக்கம் கோபத்துடன் த்வனித்ததுபோலிருந்தது. பகலின் கோலாஹலம் இரவின் சந்தேகத்திற்கு இடம் கொடுத்து வெகு நாழிகையாகிவிட்டது.

ஃ ஃ ஃ ஃ

அந்த ஒருமாதமும் ஓடி மறைந்தது. இன்றோ, நாளையோ என்று மானேஜியின் வரவை எதிர்பார்த்து, வருத்தத்துடன் உட்கார்ந்திருந்தார் பண்டிட்ஜி. புண் ஆறி, அவனுக்கு வலி ஏற்படாமலிருந்தால் நல்லது என்று அவர் ஜபம் செய்துகொண்டிருந்தார். இரண்டு, மூன்று நாட்களும் ஆகிவிட்டன. மானேஜியைக் காணோம். "அவனுக்கு வலி திரும்பிவரவில்லை; சந்தோஷம்" என்று நினைத்தார் காசிநாத்.

நான்காம்நாள் சாயங்காலம். ஒளி மறைந்தும், மறையாமலும் இருந்த வேளை. மானேஜியின் வேலைக்காரன் ஓலைச்சுவடிகள் சிலவற்றைக் காசிநாத்திடம் கொணர்ந்து கொடுத்துச் சென்றான்.

காசிநாத் ஆவலுடன் கடிதத்தை எடுத்துக்கொண்டு, விளக்கைத் தூண்டிவிட்டு அதனருகே உட்கார்ந்திருந்தார். நான்கைந்து ஏடுகள் இருந்தன. புதிதாக எழுதப்பட்ட கடிதம் என்று விளங்கத்தெரிந்தது. ஆணியின் வீர்யம் ஓலைகளில் தெளிந்து நின்றது. காசிநாத் புருவத்தை நெறித்துக்கொண்டு படிக்கத் தொடங்கினார். கடிதத்தின் போக்கு, பின் வருமாறு இருந்தது.

"பண்டிட்ஜிக்கு வணக்கம். ஒரு மாதம் கழித்துக் கட்டாயம் வருவேன் என்று அப்பொழுது சொல்லிப்போனது தங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதன்படி நான் வரவில்லையே யென்று தாங்கள் அதிசயிக்கலாம். புண் ஆறி, பூர்ணகுணமடைந்துவிட்டேன் என்றுகூட நினைக்கலாம். ஆனால் அப்படி ஒன்றும் நடக்கவில்லை.

வலி என்றுமில்லாத தீவிரத்துடன் இப்போது என்னை வாட்டி வருகிறது. முன்பொருமுறை சொல்லியதுபோல் நெருப்புத் தணல் அவ்விடத்தில் வைத்துக்கொண்டுதான் கடிதத்தை எழுதுகிறேன். என் ஆவி என்னைப்பிரிந்து செல்ல யத்தனிப்பதற்குப் புண் தூண்டுகோலாக இருக்கிறது.

நான் முன்போல, வலியைப் போக்கச் சதையை அறுத்துவிடாமல், அதன் வழியே விட்டிருப்பதும் தங்களுக்கு அதிசயத்தையும், வருத்தத்தையும் ஒருங்கே கொடுக்கலாம்.

இனி வலியைப்போக்க முயற்சி ஏதும் செய்யப்போவதேயில்லை. அது என்னைப் பூர்ணமாக விழுங்கும்வரை அதை அதன் போக்கிலேயே விட்டுவிடத்தான் போகிறேன். இதற்குக் காரணமென்னவென்று நீங்கள் யோசிக்கலாம். அந்தக் காரணத்தையும், வலி ஏற்பட்ட விதத்தையும் இதோ சொல்கிறேன். அதைத்தங்களிடமிருந்து மறைத்துவைக்க என் ஹிருதயம் கோபிக்கிறது. நிமிஷங்கள் என்னை விழுங்குகின்றன. வலி அதிகரிக்கிறது! எனினும் என் தாபக் கதையைச் சொல்லிவிடுகிறேன்.

இரண்டாண்டுகளுக்கு முன்புதான் நான் பவானியை மணந்தேன். அது இருவருக்கும் மனமுவந்த மணம்தான். பவானியின் அன்பு வெகுநாட்கள்வரை என்னை அமிருதக்கடலில் ஆழ்த்தி, இன்பமூட்டி வந்தது. அவளது காதல் என் ஹிருதயத்தை ஒளி நிறையச் செய்தது. ஆனால் என் வாழ்க்கை குலைய நானே காரணமாகிவிட்டேன்.

ஆறு மாதங்களுக்கு முன்புதான் நான் அவள் பேரில் சந்தேகம்கொண்டேன். சந்தேகத்தின் காரணம் என்னவென்று எனக்கே தெரியாது. என்னவோ சந்தேகம் ஊன்றிப் பதிந்துவிட்டது.

அந்தக் கணத்திலிருந்து அவளது இன்ப அணைப்பிற்கும் கொஞ்சலுக்கும் இணங்கி இருந்த போதிலும், உள்ளடங்கிய கோபத்துடன்தான் இருந்தேன். வெறுப்பு அதிகமாகிவிட்டது. அவளது முகாலோபனமே எனக்கு விஷமாகிவிட்டது. தனிமையை அது வரையில் வெறுத்துவந்த என் உள்ளம், தனிமையை நாடித் தவங்கிடக்கத் தொடங்கியது.

இவையெல்லாம் காரணம் கூறமுடியாத சமாசாரங்கள். மனிதனுக்கு விதியின் பயனாய் ஏற்படும் கனல்கள்.

பெண்மைக்கு அடைக்கலமாவதற்குச் சாதாரணமாக எந்தமனித உள்ளமும் காத்துநிற்கும். என் உள்ளமும் அதற்காக வெகு நாட்கள் காத்திருந்தது. அடைக்கலமும்பெற்று, அதில் குதூகலத்துடன் திளைத்தது. இப்போது கசப்புடன் விடுதலையைப் பெறவேண்டியது.

இதோ, பலகணியின் வழியே கிருஷ்ணையின் இளம்அருவி தெரிகிறது. அதன் ஜிலுஜிலுப்பு என் மனதில் பொருமையூட்டுகிறது. எனது வாழ்வின் வஸந்தம் பறந்து மறைந்துவிட்டது. மலைகளினூடே தவழ்ந்துசெல்லும் கிருஷ்ணை மாத்திரம் ஆண்டுக்கொருமுறை வஸந்தத்துடன் இழைந்து குலாவுகிறது. என்னால் அதைப்பார்த்துச் சகிக்கமுடியவில்லை!

மூன்று வருத்தம் நிறைந்த மாதங்கள் சக்கரம்போல் சுழன்றோடிவிட்டன. ஒரு நாள் இரவு. சந்தேகம், என் அருமைப் பவானியின் மேல் சந்தேகம், என்னை அணுஅணுவாக அறுத்தது.

அன்று மாலை பவானி என்னருகிலில்லை. இருந்திருந்தால் அப்பொழுதே என்ன செய்திருப்பேனோ தெரியாது. நல்ல வேளையாகத் தன் தோழி வஸந்தியுடன் நந்தவனத்திற்குப் போய்விட்டாள்.

ஜம்மியின்
லிவர்க்யூர் மூலம்
புனர்ஜன்மம்

ஜம்மியின்
லிவர்
க்யூர்

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி நோய்களை குணப்படுத்துவதில் தாமதமோ, அசட்டையோ செய்வது ஆபத்தாகும். நோய் கண்ட மாத்திரத்தில் 36 வருஷ காலமாக கீர்த்தி பெற்ற இச்சஞ்சீவியை உபயோகியுங்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும் அல்லது

ஜம்மி வெங்கட்ரமணய்யா & ஸன்ஸ்:
1/1, பிராட்வே ரோட், மைலாப்பூர், மதராஸ்,
[illegible], கல்கத்தா, [illegible], பெங்களூர்,
திருச்சிராப்பள்ளி.

பண்டிட்ஜி, புண்ணின் ஜ்வாலையும், மனத்தின் கொதிப்பும் கலந்தோடுவது எனக்கு இப்போதுதான் தெரிகிறது!

தனியே அறையைச்சுற்றிச் சுற்றி வந்தேன். ஒன்றும் ஓடவில்லை. கண்ணன் படம், வில் வளைத்த ராமனது ஓவியம், பவானியின் உயிர் கொண்ட சித்திரம் எல்லாம் தனிமையை நினைவூட்டி, விரக்தியைக்கொடுத்தன. பவானியைப்பற்றி விகல்பமாக நினைத்துக் கொண்டே ஒரு முறை சுற்றினேன்.

மகாராஜா எனக்குப் பரிசளித்த வெள்ளிப் பெட்டியைப் பவானியிடம்கொடுத்திருந்தேன். அது அறையின் மூலையில் கிடந்தது. ஏதோ, ஆவேசம் வந்தவன்போல் பெட்டியைத் திறந்தேன். முத்துச் சலாகைகளை ஒதுக்கித் தள்ளி விட்டு, அடியில் சோதனை போட்டேன். எதற்காக அப்படிச் செய்தேன் என்பது எனக்கே தெரியாது, அந்த க்ஷணத்தில்.

கோல வரம்பிட்டு, அழகான ஓலைச்சுவடி கண்ணில் பட்டது. ஏதோ கடிதங்கள்! ஆம்... ஆம்!

கடிதங்களை அவதியுடன் பிரித்துப்படித்தேன். ஹா! என் குலை நடுங்கிற்று. கோபம் என்னை அன்றே விழுங்கிவிடும்போல் இருந்தது. ஆனால் விழுங்கவில்லை. பாபகர்மத்திற்குப் பாத்திரனாக்குவதற்காக விட்டுவிட்டது!

ஆம்! தெரிந்துவிட்டது...ஜலேல்கரின் எழுத்தாணிதான் அதை எழுதியது....ஆம்! நண்பன் ஜலேல்கர்...அவன் அவளுக்குஎழுதிய காதல்... ஹா! நினைக்கக்கூட முடியவில்லை. இருவரில் யாராகிலும் எதிரிலிருந்திருந்தால் ஒரே வீச்சில் தீர்த்திருப்பேன்.

பவானி வந்துவிடப்போகிறாளே என்று பரபரப்புடன் கடிதத்தை வைத்துப்பெட்டியை மூடினேன். அவைகளை நான் பார்த்தது தெரியக்கூடாது என்று யோசனை!

பிற்பகலின் சூன்யம், அந்தியின் போட்டிக்கு இடம்கொடுத்து மறைந்து பல நாழிகைகள் கடந்துவிட்டன. மலர்கள் ஆடுவது மனச் சஞ்சலத்தை நினைப்பூட்டிற்று. அசைவற்று ஆசனத்திலுட்கார்ந்தேன். ஏதோ நினைவில் உடைவாளை உருவினேன். மறுபடி உறைக்குள் போட்டேன். பூமிதேவியின் ஆகர்ஷணம் என்னை ஒன்றும் செய்யாமலிருந்தது எனக்கு ஆச்சரியத்தைக்கொடுத்தது.

சதங்கையொலியைக் கேலியாக முன்னே விட்டு, பவானி சிரித்துவந்தாள். சாதாரணமான முக பாவங்களை வரவழைத்துக்கொண்டேன். பலகணியோரம் சென்று நின்றேன்.

பவானி தொடர்ந்து நடந்துவந்தாள். என் உள்ளத்திலிருந்த சோகத்தை முகம் தெரிவித்துவிட்டது போலிருக்கிறது; பவானி

என்னை அணைத்து வருத்தத்தின் காரணத்தை அன்புடன் கேட்டாள். ஒரு கணம் அவ்வணைப்பு எனக்குப் பூர்ணமான சாந்தியைக்கொடுத்தது. அந்த க்ஷண நேரம் புயலடித்து ஓய்ந்த சந்துஷ்டி என் மனதில் ஏற்பட்டது. ஆனால்......மறு கணம் கோபத்தையும், பழைய வெறுப்பையும் பிறிட்டு வரவழைத்துக்கொண்டேன்! எதற்காக? என் வாழ்க்கையையே குலைத்துக்கொள்வதற்காக; இன்பத்தை எரித்துச் சாம்பலாக்குவதற்காக!

எல்லாம் மாய்மாலமென்று கோபத்தை அடக்கிச் சும்மா இருந்தேன். பேச்சின் கனிவு அவளுக்கும், எனக்கும் இடையே ஏற்பட்டிருந்த ஆழத்தை அதிகமாகத் தோண்டி விட்டது; கோப அலையை முழக்கிவிட்டது. இரண்டு சொட்டுக் கண்ணீர்கூட உகுத்தாள். விக்கி விக்கி அழுதாள். அவளுக்கு ஆறுதல் சொல்லுவதுபோக, வெறுப்பை அதிகமாக்கிக் கொண்டேன்!

அவள் பெயர்கொண்ட தேவியின் கோயில் மணி அலங்காரமாக இசைத்தது. அதை நான் கவனிக்கவில்லை. என்னை வருத்தச் சந்திரிகையும் கிளம்பியது. பவானி தன் அறைக்குச்சென்று படுத்துவிட்டாள்.

இருட்டிப் பத்து நாழிகைகள் ஆகிவிட்டன. முரசொலிமாத்திரம் விட்டுவிட்டுக் கேட்டது. அரண்மனையில் ஓசையடங்கவில்லை. எனக்கு உறக்கம் வரவில்லை. எதற்கும் முடிவு உண்டல்லவா என்று நினைத்தேன். என்னை வதைத்த சந்தேகம் ஊர்ஜிதமானபிறகு நான்...அதற்கு முடிவுகட்டவேண்டுமென்று தீர்மானித்தேன். ஒரேவழி—வேறில்லை!

பவானியின் அறைக்குள் நுழைந்தேன். பலகணி திறந்துகிடந்தது. பட்டுப்படுதா அசைந்து கொண்டிருந்தது. வானவீதி மௌனமாக நின்று, அழகின் ஏக்கத்தை அள்ளி வீசிக் கொண்டு இருந்தது. தாரகைகளின் நடனம் என் கோபத்தை அதிகப்படுத்தியது. பஞ்சவடி வீழ்ச்சியின் மெல்லிய ஓசை இரவின் அசைவில் மிதந்து வந்தது. புராண காலம் ஞாபகத்திற்கு வந்தது. ராமன் சீதையை அக்னிப்பிரவேசம் செய்யச் சொன்னதைப் பற்றி அப்போது நினைத்துக்கொள்ளவில்லை!

பவானி தரையில் படுத்துக்கொண்டு அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தாள். குழந்தையின் களங்கமற்ற பாசம் அவளது முகத்தில் ஜ்வலித்தது. ஆனால் என்னால் அதை நம்ப முடியவில்லை. நிலா, சிரித்துச்சிரித்து என்னைப் பார்த்தது. அதை நான் கோபமாகப் பார்த்தேன்.

பவானியிடம் கண்ணை மாற்றினேன். ஒரு கணம் மனம் தயங்கிற்று. மறுகணம் திடமான தீர்மானம் செய்துவிட்டது.

வலது கையை எடுத்துத்தூங்கிய பதுமையின் கழுத்தில்வைத்து அழுத்தினேன். பவானி ஒரு முறை சாந்தியுடன் கண்ணை விழித்துப் பார்த்துக் கண்களை மூடினாள். அதுதான் அவளது கடைசி! ஆனால் என் உள்ளக்கனவின் கடைசி அல்ல. அவள் அக்கணம் கண்ணைத் திறக்கையிலே ஒரு துளி...... (அதன் விளைவு தான் இதெல்லாம்!)...... ஒரு துளி ரத்தம் அவளது நெஞ்சிலிருந்துதெறித்து என்கரத்தில் வீழ்ந்தது. அதன் உஷ்ணம் சுரீரென்று என் கையில் தைத்தது.

ஏதோ பெரிய புண்ணிய கிருத்யம் செய்தவன் போல், கதவை மூடிவிட்டு வெளியே வந்தேன். கையிலிருந்த ரத்தத்துளி உலர்ந்து விட்டது. சாந்தியுடன் படுத்துறங்கினேன்.

பவானி கிருஷ்ணையின் கரைக்குச் சென்று விட்டாள்! இனி திரும்பமாட்டாள்.

நாட்கள் ஓடின. நந்தவனத்தில் பறிக்கப் படாமல் உதிர்ந்து உதிர்ந்து, புஷ்பங்கள் வாடி வதங்கி வீணாகிவிட்டன. அவைகளுக்கு இனி வேலையில்லையே என்று நினைத்துக்கொண்டு, எனக்குள் சிரித்துக்கொண்டேன்.

அவள் மறைந்த நாளன்று என்னைக் கேலி செய்து சென்ற பூர்ண சந்திரன், மறுபடி, என்னைக் கேலிசெய்ய வந்தது. அதை விறைக்கப் பார்த்தேன். மானிடப் பௌருஷத்தைத் தாண்டி நின்ற நிலவு என்னிடம் பயப்படாமல் போனதில் அதிசயமில்லை! மகிழம்பூவின் கந்தம், தாயைப்போன்று என்னை அணைத்துக் கொண்டது. அதை நான் வெறுக்கவில்லை.

முன்னிரவில் அயர்ந்து படுத்துறங்கினேன். நடு இரவில் தூக்கம் விழித்தது. நல்ல வேளையாகச் சந்திரிகை கண் மறைவிற்குச் சென்று விட்டது. ஆனால் மற்றொரு அம்பு என்னைக் குத்திக்கொல்ல ஆரம்பித்துவிட்டது—ஆம், என்னை இப்போது வதைக்கும் வலிதான்—அன்றுதான் அது முளைத்தது!

கணத்திற்குக் கணம் வலியின் வீர்யம் பெருகிற்று. அங்கும் இங்கும் ஓடினேன். தகிப்பு அடங்கவில்லை. தூரத்தில் பவானிகோயில் தெரிந்தது. அது நிழலைப்போல்தான் இருந்தது. என் கனலைக்கூற, என் வலியைச் சொல்லிக் கொள்ள என்னருகே ஒருவரும் இல்லை. என்னை வதைக்கவிட்டு, அவள்போய்விட்டாள். சென்ற பிறகும் இந்தத் தாபம்!

விடிந்து கணம் கணமாக ஓடிற்று. கரத்திலேற்பட்ட வலி முன்பை விட அதிகமாகி விட்டது. சகிக்க முடியவில்லை. நாழிகைகள் என்னை விழுங்கும் என்று பார்த்தேன். நான் அவைகளை விழுங்கவேண்டியதாயிற்று.

அன்று பிற்பகல் உடைவாளை எடுத்து வலி தோன்றிய இடத்தில் சதையை வெட்டிவிடலாமா என்று யோசனை செய்தேன். உயிரை

விட மனமில்லை. புண் ஏற்பட்டால் அதை ஆற்றவேண்டிய கவலை தோன்றியது. பண்டிட்ஜியின் ஞாபகம் வந்தது. அன்றுதான் ஓடிவந்தேன் தங்களிடம். அதற்கப்புறம் நடந்தது தங்களுக்குத்தெரியும்.

தங்களிடம் இருமுறை வந்துசென்றது, தங்களுக்குத்தெரியும். மூன்றும் முறையும் வரவேண்டியவன்தான். ஆனால் நான் வரவேண்டிய தினத்திற்கு முதல் நாள் ஜலேல்கரிடமிருந்து சுவடி வந்தது. சுவடியைப் படித்துக்கொண்டேயிருக்கையில் ஜலேல்கர் வந்தான். ஆத்திரத்துடன் அவனைப்பார்த்தேன்.

தயங்கித் தயங்கி என்னை நெருங்கி வந்தான். "என்ன விஷயம்?" என்று கோபமாகக் கேட்டேன். "மானேஜி, உனக்குத் தெரியும், எனக்கும் வஸந்திக்கும் ஏற்பட்ட காதலைப் பற்றி. நாங்கள் லோகமாதா பவானியின் முன் இப்போதுதான் மணம் செய்துகொண்டோம். அந்த மணத்திற்கு அடிப்படையான ஒரு...... ஒரு சுவடிக்கட்டு......நான் வஸந்திக்கு எழுதிய......" என்று தயங்கினான் ஜலேல்கர். அதைப்பற்றி எனக்கென்ன?" என்று சீறினேன்.

"அந்தக்கடிதங்களைப் பத்திரமாகவைப்பதற்காக வஸந்தி அவைகளைத்தன் ஆப்த சிநேகிதியான உன் மனைவியிடம் கொடுத்திருந்தாள். தயவுசெய்து அவைகளைமாத்திரம் கொடுத்துவிடு......" என்று வேண்டினான்.

என் சந்தேகம் தீர்ந்தது. நீரலை அணையின் மேலெல்லையைத்தாண்டி சந்தேக தாகத்தைத் தீர்த்துவிட்டது. இருட்டை வாள்கொண்டு கிழித்துவிட்டதுபோன்ற உணர்ச்சி. ஆனால்... இடி பலமாக இடித்தது. பழைய கோர சம்பவங்கள் ஞாபகம் வந்தன. குதூகலம் என்னும் தீவு ஜலப்போர்வையின் நடுவில் மாட்டிக்கொண்டு, மனதிற்கு ஏக்கத்தைக் கொடுத்தது, அதைத்திரும்ப அடையத்தோணி ஒன்றுமில்லை.

ஓடோடியும் சென்று, பெட்டியைத் திறந்து கடிதங்களை எடுத்து ஜலேல்கரின் கையில் கொடுத்தேன். மகிழ்ச்சியுடன் ஓடிவிட்டான். குழந்தையைப் பறிகொடுத்துவிட்டு, தபஸ் கிடப்பவன்போல் கீழே உட்கார்ந்தேன். இரண்டு தினங்கள் கடந்தன.

இரண்டு தூய உள்ளங்களைச் சந்தேகித்த பாபம்என் ஹிருதயத்தை இருட்டி மடக்கியது. பவானி......அவளது இன்ப அணைப்பு......... அவளது கூந்தலின் சுகந்தம்.........குழந்தை முகம்......குழந்தை மனம்—எல்லாவற்றையும் கொலைசெய்தாகிவிட்டது! இனிஎனக்கு எந்தத் தண்டனையும் போதாது!

கிருஷ்ணையின் கரையை உற்றுப்பார்த்தேன். சிறுசிறு மணல்மேடுகளினூடே மறைந்து சென்ற அருவி என் தாகத்தைத் தணிப்பதாக இல்லை.

வலி என்னை வாட்டி எடுத்தது. தகிப்பு அதிகமாகியது. அந்தி சாயும் வேளையில் வேகமாக எழுந்து மஹா பவானியின் கோயிலுக்குச்சென்றேன். பவானியருகே சென்று மன்னிப்புக்கேட்டேன். அவளது சிலை என்னை வெறுத்துப் பார்த்தது. முகத்தை மூடிக்கொண்டு அழுதுகொண்டே வீடு வந்தேன்.

ஜாலமாக நிலவு ஒளித்தது. கசப்புடன் அதைப்பார்த்தேன். அனுதாபத்துடன் அது என்னைப்பார்த்தது. அறையைச்சுற்றி வந்தேன். வலி அதிகமாகியது. இறப்பதென்று யோசனை செய்தேன்—தீர்மானமும் செய்துவிட்டேன்.

ஆனால், என் கதையைத் தங்களிடம் கூற வேண்டுமென்று ஹிருதயம் தூண்டிற்று. மகாராஜாவிடம் கடிதத்தைக் காட்டுவீர்களென்று எதிர் பார்க்கிறேன். கடிதம் முடிந்ததுபோலத்தான்.

நெருப்புத் தணலை அகற்ற வேண்டிய வேளையும் வந்துவிட்டது. வலியைப்போக்க இனி, சிறு பரிகாரம்கூடத் தேடப்போவதில்லை.

சில வினாடிகளில், அன்று......ஆம்!, அந்தக் கோர தினத்தில் அவள்படுத்து இறந்த இடத்தில் நான் படுத்துவிடுவேன். அதற்குப்பிறகு நிலைத்த உறக்கம்தான். என் மனோ நிலையைத் தெரிந்துகொண்டு நீங்கள் என் விடுதலைக்குத் தடங்கல் செய்யமாட்டீர்களென்று நினைக்கிறேன். அன்புக்கு வணக்கம்."

ஃ ஃ ஃ

கடிதம் முடிந்தது. காசிநாத் கண்ணீரைத் துடைத்துக்கொண்டு பரபரப்புடன் எழுந்தார். ஆவேசம் வந்தவர்போல் சுவடிக்கட்டை எடுத்துக்கொண்டு, அரண்மனைக்கு ஓடினார்.

சிவாஜி, தனியே, அறையில், உட்கார்ந்து நிலவைப் பார்த்துக்கொண்டிருந்தான். மேக மண்டலம் அவனுக்குத் தலைவணங்கிச் சென்றது. கிருஷ்ணை கீதம் பாடிச்சென்றது. சால்வையை மடக்கித் திரும்பினான் சிவாஜி. காசிநாத் பண்டிட் அவனருகே நின்றார். சிவாஜி அவரை வணங்கி, வந்த காரணத்தைக் கேட்டான். விம்மிக்கொண்டே நடந்ததைக் கூறிக் கடிதங்களை அவனிடம் கொடுத்தார் காசிநாத்.

சிவாஜி அவைகளை ஆழ்ந்து படித்தான். படித்து முடித்தவுடன் மூர்ச்சையடைந்து சாய்ந்துவிட்டான். நாழிகைகள் பறந்தன. விளக்கு, சலிப்பில்லாமல் எரிந்தது. பண்டிட்ஜி உறக்கமின்றி உட்கார்ந்திருந்தார்.

காலையின் பச்சை தலைதூக்கிற்று. பிறை மங்கிவிட்டது. பண்டிட்ஜி பரபரப்புடன் எழுந்தார். முழு இரவும் அவர் உறங்கவே இல்லை. சிவாஜி கனவிலிருந்தவன்போல் எழுந்

தான். வேலைக்காரனை அனுப்பி ஓவியன் சங்கோஜியை வரவழைத்தான். ஓவியன் வணக்கத்துடன் வந்துநின்றான்.

ஆசனத்திலிருந்து எழுந்துகொண்டே, அவனுக்கேற்பட்ட வலி மனப்பிரேமையினால் தான், பண்டிட்ஜி......" என்றான் சிவாஜீ.

மூவருமாக எழுந்து மானோஜியின் வீட்டிற்குச் சென்றனர். வழிந்தோடி, உறைந்துபோன ரத்தக்கரைகள் மார்பில் தோய்ந்துகிடக்க, வாள் நெஞ்சில் ஆழ்ந்துகிடக்க, பலகணியின் கீழ் மானோஜியின் உருவம் கிடந்தது.

சிவாஜி ஓவென்றலறினான். பண்டிட்ஜி கண்களைத் துடைத்துக்கொண்டார். அர்த்தம் நிறைந்த பார்வையுடன் சிவாஜி ஓவியனைப் பார்த்தான். ஓவியன் உணர்ச்சியுடன் ஓடினான்.

மறுபடி பூர்ண சந்திரிகை வந்தது. ஓவியனும் வந்தான், கரத்திலொரு படத்தை ஏந்தி. சிவாஜி ஆவலுடன் அதைப்பார்த்தான். அவன் கனவில் கற்பனை செய்திருந்த ஞாபகச்சின்னம், படத்தில் அப்படியே இருந்தது. கண்ணீருடன் அவன் ஓவியனை அணைத்துக்கொண்டான்.

சரித்திரம் அந்தப் படத்திற்கு விலகி வழி விட்டது. இறகில்லாமலேயே. காலம் என்கிற காற்றில் அது பறந்து என்னிடம் வந்தது. அது இதுதான் என்று கதையை முடித்தான் நடராஜன்.

அவனது நெற்றியில் வியர்வையும், கண்ணிமைகளில் நீரும் தேங்கி நின்றதை அப்போது தான் பார்த்தேன்.

எழுந்து படத்தை நோக்கி ஓடினேன். நாற்காலியை நகர்த்தி அதன்மேல் ஏறிப் படத்தை எடுத்தேன். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. ஏனெனில் படத்தினடியில் "நடராஜன்" என்று கையெழுத்திடப்பட்டிருந்தது. எனக்கு ஒன்றும் புரியவில்லை.

நடராஜனைப்பார்த்தேன். அவன் சிரித்துக்கொண்டே "விஷயம் விளங்கிற்றா?" என்று கேட்டான்.

"இது சங்கோஜி எழுதிய படமில்லையா? அதைப்பார்த்து நீ எழுதிய படமா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"அதுவும் இல்லை. அம்மாதிரிப்படம் இருந்தாலல்லவோ பார்த்து எழுதுவதற்கு? உன்னுடைய பழைய'ஒரு கதையை மனதில் வைத்துக்கொண்டு எழுதிய படம்" என்றான்.

என் ஆச்சரியம் பன்மடங்கு அதிகமாகியது. படத்தையும், அவனையும் மாறிமாறிப் பார்த்தேன். நான் அப்போது கண்டது கனவா, அல்லது கதை கேட்டது பொய்யா என்று தெரியவில்லை. சிவாஜியின் காலத்திலிருந்து நம் காலத்திற்கு வருவதற்கு மனம் அதிக நாழிகை கேட்டது.

"நீ பெரிய கதாசிரியனடா. சரித்திர உபாத்யாயரல்லவா? கற்பனை உனக்கு அதிகம்தான்" என்று குழந்தைபோல் உரத்துக்கூவினேன். அவனை நோக்கிச் சென்றேன். அவன் மறுபடி சிரித்தான்.

"இனி நான் கதை கேட்கும்போது சொல்லடா" என்றேன். புன்முறுவலுடன் உள்ளே மறைந்தான்.

பேனாவைத் தட்டிக்கொடுத்துக்கொண்டு வீடு வந்துசேர்ந்தேன். சிவாஜியைப் பார்க்க வேண்டும், கிருஷ்ணையின் கரைக்குப் போக வேண்டுமென்று ஆசை எல்லை மீறிவிட்டது, நடக்கிற காரியமா?

கோடை விடுமுறையில் பஞ்சவடிக்கும், ராயதுர்க்கத்துக்கும் போனோம். சிவாஜியைப் பார்க்கமுடியவில்லை! கிருஷ்ணாநதி காய்ந்து கிடந்தது!

ஆப்டோன் ப்ளாக்குக்களும்
அழகான கலர் ப்ளாக்குக்களும்
செய்யுமிடம்!

★

★

எம். ஸி.
அப்பாசாமி செட்டி & கோ.,
14, ஜோன்ஸ் தெரு, மண்ணடி,
மதராஸ்.

பாசம்

"விஜயஸ்ரீ"

அம்புலி மேகங்களினிடையே மறைந்து நின்று, இவ்வுலகத்தின்மேல் மங்கிய ஒளி வீசிக்கொண்டிருந்தான். அவ்வொளியில் மரங்கள் காற்றிலசைவது மனிதர்கள் ஆடி அசைந்து வருவதுபோல் தெரிந்தது. காற்று, தென்னங்கீற்றுக்களிடையே புகுந்து செல்லும்போது உண்டாகும் ஒலியும், இரவில் சஞ்சரிக்கும் பறவைகளின் கூச்சலுமே இரவின் நிசப்தத்தைக் குலைத்தன.

மினுக்மினுக்கென்ற விளக்கின்ஒளி ஒரு சிறு குடிசைக்குள்ளிருந்து வந்து கொண்டிருந்தது. அங்கு நால்வர் இருந்தனர்.

சற்று வயதானவள்போல் காணப்பட்ட ஒரு மாதின் தலையைத் தன் தொடையில் வைத்த வண்ணம் உட்கார்ந்திருந்தான் ஒரு வாலிபன். அவனுடைய முகம் வருத்தத்தில தோய்ந்து கிடந்தது. அம்மாது தன் மார்பின்மேல் கையை வைத்துக்கொண்டிருந்தாள். அவளுடைய முகத்தில் பொறுக்கமுடியாத வேதனையின் சின்னங்களிருந்தன. சற்றுத் தூரத்தில் பயந்த பார்வையுடன் ஒரு நங்கை அமர்ந்து இருந்தாள். கைகளை நெறித்துக்கொண்டிருந்த அவளைக் கோப ஜ்வாலை வீசும் கண்களுடன் நோக்கிய வண்ணம் வாலிபனொருவன் நின்றிருந்தான். அவனும் முன்சொன்ன வாலிபனும் சகோதரர்கள்போல் காணப்பட்டனர்.

"சேகர்! கிட்டவாப்பா"

கோபாக்னி வீசப் பெண்மணியை நோக்கிக் கொண்டிருந்த அவ்வாலிபன் கண்களில் அன்பு பெருகியது. படுத்திருந்தவளை நெருங்கினான்.

"அம்மா! என்னவேணும் உனக்கு?"

"என்னருகில் உட்கார்ந்துகொள். லலிதா! நீயும் அருகே வாம்மா. மோஹன்! நீயும் கேள்"

லலிதா, தான் உட்கார்ந்திருந்த இடத்தை விட்டு மிக்க பயபக்தியுடன் படுத்திருந்தவளை நெருங்கினாள். வெறுப்புக்கலந்த பார்வையுடன் லலிதாவை நெருங்கினான் சேகர். மோஹனோ, அன்பு பொழியும் கண்களால் அவளைக் கடைக்கணித்தான்.

"சேகர்! அவள் குழந்தைதானே? ஏன் அவளை அப்படிப் பார்க்கிறாய்? அவள் வேண்டுமென்றா செய்தாள்? ஏதோ தெரியாமல் செய்துவிட்டாள். லலிதா! வந்து அண்ணாவிடம், உட்கார்ந்துகொள்."

"நான் ஒன்றும் அந்த முண்டையின் அண்ணா இல்லை. அது ஏதோ ஒரு பிசாசு."

இவ்வார்த்தைகள் சேகரின் வாயினின்று வெளிப்பட்டனவோ இல்லையோ, மோஹன் சட்டென எழுந்திருந்தான். கண்களில் கோபக் கனல் வீசச் சேகரை நோக்கினான்.

"சேகர்! லலிதாவை அம்மாதிரி சொல்லாதே. ஆம், சொல்லக்கூடாது. சொன்னால் கேள், பிறகு ரகளைதான்."

"தங்கைக்குப்பரிந்துகொண்டுவந்துவிட்டான் அண்ணன். பைத்தியக்காரப்பெண், தாயைக் கத்தியால் குத்திய சனி—இதுதான் உன் தங்கை போடாபோ அசடே."

"சேகர்! வேண்டாம் அவளைத் தூஷிக்காதே. உனக்கென்ன அவள்மேல் ஆத்திரம். உன் வேலையைப் பார்த்துக்கொண்டு இரேன். பாவம் குழந்தையைக் கரிக்காதே."

லலிதா நன்றியறிதலுடன் மோஹனை நோக்கினாள். படுத்துக்கொண்டிருந்த மாது பேச ஆரம்பித்தாள்.

"சேகர்! மோஹன்! நான் இன்னும் சிறிது நேரம்தான் பிழைத்திருப்பேன். எனக்காகக் கவலைப்படவேண்டாம். குழந்தை லலிதாவைத் தூஷிக்காதே சேகர். அதனால் என்ன பயன்? தகப்பனுக்கிருந்த புத்தி மாருட்டம் அவளுக்கும் வந்திருக்கிறது. லலிதா வயதிற் சிறியவள். உலகப் பழிக்கு ஆளாகாது அவளை நீங்கள் பாதுகாக்கவேண்டும். லலிதா! உன் அண்ணன்மார்களிடையே ஒருவித மனஸ்தாபமில்லாமல் இரு. இதுதான் என் கோரிக்கை."

சேகர் அவள் பேசுவதை உற்றுக்கேட்டான். பேசி நிறுத்திய பின் லலிதாவின் பக்கம் திரும்பினான். கண்களில் வெறுப்புத் தோன்றியது.

"அம்மா! என்னை மன்னிக்கவேண்டும். உன் கோரிக்கையை என்னால் நிறைவேற்ற முடியாது. என் தாயாரைக் கொலை செய்த பயித்தியத்தை நான் ஆதரிக்கவேண்டும்? நான் மாட்டேன்."

லலிதாவின் கண்களில் கண்ணீர் கலங்கியது.

"அம்மா! நான் ஏன் இவ்வளவு வெறுப்புக்கும் ஆளாக இருந்துகொண்டு உயிர் வாழ்கிறேன். என் சொந்த ஸகோதரனே என்னை நிராகரிக்கையில் வேறு யார்தான் தூஷிக்க

மாட்டார்கள்?.........அவரைச்சொல்லி என்ன பயன்? என் குற்றமல்லவோ இது. புத்தி மாருட்டத்தால் தாயாரைக் கத்தியால் அல்லவா குத்திவிட்டேன். ஆகவே எனக்கெவ்வித சிக்ஷையும் சரிதான்."

மோஹன் பேச ஆரம்பித்தான்.

"லலிதா! நீ பயப்படாதே. உலக முழுவதும் நம்மை எதிர்த்து நின்றாலும், நான் உன்னை என் கண்ணின் மணிபோல் பாதுகாப்பேன். சேகர் ஏதோ கோபத்தில் கூறிவிட்டான். பிறகு வருந்துவான். ஆகவே அவனுடைய சொற்களை மனதில்கொள்ளாதே". படுத்திருந்தவளின் கண்களில் கண்ணீர் துளித்தது.

"மோஹன்! நீயே உண்மைச் சகோதரன். ஆம், உன் வாழ்க்கை பாழாவதாக இருப்பினும் சரி, நீ உன் லலிதாவை அபவாதத்திற்கு ஆளாக்கக்கூடாது. தெரிந்ததா?"

"அம்மா! எனக்கு நீ என் கடமையைச் சொல்லவும் வேண்டுமா? நீ கவலைப்படாதே. நான் லலிதாவை நன்கு பாதுகாப்பேன்."

மௌனமாயிருந்த சேகர் பேச ஆரம்பித்தான்.

"மோஹன்! நீ என்ன வேண்டுமானாலும் செய். நானென்னவோ என்னன்னையைக் கொன்ற பாவியைப் பழிக்குப்பழி வாங்கியே தீருவேன். லலிதாவை ஒருநாளும் ஆதரிக்க மாட்டேன்."

"சேகர்! பிதற்றாதே. நான் உன் தாயார். என் சொல்லைக் கேட்டுவிடு."

"அம்மா! மாட்டேன், மாட்டவேமாட்டேன்." களைப்பினால் கண்களை மூடிக்கொண்டாள் அம்மாது. சிறிது நேரம் சென்றது. யமனுடன் போராடிக்கொண்டிருந்தாளவள். மோஹனைத் தன் பக்கலில் அழைத்தாள். லலிதா அவளுடைய படுக்கையினருகில் உட்கார்ந்திருந்தாள். சேகர் கைகளைக் கட்டியவண்ணம் நின்றிருந்தான்.

"மோஹன்! செய்வாயா?"

"அம்மா! சந்தேகம் வேண்டாம். கட்டாயம் செய்வேன்."

"லலிதா! மோஹனுக்குக் கீழ்ப்படிந்து அவன் மனம்கோணாமல் நடந்துகொள். அவன் ஒரு தியாகி."

"அவர் சொல்லைத் தட்டவேமாட்டேன், இது சத்தியம்."

"மோஹன்! உன் வாழ்க்கையின்பம் போவதாயிருந்தாலும் லலிதாவை ஆதரி. கடவுள் உங்களிருவரையும் காப்பார். சேகர்! நீயும் அவளை ஆதரிப்பாயென்றே நம்புகிறேன்." சேகர் மௌனம் சாதித்தான். மோஹன் பேச ஆரம்பித்தான்.

"அம்மா! உன் பேச்சைத் தட்டவேமாட்டேன். மன நிம்மதியுடன் இறைவன் பாதாம்புஜங்களைத் துதி."

சோர்ந்துகிடந்த வதனத்திலொரு புன்முறுவல். லலிதாவின் கைகளையெடுத்து மோஹனின் கைகளில் கொடுத்தாளவள். கண்ணீர் வழிய அம்மெல்லிய கரங்களை ஏற்றுக்கொண்டான் மோஹன். கடைசி முறையாகத் தன் மக்கள் மூவரையும் நோக்கிவிட்டுத் தன் கணகளை மூடிக்கொண்டாள் அம்மாது. அவளது ஆத்மா இப்பூதவுடலை நீத்துச்சென்றது.

2

"ஐயா!"

"யாரது?"

"எஜமானன் ராஜசேகர் என்னை அனுப்பியிருக்கிறார்."

"யார், ராஜசேகரா?"

கையில் தறியுடன் வாயிலில் காட்சியளித்தான் மோஹன். வெளியே நின்றிருந்த சேவகன் ஒரு துண்டுக்காகிதத்தை நீட்டினான். அதை வாசித்துப் பார்த்துவிட்டு மோஹன், "சற்று நேரம் கழித்து வருகிறேனென்று சொல்" என்று சொல்லிவிட்டு, குடிசையின் கதவைத் தாளிட்டுக்கொண்டு தன் ஆசனத்திலமர்ந்தான். அவனுக்குச் சற்றுத் தூரத்திலுட்கார்ந்துகொண்டு கைராட்டினத்தில் வேலை செய்துகொண்டிருந்தாள் லலிதா.

"அண்ணா! என்ன செய்தி, யாரோ வந்த மாதிரி இருந்ததே."

"லலிதா! சேகரிடமிருந்து ஒரு குறிப்பு வந்தது, வேறொன்றுமில்லை."

"சேகரிடமிருந்து குறிப்பா? ஏது நமக்கு நற்காலம் பிறக்கிறதுபோலிருக்கிறதே! அம்மா மரணமடைந்து பத்து வருடங்களுக்கு மேலாகின்றன. இதுவரை இங்கு வந்ததோ, கடிதம் அனுப்பியதோ கிடையாதே. அத்திபூத்தாற்போல ஒரு குறிப்பு வந்தது ஆச்சரியமாகவன்றோ இருக்கிறது!"

"என்னைப் பார்த்துப் பேசவேண்டுமாம். என்ன சமாசாரமோ தெரியவில்லை."

லலிதா பெருமூச்செறிந்தாள். "வேறென்ன இருக்கிறது? எல்லாம் என்னைப்பற்றித்தானிருக்கும். என்னை நிர்க்கதியாய் விட்டுவிடச் சொல்வார்போலிருக்கிறது. ஏன் இப்படி என்

ஜப்கோ

★

இந்தியாவில்
தயாரிக்கப்படும் திரவியங்களில்
முதல் ஸ்தானம் பெற்றவை

★

★

பவுண்டிங், லைம் கிளிஸ்

சாலிட் பிரிலியண்டின்,

ஸ்னோ, ஹேர் குரோயர்,

லிக்விட் பிரிலியண்டின்,

கோந்து, பினாயில்

வாசனை தேங்காயெண்ணை,

வாசனை காஸ்டர் ஆயில்,

நீம் சோப்,

கிளிஸெரின் சோப்,

ஹெர்பாம்.

★

மேல் அவருக்குக்கோபம், நானென்ன செய்து விட்டேன்? வேண்டுமென்றா செய்தேன். புத்தி மாறாட்டத்தாலல்லவா அவ்வாறு செய்துவிட்டேன். கடவுளே! எனக்கேன் இந்தப் புத்தி மாறாட்டத்தைக் கொடுத்தாய். என் சகோதரனின் வாஞ்சைக்குப் பாத்திரமின்றியல்லவா இருக்கிறேன்!"

"லலிதா! வருத்தப்பட்டு என்ன செய்வது? எல்லாம் கடவுள் செயல். எல்லாம் அவர் நம் நன்மைக்காகவே செய்வார், கவலை கொள்ளாதே."

"அண்ணா! உங்களையாவது எனக்கு ஈசன் கொடுத்து இருக்கிறாரே, அவர் கருணையுள்ளவர் தான்."

"லலிதா! நீ சிறிதும் வருத்தப்படாதே. நமக்கும் நற்காலம் வராதா?.........போய்ச் சேகரைப் பார்த்துவிட்டு வருகிறேன். அவனுடைய மனம் இளகியிருந்தாலும் இருக்கும்."

மோஹன் புறப்பட்டுச் சென்றான். கதவைச் மூடிக்கொண்டு குடிசைக்குள் சென்றாள் லலிதா. தன் தாயின் மரணத்திற்குப்பின் ராஜசேகர், ராஜமோஹனையும் லலிதாவையும் விட்டு, தனியே வசித்துவந்தான். அதிர்ஷ்டவசமாக ஒரு கம்பெனியில் குமாஸ்தாவாக அமர்ந்து படிப்படியாக அந்தஸ்திலுயர்ந்து, அக் கம்பெனியின் மானேஜராகிவிட்டான். ராஜமோஹனோ, வறுமையாற் பீடிக்கப்பட்டு லலிதாவுடன் சேர்ந்துகொண்டு கஷ்ட ஜீவனம் நடத்திவந்தான். மோஹன் ஒரு நல்ல எழுத்தாளன், கவியுங்கூட. ஆகவே பத்திரிகைகளுக்கெழுதி அதனால் கிடைக்கும் சொற்ப வரும்படியைக்கொண்டு தன் வயிற்றையும், லலிதாவின் வயிற்றையும் வளர்த்துவந்தான்.

3

"மோஹன்! உட்கார்ந்துகொள்."

மோஹன் உட்கார்ந்துகொண்டான்.

"சேகர்! ஏன் என்னைக் கூப்பிட்டனுப்பினாய்?"

"எல்லாம் தானே தெரிகிறது,"

"என்ன லலிதாவைப் பற்றித்தானே?"

"அதைப்பற்றியார் பேசப்போகிறார்கள். நீ சகோதரனாயிற்றே, நம்மாலான உதவியைச் செய்வோமென்ற எண்ணம். அவளைப்பற்றி எனக்கென்ன கவலை?"

"அவள் உன் சகோதரியில்லையா?"

"சகோதரிதான். ஆனால் நான் அவளை உறவெனக்கொள்ளவில்லை."

"சேகர்! இதோபார், நம்மிரண்டு பேரையும் விட்டால் வேறு ஏது கதி அவளுக்கு, யோசித்துப்பார். அவளும் குழந்தைதானே. மேலும் நம் ஒரே சகோதரி வேறு. ஒரு பாபமும் அறியாதவளை இப்படியெல்லாம் துன்புறுத்துகிறாயே, இது நியாயமா?"

"மோஹன்! உன்னை புத்திமானென்றல்லவோ நான் நினைத்தேன். நம் தாயைக்கொன்ற......"

"சேகர்! அது போகட்டும், இவ்விஷயத்தில் நாமிருவரும் கட்டாயம் அபிப்பிராயபேதம் கொள்வோம். ஆகவே அதைப் பேசித்தான் என்ன பயன்?......என்னை ஏன் கூப்பிட்டனுப்பினாய்?"

"ஏன்? இதோ சொல்லுகிறேன். எங்களுடைய கம்பெனியில் குமாஸ்தா வேலையொன்று காலியிருக்கிறது. அதை உனக்குக்கொடுக்கலாம் என்ற உத்தேசம். சரிதானே?"

"சேகர்! மிக்க வந்தனம். என்னை வறுமைக் கடலினின்று கரையேற்றியதற்குக் கடமைப்பட்டவனானேன். எனக்கு நீ இச்சிறு வேலை கொடுத்திராவிடில் லலிதா கதி என்னவாகும்? பாவம்! பட்டினி கிடந்தல்லவா இறப்பாள். நீ புண்ணியவான்."

"மோஹன்! அப்பைத்தியத்தைப்பற்றி மாத்திரம் என்னிடம் ஒன்றும் சொல்லாதே. எனக்கும் அதற்கும் சற்றேனும் சம்பந்தம் இல்லையென்று நினைத்துச் சும்மா இரு......இன்னொன்று, நீ மாத்திரம் அப் பைத்தியத்தை உதறித் தள்ளினாயோ, இன்னும் என்னால் கூடியமட்டில் உனக்கு உதவிசெய்வேன்."

"நீ இப்படிச்சொல்வாயென்று எனக்குத் தெரியும். என் லலிதாவே எனக்குயிர், பணம் பிரதானமல்ல. எனக்கு இந்தக் குமாஸ்தா வேலையும் வேண்டாம்."

"மோஹன்! பதட்டத்தோடு பேசாதே. நீ கட்டாயம் குமாஸ்தாவாக இருக்கவேண்டியது. அதைப்பற்றி ஒன்றுமே பேசவில்லை.

சற்று நேரம் சகோதரர்களிருவரும் பேசிக்கொண்டு இருந்தனர். கடைசியில் சேகரிடம் விடைபெற்றுக்கொண்டு இல்லம் நோக்கி நடந்தான் ராஜமோஹன்.

4

அண்ணா! சேகர் என்ன சொன்னார்?"

"லலிதா! கடவுள் கண் திறந்தார். அவனுடைய கம்பெனியிலேயே எனக்கொரு குமாஸ்தா வேலை கொடுத்திருக்கிறான்."

"நிஜமாகவா அண்ணா! என்னைப்பற்றி ஒன்றுமே பேசவில்லையா?"

"பேசாமல் என்ன, எல்லாம் பேசினான்."

"என்னவாம்? என்னிடம் இரக்கம் கொள்கிறாரா?,'

"அவனாவது இரக்கம் கொள்வதாவது! உன்னிடம் முன்பிருந்த வெறுப்பு இன்னும் இருக்கிறது."

புன் சிரிப்பொன்று தவழ்ந்துகொண்டிருந்த அவள் முகம் துக்கக் குறிகளால் நிறைந்து காணப்பட்டது.

"அண்ணா! நான் என்ன செய்துவிட்டேன், என்னிடம் இப்படி அவருக்குக் கோபம்."

"லலிதா! என் கண்ணே! அவனொரு பிடிவாதக்காரன். தானாகவே உன்னிடம் அவன் அனுதாபம்கொள்வான். கவலைப்படாதே. அப்படியவன் செய்யாவிட்டாலும் என்ன போய்விட்டது? நான் உன்னிடம் அன்பு பூண்டு அல்லும் பகலும் உழைப்பேன்."

"அண்ணா! உங்களைப்போன்ற மனிதர் அகப்படுவது மிக அரிது. இப்படிப்பட்டவரின் வாழ்க்கையைப் பாழாக்க அல்லவோ நான் தோன்றியிருக்கிறேன்? ஈசா! இதுவும் உன் சோதனையா?"

"லலிதா! அதெல்லாம் ஒன்றுமில்லை. யார் சொன்னார்கள் நீ என் வாழ்க்கையைப் பாழாக்குகிறாய் என்று? என் வாழ்க்கை உன்னாலல்லவா சந்தோஷகரமாக இருக்கிறது."

"ஹா! நீங்களே உண்மைச் சகோதரர், தியாகி! உங்களைச் சகோதரராகப்பெற என்ன பாக்கியம் செய்தேனோ."

தன் சகோதரனின் கைகளைத் தன் கண்களிலொற்றிக்கொண்டு, ஆனந்தபாஷ்பம் பெருக அவனையே உற்றுநோக்கினாள் லலிதா.

"சொல்வதற்கு மறந்துவிட்டேனே. உங்களைத் தேடிக்கொண்டு மாலதி வந்தாள். உங்களைப் பார்க்கவேண்டுமாம். நாளை நந்தவனத்தில் சந்திக்கும்படி சொல்லியிருக்கிறாள்."

5

ஒரு மாதம் சென்றது. லலிதாவும் மோஹனும் சந்தோஷமாகவே ஜீவனம் நடத்திவந்தனர். தன் சகோதரனுக்குப் பணிவிடை செய்து அகமகிழ்ந்தாள் லலிதா; தன் தங்கையின் புன்னகையைக்கண்டு உள்ளம்பூரித்தான் மோஹன்.

லலிதாவுக்கு அந்தப் புத்தி மாறாட்டமெல்லாம் சிறிது சிறிதாகக் குறைந்து கொண்டே வந்தது. அவள் தன் சகோதரனின் தியாகத்தை நினைந்து உருகுவாள், எவ்வளவோ

தடவைகள் மணம் செய்துகொள்ளும்படி வற்புறுத்தியும் பார்த்தாள். அவன் அவற்றிற்கெல்லாம் செவிசாய்ககவே இல்லை.

"லலிதா! என் அந்தஸ்துக்கு மனைவி வேறு?" என்று சொல்லிவிட்டுக் கலகலவென்று நகைப்பான், ஆயினும் அவனுள்ளத்தில் இருப்பதை லலிதா உணர்ந்தாள். எங்கே மணம் செய்துகொண்டால் மனைவி தன் தங்கையைத் துன்புறுத்தப் போகிறாளோ என்று எண்ணியே அவ்வாறு சொல்கிறான் என்று நினைத்தாள். அவனுடைய ஆழ்ந்த அன்புக்குத் தான் பாத்திரமென்பதை உணர்ந்தவுடன் தன்னையுமறியாமல் உவகையுண்டாகும் அவளுக்கு.

இதன் நடுவில் மோஹனுக்கு உயிர்க்காதலி வேறு இருக்கிறாள் என்று அறிந்துகொண்டாள் லலிதா. ஒருநாளிரவு சட்டென விழிப்புக் கொடுத்துவிட்டது. தனக்குச் சற்றுத் தூரத்தில் நித்திரை செய்துகொண்டிருந்த மோஹன் அடிக்கடி, "மாலதி! கவலைப்படாதே. உன்னையே மணம்புரிவேன். இல்லையெனில் பிரம்மசரியம் கொள்வேன்" என்று பிதற்றிக்கொண்டிருந்ததைக் கண்டாள் லலிதா. அன்பு நிலையம் என்று சொல்லத்தக்க தன் சகோதரனின் இருதயத்தில் மாலதி இடம்பெற்றுவிட்டாள் என்றறிந்து மகிழ்வெய்தினாள்.

6

அன்று பகலவன் தன் செங்கிரணங்களால் ஞாலத்தைப் பொன்மயமாக்க முயன்றுகொண்டிருந்தான். நந்தவனத்தில் தனியே ஒரு பளிங்கு மேடையின்மீது அமர்ந்திருந்தான் மோஹன். யோசனையில் மூழ்கித் திளைத்துக் கொண்டிருந்தான் அக்காளை. மாலதி தன் அருகில் வந்து உட்கார்ந்ததைக்கூட அவன் கவனிக்கவில்லை.

மாலதி தன் மிருதுவான கரங்களை மோஹனின் தோள்கள்மேல் போட. திடுக்கிட்டுத் திரும்பினான்.

"நீயா. பயந்தே போய்விட்டேன்."

"வேறு யாரென்று நினைத்தீர்கள், எல்லாம் நான்தான். என்ன பலமாக யோசனை?"

"ஒன்றுமில்லை, இயற்கையினழகைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தேன், அவ்வளவுதான்."

யாவருக்கும் நமது மனமார்ந்த ★

★ பொங்கல் வாழ்த்துக்கள்

பொழுதுவிடியுமுன் துயில் நீங்கி, மங்கள நீராடி, புத்தாடை புனைந்து, கதிரவனை வணங்கி, இன்புற்று விருந்துண்ணும் சமயம்

எங்களுடைய **காமதேனு மார்க்** அசல் நெய்யில் தயார் செய்யப்பட்ட பலகார பக்ஷண வகைகள் உங்கள் குடும்ப சந்தோஷத்தை அதிகரிக்கச் செய்வதுடன் சாப்பாட்டின் ருசியை மேன்மைப்படுத்தும். எங்கள் நெய் எல்லா ஊர்களிலும் கிடைக்கும்.

★ "காய்ச்சும் பதம்" சிரத்தையுடன் கவனித்து புதிய வெண்ணெயில் தினமும் காய்ச்சி அனுப்புகிறோம். ★

KAMADENU BRAND
TRADE MARK
PURE GHEE

★ மணம், ருசி, குருணை வாட்டு, நெடு நாட்கள் மாறாமலிருக்க தகுந்த முறையில் தயார் செய்யப்படுகின்றது. ★

கலப்பில்லாததென்பதற்கு உத்தரவாதமுள்ளது. இன்றே பரீக்ஷியுங்கள்.

காளி & கோ., கோயமுத்தூர்.

"ஓகோ அப்படியா?"

"..................."

"ஏனின்று ஏதோ மாதிரியிருக்கிறீர்கள்?"

"..................."

"நான்கூட அறியக்கூடாதா?"

"..................."

"என்ன பதிலையே காணோமே, ஏன் துக்கமே உருவெடுத்தாற்போல் உட்கார்ந்திருக்கிறீர்கள்?"

"மாலதி! என் மனதிலுள்ளதை எங்ஙனம் சொல்வேன்? உன்னிடமல்லாது வேறு யாரிடம் தான் நான் சென்று முறையிடுவது?"

"காதல! என்ன இது, நீங்கள் பேசும் விதமே இன்று வேறுமாதிரி இருக்கிறதே."

"பின் இருக்காதா? எவ்வளவு நாட்கள் முகம் அகத்திலுள்ளதைக் காட்டாமலிருக்கும்! என்னைப்போல் வாழ்க்கை முழுவதிலுமே ஒரு பைத்தியத்தைக்கட்டிக்கொண்டு அழ வேண்டியிருந்தால் எல்லோரும் இப்படித் தான் இருப்பார்கள்."

"நான் வெகுநாட்களாகவே சொல்லவேண்டுமென்று இருந்தேன். உங்கள் வாழ்க்கையின்பம் இப்பைத்தியத்தால் குலைந்தல்லவோ போகின்றது! அதை உதறித் தள்ளிவிட்டுப் பேசாமல் என்னை மணம்புரிந்துகொள்ளுங்கள். அதுதான் நல்ல யோசனை."

"நல்ல யோசனையா? பேஷான யோசனை என்று சொல். நான் சொல்வதற்குள் நீயே சொல்லிவிட்டாயே."

"பின் என்ன, ஒரு சுந்தர புருஷன் ஒரு பைத்தியத்தைக் கட்டிக்கொண்டு வாழ்க்கை முழுவதுமே மாரடிப்பதை அவனுடைய உயிர்க் காதலி கண்கொண்டு பார்க்கச் சகிப்பாளா? அப்பைத்தியத்தை சபித்தல்லவோ விடுவாள்?"

அதுவரையில் அவளுடன் சர்வ சாதாரணமாகப் பேசிக்கொண்டிருந்த மோஹனின் முகம் மாறுபட்டது. சட்டெனத் தான் இருந்த விடத்தைவிட்டு எழுந்திருந்தான்.

"அடி பாதகி! உன்னைச் சோதிக்கவல்லவோ இவ்விதமெல்லாம் சொன்னேன். என் அருமைத் தங்கையைப்பற்றி நீ எப்படி இம்மாதிரியெல்லாம் சொல்வாய்? இப்பொழுதே இப்படிச்சொல்லும் நீ என்னை மணந்தபின் லலிதாவை வேறென்னதான் செய்யமாட்டாய்? ஆகவே நான் உன்னை மணக்கமாட்டேன். உலகத்தில் இம்மாதிரியான—நெஞ்சில் ஈரமற்ற—படுபாவிகள் நிறைந்துள்ளார்களென்று இப்பொழுதுதான் தெரியவந்தது." என்று சொல்லிக்கொண்டே கண் பார்வையினின்று மறைந்தான் அவ்வுண்மைச் சகோதரன்.

7

அன்றிரவு மோஹனுக்குத் தூக்கமே வரவில்லை. மாலை நடந்த விஷயங்களைப்பற்றி எண்ணிக்கொண்டே படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான். குடிசையின் கதவு மெதுவாகத் திறக்கப்படுவதை உணர்ந்து அவன் சற்றுத் திடுக்கிட்டான்.

குடிசையினுள் ஒரு உருவம் நுழைந்தது. அதன் கையில் பள பளவென்று ஏதோவொன்று மின்னியது. மோஹனுக்கு ஒன்றும் புரிபடவில்லை. மெதுவாகத் தன்னருகில் நித்திரை செய்துகொண்டிருந்த லலிதாவை நோக்கினான். அயர்ந்த தூக்கத்தில்கூட புன்னகையொன்று தவழ்ந்து திரிந்தது அக் கமலவதனத்தில். குடிசையின் வாயிலுக்கும் லலிதாவுக்கு மிடையே படுத்திருந்தான் மோஹன். மனதைத் தைர்யப்படுத்திக் கொண்டு யாவற்றிற்கும் தயாரானான்.

மெதுவாக அவனை நோக்கி வந்துகொண்டிருந்தது அவ்வுருவம். அடுத்த நிமிஷம் மோஹன் அதன்மேல் பாய்ந்தான்; அதன் கையிலிருந்த ஆயுதத்தைத் தட்டிவிட்டு, அவ்வுருவத்தைக் கீழே தள்ளி அதன் மேல் உட்கார்ந்துகொண்டான்.

சத்தத்தைக்கேட்டுக் கண்விழித்தாள் லலிதா. அவள்கண்ட காட்சி அவளைத் திகைப்படையச் செய்தது. மோஹன் ஒரு மனிதனுடைய மார்பில் உட்கார்ந்துகொணடு அம்மனிதனை எழுந்திருக்கமுடியாதபடி செய்துகொண்டிருநததைக்கண்டால் அவள் ஆச்சரியமடையாமல் இருக்கமுடியுமா?

லலிதாவைக் கண்டவுடன் மோஹன், "லலிதா! விளக்கை எடுத்துக்கொண்டுவா" என்று இனிமையாக மொழிந்தான். அவளும் ஒரு விளக்குடன் வந்தாள்.

என்ன ஆச்சரியம்! மோஹனுக்குக் கீழ் கிடந்தது சேகர்தான். சேகரைக்கண்டவுடன் லலிதாவுக்கும் மோஹனுக்கும் ஆச்சரியம் மேலிட்டது.

சேகரின் மார்பின் மேலிருந்து எழுந்துவிட்டாள் மோஹன். லலிதா தண்ணீர்கொண்டு வந்து தர சேகர் அருந்தினான்.

"சேகர்! என்ன இது? இரவில் வந்திருக்கிறாய், அதுவும் கத்தியும் கையுமாக?"

"எதற்கா? பழிக்குப்பழி வாங்கத்தான். தாயைக்கொன்ற தனயையின் உயிரைக்குடிக்கவே வந்தேன்."

"என்ன லலிதாவைக் கொலை செய்யவா? நான் ஒரு போதும் உன்னை அவ்வாறு செய்ய விடேன். சேகர்! வெளியே செல். இல்லாவிட்டால்......"

மோஹன்! வேண்டாம், தாயின் ஆன்மா சாந்தி அடையவேண்டுமானால் அவ்விதம் செய்யவே வேண்டும். ஆகவே........."

"சேகர்! போகிறாயா, இல்லையா?"

மோஹனுக்குக் கோபம் வந்துவிட்டது. லலிதா நடுங்கியே விட்டாள்.

"அண்ணா! அவர் என்னைக் கொலை செய்யட்டும், விடுங்கள். அதுவே என் தண்டனை; சரியான சிக்ஷை" என்று மோஹனை நோக்கி வேண்டினாள். அப் பெண்மணியின் கமலக்கண்களிலிருந்து கண்ணீர் ஊற்றெனப் பெருக்கெடுத்தது.

"லலிதா! பிதற்றாதே, சும்மா இரு. எல்லாம் தெரியும் எனக்கு. சேகர்! கடைசி முறையாகக் கேட்கிறேன. நீயாக இக்குடிசையை விட்டுப் போகிறாயா, அல்லது கழுத்தைப்பிடித்து நெட்டித்தள்ள வேண்டுமா?"

சேகருக்குக் கோபம் வருமேயன்றி, பலவானல்ல. மிக்க கோழை மனதினன்.

"மோஹன்! நெட்டித்தள்ளினால் அதன் விளைவு உனக்குத் தெரியும்."

மோஹனால் பொறுக்கமுடியவில்லை. சேகரின் கழுத்தில் கையைக்கொடுத்து நெட்டித் தள்ளினான். தள்ளினவேகத்தில் சேகர் தரையில் விழுந்து மூர்ச்சையானான்.

மூர்ச்சையடையுமுன், "மோஹன்! உன் வேலை போய்விட்டது. நாளையிலிருந்து நீ ஆபீசுக்கு வரவேண்டிய அவசியம் இல்லை." என்று கூறினான். லலிதா அக்காட்சியைக் காணச் சகிக்கவில்லை. தேம்பித் தேம்பி அழ ஆரம்பித்தாள். அவளுடைய தேம்பலைக் கேட்ட மோஹனின் கண்களில் அன்பு பெருகியது. ஓடோடியும் சென்று லலிதாவை வாரி அணைத்துக்கொண்டான்.

"லலிதா! அழாதேயம்மா. இதோ என்னைப் பார். தாய்சொல்லைக் காப்பாற்றினேன். 'உன் வாழ்க்கை பாழாவதாக இருப்பினும் லலிதாவை ஆதரி' என்று என்னைக் கேட்டுக்கொண்டாள். அதன்படி நானும் என்னால் ஆனதைச் செய்தேன். வா, எழுந்திரு. என் கையைப்பிடித்துக்கொள். இனி நமக்கிங்கென்ன வேலை? வா, போவோம்" என்று அன்புடன் மொழிந்தான் தாய் சொல் காப்பாற்றிய தனயன்.

லலிதா மோஹனின் கையைப் பிடித்துக்கொண்டாள். அவர்களுக்கெதிரே தோன்றிய நீண்டதொரு பாதையிலே கை கோத்த வண்ணம் சென்றனர், பாசத்தால் பிணைக்கப்பட்ட அவ்விரு மானிடப்பிறவிகளும்!

மேதாஸ்

"சுந்தரி எலிக்ஸர்"

ஸ்திரீகளின் சூதக சம்பந்தமான வியாதிகளுக்கு

★ சிறந்த டானிக் ★

ஆயுர்வேத முறைப்படி தயார் செய்தது.

பிரபல டாக்டர்களின் மதிப்பைப் பெற்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்.

தயாரிப்பவர்கள்:—

K. S. மேதா & கோ., மதராஸ்.

ஹைதராபாத் ஏஜண்டு:—

ஸெண்ட்ரல் மெடிகல் ஸ்டோர்ஸ்,

ஸெகண்ட்ராபாத்.



உதயபுரி ஸ்நான கட்டம்

காலை ஸ்நானத்திற்காக ஸ்நான கட்டங்களுக்குச் செல்லும் உதயபுரி நாரீமணிகளின் சிங்கார உடைகள்மீது அருணோதய இளங்கதிர்கள் ஒளிவீசுகின்றன.

பாரத நாரீமணிகளின் எழில் வதனங்களும் காலைக்கதிரவனொளியில் திளங்கி விளங்குகின்றன. அவ்வெழிலுக்குக் காரணம் அவர்கள் தினம் தேய்த்துக்குளிக்கும் குளுமையும் இனிமை நறுமணம் கமழ்வதுமான ஹமாம் ஸோப்பேதான்!

ஹமாமின் புது வடிவத்தைக் கவனிக்கவும். அதன் எடை முன்போலவேதான் இருக்கிறது.

A TATA PRODUCT

ஹமாம்

உங்கள் ஸ்நானத்திற்குகந்த
பெரிய ஸோப்பு.

டாம்கோ விற்பனை இலாகா,
19, வாணியர் தெரு,
தபால்பெட்டி நெ. 31, மதராஸ்.

தி டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லிமிடெட்,
டாடாபுரம் & பம்பாய்.

எட்டுச்சேர் அரிசி

க. சந்தானம்

1943ஆம் வருஷம் பிப்ரவரி மாதம் பௌர்ணமி இரவு பத்துமணி. மனோரஞ்சன் சக்கரவர்த்தி வழக்கம்போல் தினசரிப் பத்திரிகை படித்து முடித்துவிட்டுச் சாய்வு நாற்காலியில் அமர்ந்து யோசனையில் ஆழ்ந்திருந்தார். அவர் அறைக்கு எதிரில் பத்மாநதி சமுத்திரம்போல் படர்ந்திருந்தது. பூர்ண சந்திரன் அதன் கலைகளில் நர்த்தனம் செய்து கொண்டிருந்தான். தன் வீட்டு வேலைகளை முடித்துக்கொண்டு சுலக்ஷணா அறைக்குள் வந்தாள். சிறிது நேரம் நின்றுகொண்டு பார்த்தாள். சிந்தையில் மூழ்கியிருந்த சக்கரவர்த்தி அவளைக் கவனிக்கவில்லை.

"திடீரென்று என்ன கவலை உங்களுக்கு வந்துவிட்டது?" என்றாள் மனைவி.

சக்கரவர்த்தி திடுக்கிட்டு எழுந்து புன்சிரிப்புடன் "பத்மாமீது பூர்ண சந்திரன் விளையாடுவதைப் பார்த்துப் பிரமித்திருந்தேன் போலும்" என்றார்.

"உங்கள் முகத்தைப் பார்த்தால் நிலவின் அழகில் மோகித்தவர்போல் தோன்றவில்லை" என்று சுலக்ஷணா சிரித்தாள்.

"பரிகாசம் போகட்டும். நாமிருவரும் படகில் ஏறிக்கொண்டு சிறிது நேரம் போய் வரலாம்!" என்று சொல்லிக்கொண்டே மனைவியின் கையைப் பிடித்து வெளியில் அழைத்து வந்தார்.

"தயாமயி இன்னும் தூங்கவில்லை. அவளையும் அழைத்துவருகிறேன்" என்றாள் சுலக்ஷணா.

அவள் கூறியதைக் கவனிக்காதவர்போல் முதலில் படகில் சுலக்ஷணாவை ஏற்றிவிட்டு, சக்கரவர்த்தி தாமும் ஏறினார். இருவரும் துடுப்புகளை எடுத்து மௌனமாகப் படகைச் செலுத்திகொண்டு போனார்கள். சிறிது தூரம் போய் ஏகாந்தமான ஓரிடத்தில் கரையோரமாகப் படகை நிறுத்தினார்கள். கண்ணுக்கெட்டிய வரையில் வேறு ஜீவன் தென்படவில்லை. சலசல வென்று ஆற்றின் அலை சப்தித்தது. நீர் வெள்ளமும் நிலா வெள்ளமும் கலந்து மனத்தைப் பரவசப்படுத்தின.

சக்கர: காளிபத முக்கர்ஜி நம் தயாமயியைக் கேட்கிறார்.

சுலக்ஷணாவுக்கு இடி விழுந்ததுபோலிருந்தது. இயற்கையின் அழகும் மனத்தின் மகிழ்ச்சியும் ஒரு விநாடியில் ஓடிவிட்டன.

சுல: இதென்ன அக்கிரமம்? அவர் உங்களை விடப் பெரியவரல்லவா?

சக்கர: ஆனாலென்ன? 45 வயதுதானே ஆயிற்று.

சுல: அவர் மனைவி மாலினி என் தோழி என்று உங்களுக்குத் தெரியாதா? அவள் செத்து இன்னும் மூன்று மாதங்கூட ஆகவில்லையே.

சக்கர: மனைவியில்லாமல் அவர் எப்படிக் குடித்தனம் செய்வார்? எண்பது பீகா நிலமிருக்கிறது. பதினாயிரம் ரூபாய் ரொக்கமிருக்கிறது. பெண் கொடுக்கப் போட்டி போடுகிறார்கள். ஆனால் அவருக்கு நம் தயாமயியைத் தவிர வேறு ஒருவரையும் பிடிக்கவில்லையாம்.

சுல: அவருக்கு மூன்று குழந்தைகள் இருப்பதை மறந்துவிட்டீர்களா? தயாமயிக்குப் பதினாறு வயது பூர்த்தியாகவில்லை. இப்படிக் கொண்டுபோய் குழியில் தள்ளுவதற்காகவா அவளைச் செல்லமாக வளர்த்தோம்?

சக்கர: உனக்குப் பிடிக்காவிட்டால் வேறு பெண் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிடுகிறேன். வங்காளி வீட்டில் மூன்று குழந்தைகள் மிகக் குறைவல்லவா. நம் நிலைமையையும் நினைத்துப்பார். மாதம் எழுபது ரூபாயில் நாமும் நம் ஏழு குழந்தைகளும் பிழைக்க வேண்டும். நல்லவனாகவும், சிறு பையனாகவும் பணத்தைப் பார்க்காதவனாகவும் எந்த வரன் கிடைக்கப்போகிறான்? கொஞ்சம் வயதானபோதிலும் காளிபாதர் கிழவர் அல்லர். நம் குழந்தைகளை உனக்குதவியாகவிருந்து வளர்த்துவந்த தயாமயிக்கு அவருடைய மூன்று குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளுவது அதிக கஷ்டமாக இராது. நம்மூரிலேயே இருப்பதால் நாமும் உதவி செய்யலாம். நமது மற்றக் குழந்தைகளுக்கும் அவள் பக்கபலமாக இருப்பாள்.

சுல: உங்களுக்கில்லாத பொறுப்பு எனக்குண்டா? ஆனால் என் மனம் சமாதானமாக இல்லை. உடனே முடிவு செய்யவேண்டாம். பிறகு பார்த்துக்கொள்ளுவோம்.

மௌனமாக இருவரும் வீடு சேர்ந்தார்கள். நிலவு நுழையாதபடி ஜன்னல்களையெல்லாம் மூடிவிட்டு, சுலக்ஷணா படுத்துக்கொண்டாள்.

2

அடுத்த நாள் நடுப்பகலில் தாயும் மகளும் தனித்திருந்தபொழுது, தயாமயி கேட்டாள், 'அம்மா, அப்பாவுக்கு என்பேரில் கோபமா? ஏன் என்னை நேற்றிரவு அழைத்துப்போகவில்லை?"

"அடி அசடே! உன்பேரில் என்றைக்காவது கோபித்ததுண்டா? தனிமையாக என்னிடம் பேசவிரும்பினார். அதனால்தான் உன்னை அழைத்துப்போகவில்லை."

"என்னிடம் சொல்லக்கூடாத விஷயமோ, அம்மா?" சுலக்ஷணா சற்றுத்தயங்கினாள். ஆனால் ஒளித்துவைப்பதில் என்ன பயன்? பெண்ணின் மனத்தைஅறிய இது ஒரு அவகாசமென்றெண்ணினாள்.

"வேறொன்றுமில்லை, தயாமயி. உன் கலியாணத்தைப்பற்றித்தான் சொன்னார். காளிபாதபாபுவை உனக்குத் தெரியுமே" என்றாள் அன்னை. "ஓகோ! சென்ற பத்து நாளாக குழந்தைகளுக்கு மத்தியானம் சிற்றுண்டிகொடுத்து நான் படகில் வரும்பொழுது, காளிபாதரும் என்வழி வந்துகொண்டிருக்கிறார். அப்பாவின் நண்பரென்று நானும் அவருடன் கூசாமல் பேசிக்கொண்டு வந்தேன். இதற்குத்தானா! நீ என்ன சொன்னாய், அம்மா?"

"எனக்குப் பிடிக்கவில்லை என்றுதான் சொன்னேன். அப்பாவுக்கும் இஷ்டமில்லை. ஆனால் நம் குடும்பநிலை உனக்குத்தெரியும். வலுவில்வந்த வரனை ஒரேயடியாக மறுத்துவிடலாமாவென்றுதான் தயங்கினார். உன் இஷ்டமென்ன?"

தயாமயி பதில் ஒன்றும் சொல்லவில்லை. ஏதோ காரியமிருப்பதுபோல் வேறு அறைக்குப் போய்விட்டாள்.

3

மனோரஞ்சன் சக்கரவர்த்தியின் ஊருக்குச் சுந்தர்கஞ்ச் என்றுபெயர். டாக்கா ஜில்லாவைச் சேர்ந்தது. இந்த ஜில்லா முழுதுமே ஓர் பெரிய ஆற்றுப்படுகையென்று கூறலாம். வங்காளத்தில் நுழையும்பொழுது கங்கா நதி பல ஆறுகளாகப் பிரிகிறது. கல்கத்தாவிலிருக்கும் ஹூக்ளி நதி ஒரு பிரிவு. ஆனால் எல்லாவற்றிலும் பெரிய பிரிவுக்குப் பத்மா என்றுபெயர். அது சராசரி ஒரு மைல் அகலமுள்ளது. சில விடங்களில் இரண்டு மூன்று மைல்கூட கரைகள் தெரியாமல் பரந்துகிடக்கிறது. பிரமபுத்திராவிலிருந்து பிரிந்துவரும் மேகனா நதியும் இவ்வாறே பிரம்மாண்டமானது. வெள்ள காலங்களில் இவ்விரண்டிற்கும் பயங்கரமான போட்டி ஏற்படுவதுண்டு. நடுவில் அகப்பட்டுக்கொண்ட கிராமங்களுக்கும், நகரங்களுக்கும் என்றும் ஆபத்து. வருஷந்தோறும் ஆயிரக்கணக்கான ஏகார நிலங்கள் நதியாகிவிடும். அப்படியே நதியின் பாகங்களும் நிலமாகிவிடும். வீடுகளின் கூரைகளும் சுவர்களும் இரும்புத் தகடுகளால் அமையப்பெற்றிருக்கும். வீடு முழ்கிவிட்டால், இந்தத் தகடுகளை எடுத்துக்கொண்டு வேறிடத்தில் கட்டிவிடுவார்கள்.

நெல்லும், சணலுமே இப்பிரதேசத்தில் விளையும். பெரிய வெள்ளம் வருவதற்குமுன் உழுது நெல்லைத் தெளித்துவருவார்கள். ஜலம் பெருகப்பெருகப் பயிரும் வளர்ந்துகொண்டே வரும். ஏழு, எட்டு அடி வளருவது சகஜம். கார்த்திகை மாதத்தில் ஜலம் வடியும்பொழுது கதிர்பழுத்து அறுப்புக்குத் தயாராகஇருக்கும். படகைக்கொண்டுதான் பலவிடங்களில் அறுக்கவேண்டிவரும். கதிர்அறுத்த ஒரு மாதத்திற்குப் பிறகு வைக்கோலை அறுத்துக் கொண்டு போவார்கள்.

சுந்தர்கஞ்ச் கிராமமுமல்ல, நகரமுமல்ல. சுமார் 2000 வீடுகள் இருந்தன. ஆனால் அவைகள் ஓரிடத்தில் சேர்ந்திருக்கவில்லை; பத்மாவின் இரண்டு கரைகளின் ஓரத்தில் மூன்று மைல் பரவியிருந்தது. நாலைந்து வீடுகளுக்கப்பால் குறுக்கு வாய்க்கால்கள் ஓடும். வீட்டுக்கு வீடு படகில்தான் போகவேண்டும். சிறு குழந்தைகளும், பெண்களும் தனிமையாகப் படகில் இந்தவாய்க்கால்களில் போவது ஒரு அற்புதமான காட்சி.

மனோரஞ்சன் சக்கரவர்த்தி எம். ஏ. பாஸ் பண்ணினவர். சுந்தர்கஞ்சிலுள்ள உயர்தரப் பாடசாலையில் ஆசிரியாகஇருந்தார். எழுபது ரூபாய் சம்பளம், ஏழு குழந்தைகள். வங்காளக் குடும்பங்களில் இது ஒரு மிதமிஞ்சிய சம்சாரமாகக் கருதப்படுவதில்லை. ஆயினும் நித்திய காலக்ஷேபம். செய்வது கடினமாக இருந்ததென்று கூறத் தேவையில்லை. அரிசி ரூபாய்க்குப் பத்துச்சேர் இருக்கும்பொழுதே தினம் ஒன்றரை ரூபாய்க்கு வாங்கவேண்டும். பிப்ரவரி மாதத்தில் ரூபாய்க்கு நாலு சேரானதும், அரிசி வாங்குவதற்கே சம்பளம் போதவில்லை. மார்ச்சு மாதம் மூன்று சேராயிற்று, ஏப்ரல் மாதம் 2 சேர், மே மாதம் ரூபாய்க்கு ஒரு சேராகிவிட்டது. பத்து வருஷமாகப் பிராவிடண்ட்பண்டில் எண்ணூறு ரூபாய் சேர்ந்திருக்கிறது. அதில் கடன் வாங்கிச் செலவழித்தது அதுவும் தீர்ந்து விட்டது. தம் மனைவியின் நகைகளை விற்று ஒரு மாதம் காலம் தள்ளினார். ஜூன் மாதத்தில் அரிசி விலைக்கு எல்லை இல்லாமல் போய் விட்டது. எந்த விலை கொடுத்தாலும் கிடைப்பது மில்லை. வீட்டில் ஒரு வேளை அரிசிச் சோறும் ஒரு வேளை கடலை பயறு வேறு ஏதாவது கிழங்குகளும் சாப்பிட்டுப் பார்த்தார்கள். குழந்தைகள் நாளுக்கு நாள் மெலிந்து வந்தார்கள். ஒரு மைலுக்கப்பாலுள்ள பள்ளிக்கூடத்திற்கு அவர்களைப் படகில் அழைத்துக் கொண்டு போக அவருக்குச் சக்தி இல்லை. பல மாணவர்கள் பள்ளிக்கூடத்திற்கு வருவதில்லை. பஞ்ச மென்ற பகாசுரன் ஏழைச் சிறுவர்களையும், சிறுமிகளையும் விழுங்க ஆரம்பித்தான். நாளுக்கு நாள் அவன் பசி அதிகரித்தது. பத்மாவின் புண்ணிய நீரில் பிணங்கள் மிதக்க ஆரம்பித்தன.

4

தயாமயி உணவின்றி வாடிக்கொண்டு வந்தாள். ஆனால் தன்னைபற்றி அவள் நினைக்கவில்லை. தன் தங்கை, தம்பிகள் கண்களில்

ஒளி மழுங்கி, தேகத்தில் எலும்புகள் தோன்றுவதைப் பார்த்து அவளால் சகிக்கமுடியவில்லை. தன் பெற்றோர்களின் முகத்தில் குடிகொண்ட துக்கத்தையும் தாங்க முடியவில்லை. ஜூன் மாதத்தில் ஒருநாள் இரவு, தன் தாயும் தந்தையும் இருந்த அறையில் போய் "என்னை உடனே காளிபாதருக்கு விவாகம் செய்துவிடுங்கள்" என்றாள். பெற்றோர்கள் ஒன்றும் சொல்லவில்லை. மனத்திற்கு மனம் வெட்ட வெளிச்சமாக இருக்கும்பொழுது, வீண் வார்த்தை ஏன்?

ஒரு வாரத்தில் கலியாணமாகி, தயாமயி காளி பாதர் வீட்டு எஜமானியாகிவிட்டாள்.

5

தன் தாய் பெற்ற குழந்தைகளையும், பெற்றோரையும் பஞ்சத்திலிருந்து காக்கவே தான் பெறாத பாலரின் பாரத்தையும், விரும்பாத புருஷனின் பணியையும் தயாமயி ஏற்றுக் கொண்டாள். ஆனால் புது வீடு வந்து ஒரு வாரத்திற்குள் அவள் விசித்திரமாக மாறிவிட்டாள். காலையிலிருந்து நடுநிசி வரையில் ஏழை ஸ்திரீகளும், குழந்தைகளும் அவள் வீட்டு வாசலில் வந்து நின்று 'லக்ஷ்மி, தேவி, அன்னபூர்ணா, தயாமயி, எங்களுக்கு ஒருவேளை சோறு போடவேண்டும். இல்லாவிட்டால் செத்துப்போவோம்' என்று கதறினார்கள். முதலில் தினம் நாலைந்து வேளை சமைத்துப் போட்டாள். நாள் தோறும் கூட்டம் அதிகரித்தது. அரிசியை எடுத்துக் கொடுக்க ஆரம்பித்தாள்.

காளிபாத முக்கர்ஜி நல்ல சுபாவமுள்ளவர். தயாமயியைப்பெற்றதில் அவருக்கு அளவற்ற ஆனந்தம். பஞ்சத்திலடிபட்ட ஏழைகளுக்குத் தம் இள மனைவி உதவி செய்வதில் முதலில் பெருமை அடைந்தார். ஆனால் நூற்றுக்கணக்கான ஏழைகள் வருவதையும், அனைவருக்கும் சளைக்காமல் தயாமயி அரிசி அளிப்பதையும் கண்டு அவருக்குக் கவலை உண்டாயிற்று. அவர் 5000 சேர் நெல் சேர்த்து வைத்திருந்தார். எண்ணிக்கையைக்கண்டு மயங்கவேண்டாம் நாம். சென்னைக்கணக்குக்கு 3000 பட்டணம் படியாகும். தினம் 20, 30 பட்டணம்படி தானம் கொடுத்தால் எத்தனை நாளைக்கு தாங்கும்? தயாமயியைக் கூப்பிட்டு மெதுவாக 'நீ தானம் செய்வதில் எனக்கும் திருப்திதான். ஆனால் நம் வீட்டிற்கு நான்கு மாதத்திற்கு வேண்டும். உன் தாய் வீட்டிற்கும் வேண்டும் இதையெல்லாம் யோசிக்கவேண்டாமா?' என்று கேட்டார்.

தயாமயியின் முகத்தில் சிறிது கோபக்குறி தோன்றிற்று.

'நம் வீட்டு வாசலில் ஒருவர் பட்டினி கிடந்தாலும், நான் சாப்பிடமாட்டேன்' என்றாள். அவள் மனத்தைச் சாந்தப்படுத்துவதற்காக, 'உன் தாயாருக்கு அரிசி அனுப்பினாயா?' என்றார்.

'எட்டுச்சேர் அனுப்பினேன்' என்றாள். 'எட்டுச்சேர் அரிசியில் அவர்கள் என்ன செய்வார்கள்? வாரத்திற்குப் பதினைந்து சேராவது வேண்டாமா' என்று கேட்டார் கணவர்.

'மற்றவர்கள் பட்டினி கிடக்கும்பொழுது, இவர்களுக்கு மட்டும் ஒருவேளை போதாதோ? அடுத்த அறுப்பு வரையில் வாரம் எட்டுச்சேர் அனுப்புவதாகவும், அதுதான் என் விலையென்றும் அப்பாவுக்கு எழுதிவிட்டேன்' என்று துக்கம் தொண்டையை அடைக்கக் கூறிவிட்டுத் தரையில் உட்கார்ந்து விம்மி அழ ஆரம்பித்தாள்.

அன்று முதல் தயாமயியின் வீடு ஒரு பெரிய சத்திரமாகிவிட்டது. அனாதைக்குழந்தைகள் அதைத் தங்கள் தாய் வீடாகப் பாவிக்கலானார்கள். ஊரில் எங்கும் அரிசி இல்லை. ஆனால் தயாமயியின் வீட்டிற்கு வந்து கெஞ்சினோர் எவரும் வெறுங்கையோடு போகவில்லை. கையிலிருந்த பணத்தை எல்லாம் செலவழித்துச் சொல்லக்கூடாத விலை கொடுத்து எங்கிருந்தோ காளிபாதர் அரிசி வாங்கிக் கொண்டு வந்து சேர்த்தார்.

டிஸம்பர் மாதம் முதல் தேதி. இரண்டு வாரத்தில் புதிய மாசூல் அறுவடை தொடங்கிவிடும். துர்க்கா தேவியின் தயவால் நல்ல விளைச்சல். ஆனால் "பட்டகாலிலே படும், கெட்டகுடியேகெடும்" என்ற பழமொழி வீணாகப் போகுமா? 'திடீரென்று மலேரியா ஜுரம் தோன்றிற்று' தான் எவ்வளவோ பாடு பட்டுக் காப்பாற்றிய குழந்தைகளும், ஸ்திரீகளும், புருஷர்களும் இரண்டு மூன்று நாட்கள் சுரமடித்துச் சாக ஆரம்பித்தார்கள். நோயாளிகளைத் தன் வீட்டில் ஒரு பாகத்தில் அழைத்து வைத்துத் தயாமயி சேவை செய்தாள்.

'என் பணம், சொத்து எல்லாம் போகட்டும். நீயும் சுரத்தில் அடிபட்டு விட்டால் என்ன செய்வேன்' என்று கெஞ்சினார் காளிபாதர்.

தயாமயி அதைப் பொருட்படுத்தவில்லை. சுரமும் அவளைத் தீண்டவில்லை. ஆனால் ஒரு நாள் காளிபாதருக்குக் கடுமையான சுரம் கண்டது, தயாமயி திகிலடைந்தாள். தன்னுடைய ஆவேசத்தில் தன் புருஷனைச் சிறிதும் லக்ஷியம் செய்யாததை நினைத்து நினைத்து உருகினாள்.

"என்னை மன்னிக்க வேண்டும்" என்று பன்முறை கெஞ்சினாள். புன்சிரிப்புடன் காளிபாதர் அவளை நோக்கி ஈனசுரத்தில் "நீ என்ன தவறு செய்தாய்? நீ செய்த புண்ணியத்தில் எனக்கும் பாகமுண்டு. உன்னால் நானும் நற்கதி அடைவேன். அனாதைகளை ரக்ஷிப்பதற்காக நம் குலதேவதை காளி உன்னை விடுவிக்கத் தீர்மானித்திருக்கிறாள் என்று நம்புகிறேன்" என்றார்! அடுத்த நாள் அவர் இறந்தார்.

... OF THE REGISTRAR OF BOOKS
21 JAN 1944
MADRAS

சீர்திருத்தம்

ப்ரேம் சந்த்

ஹரிணி மொழிபெயர்த்தது

●

ராமேச்வரி 'வராண்டா'வில் உட்கார்ந்து கொண்டு நிதானமாகக் காய்கறி 'பேரம்' செய்துகொண்டிருந்தாள். "உருளைக்கிழங்கு என்ன விலை?" "எட்டணு அம்மா!"

"நாலணுவுக்கு தரக்கூடாதா?" "முடியாதுங்க. கட்டுபடியில்லைங்க." "எல்லாம் தரலாம். ஒரு வீசை போடு." "ஐயய்ய! ரொம்ப நஸ்டங்க." என்று கூடையைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டாள் காய்கறி விற்பவள். வெகுநேரம் விவாதம் நடந்தது. கடைசியில் ஆறு அணுவுக்கு வாங்கத் தீர்மானமாயிற்று. பிறகு தராசு, படிக்கல் இவைகளின் சோதனை. தராசுத் தட்டு சரியாகவில்லை என்ற வாக்குவாதம். அடுத்த வீட்டிலிருந்து தராசு வந்தது. "கொசுருரண்டு போடேண்டி.." என்ருள் ராமேச்வரி. இரண்டு போட்டாள். "ஐய! என்ன கையடி" என்று முகவாய்க் கட்டையைத் தோளில் இடித்தாள். "சரிதாம்மா! மொள்ள மொள்ள இரண்டு வீசைக்கி பிடிங்கிடுவே போலே யிருக்கே. போதும். இனிமேல் நான் இந்த வீட்டு வாசப்படி ஏறமாட்டேன்." என்று பயமுறுத்தினுள். ஒருமாதிரியாக காய்கறி வியாபாரம் முடிந்தது. அப்பொழுதுதான் ஆபீஸிலிருந்து வந்த ராமேச்வரியின் கணவர் மோஹன் பாபு இந்த வேடிக்கையைப் பார்த்த வண்ணம் வாசற்படி அருகில் நின்றுகொண்டிருந்தார்.

காய்களை உள்ளே கொண்டுவைத்துவிட்டு, தீர்த்த பாத்திரத்துடன் கணவனருகில் வந்து நின்ருள் ராமேச்வரி.

"எட்டணுவுக்குக் காய்வாங்க இவ்வளவு நேரமா? காலத்தை இப்படி வீணுக்குகிருயே. இந்த நேரத்தில் ஆயிரம் ரூபாய் வியாபாரம் செய்யலாமே. இரண்டணுவுக்காக இப்படி முட்டிக்கொள்ளுகிருயே!" என்ருர் மோஹன் பாபு.

"காசு சும்மா கிடைக்கிறதா?" உண்மைதான். இருந்தாலும் காலமும் விலைமதிப்புள்ளதுதான், தெரிந்துகொள். இவ்வளவு நேரம் கஷ்டப்பட்டுக் காலணு மிச்சம் பிடித்திருப்பாயா?" "காலணுவைத்தான் சொல்லுங்களேன். எனக்கு மனசாகாது." "இந்த நேரத்தில் குறைந்தது இருபதுபக்கமாவது படித்திருக்கலாமல்லவா? படிக்கவேண்டியவை எவ்வளவோ இருக்கு. நேற்று வேலைக்காரியுடன் ஒரு மணிநேரம் மண்டையை உடைத்துக்கொண்டாய். முந்தாநாள் பால்காரியுடன் மணிக்கணக்கில் சாஸ்திரம் பேசினுய். இப்படி வீண் பொழுதுபோக்கவா வாழ்க்கை ஏற்பட்டிருக்கிறது?"

ராமேச்வரி பதில் பேசாமல் உள்ளேபோய் விட்டாள். மோஹன்பாபுவின் இரண்டாவது மனைவி ராமேச்வரி கலியாணமாகி இரண்டு மாதமாகிறது. வீட்டிற்கு அவள்தான் எஜமானி. மோஹன்பாபு அவளைச் சீர்திருத்தி, தம் எண்ணத்தின்படி நடக்கச் செய்ய விரும்பினுர். அவளும் எப்படியாவது தன் கணவரை திருப்தி செய்யவேண்டுமென்றுதான் விரும்பினுள். அவர் சொல்லுகிறபடியே யாவும் செய்து வந்தாள். ஆனுலும் தினமும் ஏதாவதொரு விஷயம் உபதேசிப்பதற்குக் கிடைத்துவிடும் அவருக்கு.

2

அன்றையதினம் பூனை பாலை குடித்துவிட்டது.

அப்பொழுதுதான் பாலைக்கொண்டுவந்து தன் கணவரின் தலைப்பக்கமுள்ள மேஜை மீது வைத்துவிட்டு வெற்றிலை மடித்துக்கொண்டிருந்தாள் ராமேச்வரி. மோஹன்பாபு பத்திரிகை படித்துக்கொண்டிருந்தார். பூனை கடவுளால் தனக்களிக்கப்பட்ட அதிகாரத்தை பாலின் மீது செலுத்தியது. உடனே ராமேச்வரி தன் அதிகாரத்தைப் பூனைமீது செலுத்தினுள். அருகிலுள்ள 'ரூல்' தடியை எடுத்துப் பூனைமீது வீசினுள். அது உருண்டு விழுந்துகொண்டு ஓடிற்று. மோஹன்பாபு வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்தார். மனைவியைச் சீர்திருத்த ஆரம்பித்தார்.

"செத்தால் என்ன செய்வது?" "பாலை ஏன் குடித்ததாம்?"

"அடித்தால் பால் வந்துவிடுமா?" "நஷ்டம் வந்தால் யாருக்கும் கோபம்தான்வரும்." "வரக்கூடாது. தெரியுமா? மனிதனுக்கும். மிருகத்திற்கும் என்ன வித்தியாசம்?" பிறகு

வெகுநேரம்வரை தயை, விவேகம், சாந்தி, இவைகளைப்பற்றி உபதேசித்தார். பாவம்! ராமேச்வரி துக்கம் தாளாமல் அழுதுவிட்டாள்.

மறுநாள். வாசலில் பிச்சைக்காரன் கத்தினன். அவள் அவனை விரட்டினுள். அவ்வளவு தான் உபதேசம் ஆரம்பமாகிவிட்டது.

"உனக்கு முடியாவிட்டால் நான் போடுகிறேன். ஏழைகளைக்கண்டு இறங்கவேண்டும். விரட்டுவதுபாவம்."

ராமேச்வரி புருவத்தை நெறித்து, "கவலை என்ன? நாள் முழுவதும்தான் வருகிருர்கள். யாரால் ஓடிஓடிப்போடமுடியும்? உலகமே பிச்சைக்காரமயமாகிவிட்டது போலிருக்கு." என்ருள் உதாசீனமாகச் சிரித்து. இப்படிப்" பட்டதேசத்தில்தானே நீயும் பிறந்திருக்கிருய்." என்ருர்.

"தடிக்கட்டைமாதிரி, வேலை ஏன் செய்யக்கூடாது?"

"வேலை கிடைத்தால் பிச்சை எடுப்பார்களா? அவர்களென்ன புத்தியில்லாதவர்களா? பாவம்! அங்கஹீனர்கள். அவர்களுக்குப் பிச்சையைத்தவிர வேறுவழியில்லை."

"சர்க்காரில் இவர்களுக்காக ஏன் அனுதாலயம் ஏற்படுத்தக்கூடாது?"

"சுயராஜ்யம் வந்தால் ஒருகால் ஏற்படும், இப்பொழுது ஒன்றும் முடியாது. ஆனல் சுயராஜ்யம் தருமத்தினல்தான் கிடைக்கும். "எத்தனையோ சந்யாசிகளும், சாதுக்களும், பிராம்முணர்களும் இனமாகச் சாமான்களைச் கொண்டு போகிருர்களே. அது போதாதா? இந்தத்தர்மத்திற்குச் சுயராஜ்யம் வருவதானல் எப்பொழுதோ வந்திருக்கலாமே!"

"உனக்கென்ன தெரியும்? இந்தத் தர்மங்களின் பலன்தான் ஹிந்துமதம் இதுவரை நிலைத்திருக்கிறது. இல்லாவிட்டால் எப்பொழுதோ பாதாளத்தில் மறைந்திருக்குமே. ஹிந்து ஜாதி ஒன்றுதான் இதுவரை எத்தனையோ கஷ்டங்களை எதிர்த்துப் போராடிக்கொண்டு நிலைத்து உயிருடனிருக்கிறது."

"உயிருடனிருக்கிறதா? நீங்கள் அப்படி நினைக்கலாம். ஆனல் நான் அப்படி நினைக்கவில்லை. என்றைய தினம் அது அடிமையாகிவிட்டாதோ அன்றைய தினமே அது இறந்துவிட்டதாகத்தான் நான் நினைக்கிறேன். சுதந்திரம் தான் உயிர். அடிமைத்தனம் மரணம்! சாவு! இல்லையா?"

மோஹன் பாபு ஆச்சர்யத்துடன் விழித்துப் பார்த்தார். "இந்தக் கலக எண்ணம் இவளிடம் எப்பொழுது உண்டாகியது?" என்று மனதிற்குள் கேட்டுக்கொண்டார். "மிக்க சாதுவாக அடங்கியிருந்தாளே. இதை இவளுக்கு யார் போதித்தனர்" என்று எண்ணமிட்டார். பிறகு, "இதென்ன வீண் விவாதம்! சரி! சரி! உள்ளே போய் வேலையைப் பார்" என்று கடினமாகக் கூறினர்.

ராமேச்வரி சில விநாடிகள் அவரை உற்றுப் பார்த்தவண்ணம் நின்ருள். பிறகு மெதுவாக அடிமேலடி வைத்து வெளியில் சென்ருள்.

3

அன்று மோஹன் பாபு வீட்டில் விருந்து சில முக்கியமான நண்பர்களை அழைத்திருந்தார். ராமேச்வரி காலை முதல் மாலை வரை சமையலறையிலேயே அடைபட்டுக் கிடந்தாள் அவளுக்கு இது பிடிக்கவில்லை. "விருந்து செய்யவேணுமென்ருல் யாரையாவது சமயல் ஆளைக் கூப்பிட்டால் என்ன? எல்லா வேலையும் என் தலையில்தான் போடவேணுமோ! போகட்டும். என்னை ஒரு வார்த்தையாவது கேட்டாரா? கேட்டால் நான் தடுக்கப்போவதென்னமோ இல்லை. என்னைக்கலந்துகொண்டு செய்தால் இந்த விருந்தை நானே செய்வது போல் சந்தோஷமாகச் செய்வேன்" என்று முணமுணத்தாள். வேலைக்காரியிடம் வேலை வாங்குவதைப்போல் தன்னிடம் வேலைவாங்கப் படுவதாக அவள் நினைத்தாள்.

சாப்பாடு முடிந்தது. யாவரும் சென்றனர். ஆனல் பாபு சாப்பிடவில்லை. முகத்தை 'உர்' என்று வைத்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

"சாப்பிட வரக்கூடாதா? நாழிகையாகவில்லையா?"

"என்ன சாப்பாடு வேண்டியிருக்கு. அது என்ன சாப்பாடா அது?" அவளுக்குக் கோபம் பற்றிக்கொண்டு வந்தது. "நாள் முழுவதும் அடுப்பங்கரையில் அவதிப்பட்டதற்கு இது தான பரிசு?" என்று நினைத்தாள்.

"தெரிந்தவரையில் செய்தேன்." பூரி வேகவேயில்லை."

"இருக்கலாம்." "பகோடாவில் ஒரே உப்பு" "அப்படியா?"

"ஸ்திரீகளுக்கு முக்கியமாகத் தெரியவேண்டியது சமையல் வேலை. தெரியுமா? நன்ருகச் சமையல் செய்யத் தெ......... உபதேசம் தொடர்ந்தது. ராமேச்வரி அலுப்புடன் முணகிய வண்ணம் போய்விட்டாள்.

4

இரண்டு மாதம் சென்றன. மோஹன் பாபுவின் அத்தான் குமாரபாபு வந்தான். ராமேச்வரி அவனுக்கு ஆசார உபசாரம் செய்தாள். ஒரு வாரம், ஒரு மாதம், ஆறு மாதம் சென்

றது. அவன் வீட்டைவிட்டு புறப்படுவதாகவே இல்லை பார்த்தார் மோஹன் பாபு. மனைவியை கூப்பிட்டார். "நீ தப்புவேலையே செய்கிருய்" என்ருர்.

"என்ன தப்பு?"

"குமார பாபுவை நகரவிட மாட்டாய்போலிருக்கிறதே?"

"ஐயையோ! நானென்ன செய்தேன்!"

"இப்படி உபசாரம் செய்தால், அவன் ஏன் போகிருன்?"

"நன்ருஇருக்கு. வீடு தேடி வந்தவாளை அவமரியாதை செய்யலாமா?"

"வரவர உனக்கு வாய்த்துடுக்கு அதிகமாகிவிட்டது. சரி, இந்தமாதிரி சாப்பாட்டு ராமன்களுக்கு உபசாரம் செய்வது பாபம். தெரியுமா? தெரியாவிட்டால் நான் சொல்வதைக் கேள். நீ இந்தமாதிரி தலையில் ஏற்றிக்கொள்ளாமலிருந்தால் அவன் இவ்வளவு நாள் போய்விட்டிருப்பான். நல்ல சாப்பாடு. இரண்டு வேளையும் 'டிபன்' கிடைக்கும்போது அவன் ஏன் கிளம்புகிருன்?"

"சாப்பாடு போடாமல் இருக்கமுடியுமா?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. ஆளைப் பார்த்து உபசாரம் செய்யவேண்டும். இது தெரியாவிட்டால் என்னசெய்வது? எதற்கென்றுதான் முட்டிக்கொள்வது? இம்மாதிரியான சோம்பேறிகளுக்குச் சாப்பாடு போடுவது உண்மையில் அவர்களுக்கு விஷம் தருவதற்குச் சமமானது. தெரியுமா? விஷத்தினுல் உயிர்தான் போகும். இந்த உபசாரம் ஆத்மாவையே கொலைசெய்துவிடும். இவன் எவ்வளவு நாள் வேண்டுமானுலும் இங்கேயிருக்கட்டும். எனக்கு ஆக்ஷேபனையில்லை. ஆனுல் பிறகு வாழ்க்கை முழுவதும் சோம்பேறிகுணம் உடம்பில் ஊறி ஒன்றுக்குமே உதவாதவனுக ஆகிவிடுவான். பிறகு அவனுல் ஒரு வேலையும் செய்ய முடியாது. அப்பொழுது அவன் கெட்டதற்கு நீ தான் காரணம் என்று ஏற்படும்."

தர்க்கம் நீண்டது. உதாரணங்கள் கிளம்பின. ராமேச்வரி கோபித்துக்கொண்டு அங்கிருந்து வேகமாக நடந்தாள்.

"இவர் என்றுதான் என் வேலைகளுக்குக் குற்றம் சொல்லாமலிருக்கப் போகிருரோ? இந்த உபதேசமழை, சீர் திருத்தப் பைத்தியம். என்றைக்குத்தான் ஓயப்போகிறதோ?" என்ற கேள்வி அவள் மனதில் எழுந்தது.

— 5 —

ஒரு நாள் கிராமத்திலிருந்து புத்துருக்கு நெய் வந்தது. அதன் வாசனை வீட்டையே தூக்கியது. கடை நெய் சாப்பிட்டு அலுத்துப் போயிருந்த ராமேச்வரியின் நாக்கில் ஜலம் ஊறியது. பானையுடன் சமையலறையில் அடுப்பின் அருகில்வைத்திருந்தாள். வேலைக்காரிசமை

பாத்ருடுவின்

பால சஞ்சீவினி (Regd.)

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்

48 வருஷகாலமாகப் பல்லாயிரக்கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக் கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனுல் பல பிரக்கியாதிபெற்ற டாக்டர்கள் இச்சஞ்சீவினியை உபயோகித்துக்கொண்டிருக்கிருர்கள்.

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாருதீர்கள்

டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,

11, தெற்கு மாடவீதி, மைலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில் கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு, தெப்பக்குளம் போஸ்டு.

யறையைச் சுத்தம்செய்வதற்காக வந்தாள். நெய் பாத்திரத்தை உறியில் வைக்கலாமென்று எடுத்தாள். கைதவறி விழுந்து உடைந்துவிட்டது. நெய் சாக்கடையில் ஓடியது. சத்தம் கேட்டதும் ராமேச்வரி ஓடிவந்தாள். வேலைக்காரி அழுதுகொண்டு நின்றாள்.

"என்னடி இது? ஐய்யய்யோ! நெய்யெல்லாம் போச்சே. ஒரு துளிகூட வாயில் வைக்கவில்லையே! நன்னாயிருக்கு. கண் அவிஞ்சு போச்சா? வரவர உடம்பில் பயமில்லை. எங்கே இருந்துடி விழுந்தது?" என்று இரைந்தாள்.

"அம்மா! உறியில் வைக்கலாமென்று எடுத்தேன். வழுக்கிவிட்டது அம்மா! தவறிவிட்டது. என் துரதிர்ஷ்டம். இன்னிக்கி யார் முகத்தில் விழித்தேனோ" என்று அழுதாள்.

"அழுகை என்னடீ? அழுகை? உன் சம்பளத்தில்தான் பிடிக்கப்போகிறேன். தெரியுமா?"

அம்மணி! என்னிடம் ஒரு தம்பிடிகூட இல்லையே. செத்தேபோய்விடுவேன்."

"போயேன். இருந்து என்ன?"

"அம்மா! நல்லது. அப்படித்தான் பிடித்துக்கொள்ளுங்கள். பசியால் சாகத்தானே போறேன். போகட்டுமே. இருந்து என்ன சுகத்தை கண்டேன்."

ராமேச்வரியின் மனது இளகிவிட்டது. "சரி! சரி! போ. இதை மெழுகிவிட்டு, கடைக்குப்போய் நெய் வாங்கிக்கொண்டு வா" என்றாள். அதே சமயம் மோஹன்பாபு அங்கே வந்தார்.

"இது எப்படி உடைந்தது?"

"உறியில் வைக்கப்போனாள். தவறி விழுந்துவிட்டது."

"நெயயெல்லாம் போச்சா?"

"ஆமாம்."

"ஆமாம்! ரொம்ப சாவதானமாகச் சொல்லுகிறாயே? வேலைக்காரியைக் கண்டிப்பது கிடையாதா?"

"கண்டித்தால் கிடைத்துவிடுமா? ஏதோ தவறிவிட்டது. வேணுமென்று போட்டாளா?"

"இந்த நஷ்டம் யார் தலையில்?"

"ஏன்? நாம்தான் ஏற்றுக்கொள்ளவேணும். நான் உடைத்துவிட்டால்? என்கையை வெட்டிவிடுவீர்களா?"

மோஹன்பாபு கர்ஜித்தார். கோபம் பொங்கி வந்தது. "உன்னுடைய வார்த்தைகள் வரவர எனக்குப் புரியவில்லையே. யார் நஷ்டம் செய்தார்களோ அவர்களிடம்தான் வசூலிக்க வேணும். அதுதான் கடவுள் கட்டளை. உயிருக்கு உயிர். கண்ணுக்குக் கண். இதுதான் இயேசுகிறிஸ்துவின் வாக்யம்கூட. தெரியுமா? தண்டனை என்பது போய்விட்டால் பிறகு ஒருவராலும் உலகில் வாழமுடியாது. உலகம் பூராவும் ரத்தமயமாகிவிடும். கொலைஞர்கள் பட்டப்பகலில் கழுத்தை முறிக்கத் தயங்கமாட்டார்கள். தண்டனையினால்தான் சமூகத்தின் மரியாதை நிலைத்திருக்கிறது. தெரிந்துகொள். தண்டனை இல்லாவிட்டால் உலகமே அழிந்துவிடும். மனு முதலிய 'ஸ்மிருதி' எழுதியவர்கள் முட்டாள்களல்லர். தண்ட நியாயத்திற்கு எவ்வளவு மகிமை கொடுத்திருக்கிறார்கள் தெரியுமா? முதலாவது மரியாதையைக் காத்துக்கொள்ளத் தண்டனை மிக்க அவசியம். ஆகையால் நெய்யின் விலையை வேலைக்காரியிடம்தான் வசூலிக்கவேண்டும். இல்லாவிட்டால் இன்று இப்படியாச்சு. நாளைக்கு இன்னும் என்ன செய்வாளோ" என்று கூச்சலிட்டார்.

"நான் அவளை மன்னித்துவிட்டேனே?"

"நீ யார் மன்னிப்பதற்கு? மன்னிப்பா? ஒருநாளுமில்லை. நான் மன்னிக்கமாட்டேன்."

வேலைக்காரி வெளியில் நின்று இந்த வாக்குவாதத்தைக் கேட்டுக்கொண்டிருந்தாள். தனக்காக எஜமானியம்மாள் 'திட்டு'க் கேட்பதை அவளால் பொறுக்கமுடியவில்லை. பரபரப்புடன் எதிரில் வந்து, "பாபுஜீ! என் சம்பளத்தில் பிடித்துக்கொள்ளுங்கள். கையில் பணமில்லை. இல்லாவிட்டால் இப்பொழுதே கொடுத்துவிடுவேன்."

"சரிதான் போடி. ரொம்ப பணக்காரிதான் போ. நீ ஏன் இங்கே வந்தாய்? ஓடு" என்று மிரட்டினாள் ராமேச்வரி.

"நீ ஏன் அவளுக்காக 'வகாலத்து'ப் பேசுகிறாய்? இந்தச் சாதாரண விஷயம் சிறு குழந்தைக்குக்கூட தெரியுமே. யார் நஷ்டம் உண்டாக்கினார்களோ அவர்கள்தான் அதைத்தீர்க்க வேண்டும். இவ்வளவுக்கும் காரணம் அலக்ஷ்யம்தானே? உடம்பில் பயமில்லை. பாத்திரத்தைக் கெட்டியாகப் பிடிப்பதற்கென்ன? நான் விடமாட்டேன்" என்று கூறியபடியே வெளியில் சென்றார்.

— 6 —

ராமேச்வரி அவமானத்தினால் குன்றிப்போய் விட்டாள். "என்னை மிரட்டவேணுமானால் தனியாகக் கூப்பிட்டு மிரட்டக்கூடாதா? வேலைக்காரியின் எதிரில் என்னை இப்படி அவமானப்படுத்தினாரே! இவருடைய சுபாவம் தான் என்ன? என்ன மனிதர் இவர்? எப்பொழுதும் உருட்டலும், மிரட்டலும்தானா? என்றைக்காவது இனிமையாகப் பேசியதுண்டா? அப்பா! என்ன கண்டிப்பு.

நான் எங்கும் கண்டதேயில்லை. இன்று ஒரு வார்த்தை சொல்லுகிறார். நாளைக்கு அதை மாற்றிவிடுகிறார். இதை ஏன் செய்தாய்! என்கிறார், செய்யாவிட்டால் ஏன் செய்ய வில்லை என்று கேட்கிறார். பதில் சொன்னால் வாயாடி என்கிறார். போதும், போதும், இந்த வாழ்க்கை. ஒரு நாள் தயை, பெருந் தன்மை, இவைகளின் அவதாரமாகிவிடுகிறார். ஒரு நாள் சிறு நஷ்டத்திற்காக உயிரை விடு கிறார். வேடிக்கைதான். பைத்யம் பிடித்து விட்டது. ஒருநாள் கூட அவர் வாயில் திருப்தி யான வார்த்தை வராதா? எப்பொழுதும் அதிகாரம்தானா? நயமே கிடையாது. எப்படி நடந்துகொண்டாலும் அதிருப்திதானா? நான் என்ன சுகத்தைக்கண்டேன். இனிமேல் என் குணத்தை மாற்றிக்கொள்ளவேண்டியதுதான். இதெல்லாம் என்னால் வந்ததுதான். அடங்கி அடங்கி, பயந்து பயந்து இருந்ததற்குப்பலன் இது. எத்தனை நாள்தான் சகிப்பது? எதற்கும் எல்லை உண்டு. இவர் குணத்தையே என்னால் அறிய முடியவில்லை. அப்படியிருக்க இவரை நான் எப்படிச் சந்தோஷப்படுத்த முடியும்? இதற்கு என்ன வைத்தியம்? என்ன உபாயம்! ஆம், அதுதான் சரி! இனிமேல் நானாக ஒரு வேலையும் செய்யப்போவதில்லை. அவர் எதைச் சொல்லுகிறாரோ அதுவரை செய்துவிட்டுப் பேசாமலிருந்துவிடுகிறேன். என் வேலை பிடிக் காதபோது நான் ஏன் செய்யவேண்டும்?" என்று இரவு முவுவதும் யோசித்து வருத்தப் பட்டாள்.

பொழுதுவிடிந்தது. மோஹன்பாபு காலையில் உலாவிவிட்டு, நதியில் ஸ்னானம் செய்து வரும்போது ஒன்பது மணியாகிவிட்டது. வீட் டில் பாத்திரங்கள் அப்படியே கிடந்தன. "ஏன் வேலைக்காரி வரவில்லையா?"

"இல்லை." "அப்புறம்?"

"உங்கள் உத்தரவு எப்படியோ அப்படிச் செய்கிறேன்."

"அப்பப்பா! வரவர இந்த வீட்டில் தொந் தரவு பொறுக்கவேமுடியவில்லை. ரொம்ப கஷ்டம்".

"ஆமாம் நிஜம்தான்."

"பக்கத்து வீட்டு வேலைக்காரியைக்கூப்பிடக் கூடாதா?"

"உத்தரவில்லாமல் எப்படிக் கூப்பிடுவது? இனிமேல் கூப்பிடுகிறேன்.

"இனிமேல் அவள் வந்து, எப்போது சமைய லாகும்? மணி ஒன்பதாகிவிட்டதே. இதுகூட தெரியாதா? சுயபுத்தி கிடையாதா?"

"இல்லாமலென்ன, இனிமேல் என் புத் தியை உபயோகிக்கப்போவதில்லை. கூப்பிட் டால் ஏன் கூப்பிட்டாய் என்பீர்கள். இனி நீங்கள் உத்தரவிட்டவேலையைத்தான் செய் யப்போகிறேன். ஒருவர் கேள்வி கேட்பது எனக்குப் பிடிக்கவில்லையே."

"சரி உன்னிஷ்டம்தான் என்ன?"

"தங்கள் கட்டளை."

"நீ என்னைப் பரிகாசமா செய்கிறாய்?"

"நன்னா இருக்கு. எனக்கென்ன அவ்வளவு துணிச்சலா? நான்தான் உங்கள் அடிமை யாயிற்றே. எதைச் சொன்னாலும் அப்படியே செய்கிறேன்."

"உன்னிஷ்டப்படி செய். நான் போகி றேன்."

"சரி! அப்படியே! எனக்கு ஒரு இஷ்டமு மில்லை"

"நீ சாப்பிடவேண்டாமா?"

"நீங்கள் செய்வதை நானும் செய்கிறேன்."

மோஹன்பாபு ஹோட்டலுக்குப் போய்ச் சாப்பாடு வாங்கிவந்தார். ஒருவராக அந்த வேளைச் சாப்பாடு முடிந்தது. ஆபீஸுக்குப் போய்விட்டார். சாயங்காலம் திரும்பிவந்த தும் "வேலைக்காரி வந்தாளா?" என்று கேட் டார். 'இல்லை' என்றாள்.

"ஏன்? நான்தான் பக்கத்தில் இருப்பவனைக் கூப்பிடச் சொன்னேனே?"

"கூப்பிட்டேன். நாலு ரூபாய் கேட்டாள்."

"ஒரு ரூபாய்தானே வித்யாசம். ஏற்பாடு செய்வதுதானே."

"எனக்கு அதற்கு அதிகாரமில்லை. ஒரு ரூபாய் ஏன் அதிகம்? செலவை மட்டுபடுத்தத் தெரியவில்லை என்று கேள்வி கிளம்பினால் நானென்ன செய்வது?"

"நீ சுத்த முட்டாள்."

"ஆமாம். முட்டாள்தான்."

"இப்பவும் சமையல் கிடையாதா?"

"இல்லை" என்று தலையசைத்தாள்.

மோஹன்பாபு தலையிலடித்துக்கொண்டார். இதேதடா சங்கடம் என்று கத்தினார். மனைவியைக் கண்டபடி திட்டினார். அவள் ஒன்றையும் லக்ஷ்யம் செய்யவேயில்லை. பிறகு எங்கேயோ தேடியலைந்து ஒரு ஆளைக் கூட்டி வந்தார். அவள் பாத்திரங்களைச் சுத்தம்செய்து விட்டுப் போய்விட்டாள்.

"என்ன சமயல் செய்யட்டும்?" என்று மிக்க பணிவாகக்கேட்டாள் ராமேச்வரி.

"ரொட்டியும், கூட்டும் செய்யேன். இது கூடவா கேட்கவேண்டும்?"

"வீட்டில் காய் ஒன்றுமேயில்லை."

"நாள் முழுவதும் விட்டில் உட்கார்ந்து கொண்டு என்ன செய்தாய்? காய்கறிகூடவா வாங்கக்கூடாது?"

"காய் வாங்க உத்தரவில்லை. அதிகம்கொடுத்துவிட்டால் என்ன செய்வது?"

"என்னதான் செய்யச் சொல்லுகிறாய்?"

"ஒன்றுமில்லை. என்னால் அவமானத்தைச் சகிக்கமுடியாது." என்றாள் சாந்தமாக.

"உன்னை யார் அவமானம் செய்தார்கள்?"

"ஏன்! நீங்கள்தான்."

"அப்படியானால் வீட்டு விஷயத்தில் நான் ஒன்றுமே சொல்லக் கூடாதா?"

"நீங்கள் சொல்லாமல் பிறகு யார் சொல்வார்கள்?"

அன்றிரவு ரொட்டியும் பருப்பும் சாப்பிட்டனர். ராமேச்வரி உடனே தூங்கிவிட்டாள். மோகன் பாபுவுக்குத் தூக்கமே வரவில்லை. படுக்கையில் புரண்டவண்ணம் எண்ணமிட்டுக் கொண்டிருந்தார். "இதென்ன கஷ்டம். இவள் இப்படி மாறிவிட்டாளே. அடங்கி ஒடுங்கி கிடந்தவளுக்கு இவ்வளவு துணிச்சல் எப்படி வந்தது? இந்த மாதிரி ஒத்துழையாமையில் இறங்கிவிட்டால் வீட்டில் ஒரு வேலையும் நடவாது. இன்றைக்கே சாப்பாடு திண்டாட்டமாகிவிட்டதே? என்ன செய்வது, நானென்னமோ விரட்டுவதாக இவள் நினைக்கிறாள் போலிருக்கிறது. என்னாலோ பேசாமல் இருக்க முடியவில்லை. பேசினாலும் பிரயோசனத்தைக் காணோம். இவள் எண்ணம் தான் என்னமோ! வேலைக்காரியிடம் வசூலிப்பது இவளுக்குப் பிடிக்கவில்லை போலிருக்கிறது. தினமும் என்னால் கடைக்குப் போகமுடியுமா? கடைசியில் பணமும் வரவில்லை. வேலைக்காரியும் நின்று விட்டாள். இதற்கு வழி என்ன?" என்று யோசித்தார். மனைவியை எழுப்பி "அதற்குள்ளேயா தூக்கம்? நன்றாகத் தூங்குகிறாயே?"

"கூலி வேலைக்காரர்களுக்கு என்ன விசாரம்? நல்ல தூக்கம் தான் வரும்."

"இது தானே வேண்டாமென்கிறேன். சீண்டாதே, தெரியுமா? வேலைக்காரியை வரச் சொல்லு. பணம் வசூலிக்க வேண்டாம்."

"அவளென்ன பணத்துடன் வாசலில் நிற்கிறாளா என்ன?

"இல்லை. அவளை வரச்சொல்லு."

"சரி. சொல்லியனுப்புகிறேன்."

"இதோபார்! இனி மேல் உனக்கு குறுக்கே பேச மாட்டேன்."

"பேசினால் என்ன? அவமானத்தைத்தான் என்னால் சகிக்க முடியாது."

"இங்கே வாயேன். என்னை மன்னித்து விடு என்ன?"

"நன்றாயிருக்கு. மன்னிப்பதற்கு என்ன இருக்கிறது?"

"இல்லை. உண்மையாகவே இனி மேல் உன்னிடம் தப்புக் கண்டு பிடிக்க மாட்டேன்."

"நிஜமாகவா? மனப்பூர்வ மாகத்தானா சொல்லுகிறீர்கள்?"

"ஆமாம். மனப்பூர்வமாகச் சொல்லுகிறேன் உண்மைதான்." ராமேச்வரி தலை குனிந்து சிரித்தாள்.

உடைந்த வீணை



கே. சுந்தரம்மாள்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

3

மாம்பலத்தில் உஸ்மான் ரோட்டிலுள்ளது ரிடையர்டு ஜட்ஜ் ராகவய்யாவின் பங்களா. காம்பவுண்ட் வாசற்படியிலிருந்து பங்களா சுமார் அரை பர்லாங்கு தூரமிருக்கும். நடை பாதையில் மூங்கில் கமான் வளைத்து, அதில் புஷ்பக்கொடிகள் படர்ந்திருந்தன. கார் போகும்படியான வசதியுள்ள நடைபாதை. சுற்றிலும் மா, தென்னை, பலா முதலிய மரங்களடர்ந்து வளர்ந்திருந்தன. அதற்கு நடுவில் அழகிய வேலைப்பாடுகளுடன் ஆச்ரமம்போல் தோற்றமளித்தது "மாலதி நிலையம்". தெருவில் போவோர் வருவோர்கள், அந்தப் பங்களாவைச் சற்று நின்று பார்த்துவிட்டே செல்லுவார்கள். அவ்வளவு மனோரம்யமான இடம்.

காலை ஏழு மணி. சூரியனது காலைக் கிரணத்தால், தங்கமுலாம் பூசப்பட்டதுபோலக்காட்சி கொடுத்தது, மாலதி நிலையம். வாசலில் ரிக்ஷா வந்துநின்றது. அதிலிருந்து இறங்கிய நரேந்திர சந்தர், வண்டிக்காரனுக்குக் கூலியைக் கொடுத்துவிட்டு வீணையுடன் காம்பவுண்டில் நுழைந்தான். பங்களா வெளிவராந்தாவில் நின்றுகொண்டிருந்த சேவகன் இவனை அன்புடன் வரவேற்று, ராகவய்யா இருக்கும் அறையைக் காண்பித்தான்.

அறையின் சுற்றிலும் பீரோக்களில் புஸ்தகங்கள் நிறைந்திருந்தன. தமிழ்ப் பெரியார் படங்களும், மஹாத்மா காந்தி, ஜவகர் முதலிய தேசபக்தர் படங்களும் மாட்டப்பட்டிருந்தன. நடுமத்தியில் மேஜையும் சுற்றிலும் நாற்காலிகளும் போடப்பட்டிருந்தன. மேஜையருகிலுள்ள நாற்காலியில் வாசற்படியைப் பார்த்தவாறு உட்கார்ந்து, குனிந்து ஏதோ எழுதிக்கொண்டிருந்தார் ராகவய்யா. சிவந்த மேனியும் வழுக்கைத் தலையும் நல்ல உயரமும் உயரத்திற்கேற்ற பருமனும், கண்ணில் தங்கக் கட்டுடன் கூடிய கண்ணாடியும் உடையவராய், சாந்தமே உருவெடுத்ததுபோலிருக்கும் ராகவய்யாவைக்கண்டதும், "தனது குருநாதர் வார்த்தை உண்மையே" என்று எண்ணினான். குனிந்தவாறு எழுதிக்கொண்டிருந்தாலும் தலைக்குநேராக மின்சார விசிறி லேசாகச் சுற்றும் சப்தத்தினாலும் வாசற்படியில் நின்ற நரேனை அவர் கவனிக்கவில்லை

"நமஸ்காரம்" என்றான் நரேன்.

நிமிர்ந்து பார்த்துவிட்டு, "வா அப்பா! நீ யார் தெரியவில்லை" என்றார் அன்பாக.

"வித்வான் வெங்கிடமாஹரியின் புத்ரன்" என்று சொல்லிவிட்டு கடிதஉறையை நீட்டினான்.

"என்ன? வேங்கடமஹரியின் புதல்வனா? பாவம். அவரை இழந்ததினால் சங்கீத உலகத்தின் சிகரமே விழுந்ததுபோலாயிற்று. உன்னைப்பற்றி என்னிடம் சொல்லியிருக்கிறார்; ஆனால் இதுவரை உன்னை நான் பார்த்ததில்லை" என்று சொல்லிக்கொண்டே, கடிதத்தைப் படித்தார் ராகவய்யா. "பிறகு, நரேந்திரா! கவலைப்படாதே. என்னை உன் தந்தை வேங்

கடமஷியாகவே நினைத்துக்கொள். இந்த வீடு உன்னுடையது. உனது எதிர்காலத்தை என்னால் கூடுமான வரையில் நன்மைதநவதாக்குவேன்'' என்று அன்பாகக் கூறினர்.

வீணை ஒன்றே தனக்கு ஆதாரமாகக் கொண்டு திக்குத்திசை தெரியாமல் உழன்று, ராகவய்யா எப்படிப்பட்டவரோ, எவ்விதமான வரவேற்புக் கிடைக்குமோ என்ற சஞ்சலத்துடன் வந்த நரேந்திரனுக்கு, காய்ந்த பயிரில், மழைத்துளி விழுந்ததுபோலிருந்தன. அவரின் அன்பான மொழிகள். அந்த நிலைமையில் அவருக்கு எந்த விதமாக நன்றியறிதலைத் தெரிவிப்பது என்று அவனுக்குப்புரியவில்லை. அதனல் ''என் தந்தை தங்களைப்பற்றி மிகவும் சொன்னர். இப்பொழுது உங்களது அன்பான வார்த்தை, எனக்கு இன்னதெனச் சொல்ல முடியாத—என்ன சொல்லுவது—என்று புரியாத ஆனந்தம் உண்டாக்குகிறது'' என்ருன் கண்களில் நீர் தளும்ப.

அச்சமயம் ''அப்பா!'' என அழைத்துக் கொண்டே, பதினெட்டு வயதுடைய, ஒரு யுவதியும், இருபத்திரண்டு வயது என மதிக்கத் தகுந்த வாலிபனும் வந்தார்கள். அன்னியன் நிற்பதைக்கருதிச் சற்றுப் பின்வாங்கினள் யுவதி.

''மாலதி! சும்மா வா! நீ பயப்படவேண்டிய அவசியமில்லை. நரேன் அன்னியனல்லன். நம்முள் ஒருவனே. சில வருஷங்களுக்கு முன், ஒரு மாதமிருந்து உனக்கு வீணை கற்றுக்கொடுத்தாரே வேங்கடமகி, அவருடைய பிள்ளை இவன். அன்று பேப்பரில் அவர் இறந்துவிட்டதாகப் படித்தோமல்லவா, அதனல், இவனை முன்னுக்குக் கொண்டுவரும் பொறுப்பை என்னிடம் ஒப்படைத்திருக்கிருர். அவரின் மரண வாக்கை நான் காப்பாற்றியாகவேண்டும். ''ராமூ! இவனுக்குக் காலை ஆகாரம் செய்வி, மாடி முன்னறையை இவனுக்காக ஏற்படுத்திக்கொடு. மாலதி! நீ தினம் இவனிடம் வீணை கற்றுக்கொள்ளலாம்'' என்ருர்.

நரேன் அந்நங்கையைக் கண்டதும் ஆச்சரியமடைந்தான். என்ன அழகு! எவ்வளவு சுறுசுறுப்பான கண்கள்! இவளையடைய எவன் கொடுத்துவைத்திருக்கிருனே? என்று சட்டென அவன் மனதில் ஓர் எண்ணம் உதித்தது. தனது ஊரில் எவ்வளவோ அழகியப் பெண்களைப் பார்த்திருக்கிருன். ஆனல் இப்படிப்பட்ட எண்ணம் உண்டானதில்லை 'இதுவென்ன?' என்ற நினைப்பில் பிரமைதட்டினவன்போல் அவளைப் பார்த்தபடி நின்றுவிட்டான். 'நரேன்! வா' என்று கையிலுள்ள பெட்டியை வாங்கினன் ராமு. தன் நிலைமையைச் சீர்படுத்திக்கொண்டான் நரேன்.

ராகவய்யாவிற்கு இரண்டு பிள்ளைகளும், ஒரு பெண்ணும் உண்டு. மூத்தவன் மாதவன் கிண்டியில் ரிச்சர்ஸ் செய்துகொண்டிருந்தான். இளையவன் ராமு பி. ஏ. ஆனர்ஸ் படித்துக்கொண்டிருந்தான். பெண் மாலதியின் வாழ்க்கைத் தீபம் ஏற்றியஉடன் அணைந்துவிட்டது. இது அவரது வாழ்க்கையில் அளவற்ற துயரம் விளைத்தது. ஆனலும் கூடியமட்டும் பெண்ணைச் சந்தோஷமாகவைக்கப் பாடுபட்டார். பழுத்த ஸனுதனியானலும், பெண் பாசத்தில் சில விஷயங்களை விட்டுக்கொடுத்தார். S. S. L. C. யுடன் படிப்பை நிறுத்திவிட்டார். அவளும் படிக்கவிரும்பவில்லை. அவளுக்குச் சித்திரக் கலையில் அதிக ஆர்வமிருந்தது. அதனல், ஓர் வயதான கிழவரைக்கொண்டு அவளுக்குச் சித்திரம் பயிற்றுவித்தார். மாலதி அதில் அதிக கவனம் செலுத்தினள். குருவே கண்டு வியக்கும்படி அமையும் அவள் சித்திரம். அவளுடைய இளமனதை, கலையில் திருப்பிவிட்டால அவள் வாழ்க்கை நிம்மதியான பாதையில் செல்லும், சங்கீதம் சாந்தியளிக்கும், என்ற நம்பிக்கைகொண்டார் ராகவய்யா. அவள் விரும்பும் எந்தப் பொருளையும் வாங்கிக் கொடுப்பார். அவளும் கவலையில்லாமல் காலங்கழிப்பதாகத் காணப்பட்டாள். ஆனல் ''யௌவனத்தின் இயற்கை எதிலும் கட்டுப்படாதது. அதன் பாதை தனிப்பட்டது'' என்பதை அவர் எண்ணிப்பார்க்கவில்லை. அதன் அவசியமும் ஏற்படவில்லை.

நரேன் சென்னைவந்து இரண்டு வருஷங்களாகிவிட்டன. அவன் புகழ் தென்னடெங்கும் பரவியது அநேக ட்யூஷன்கள் ஏற்பட்டன. உயர்ந்த சபாக்களிலும், வெளியூர்களிலும் கச்சேரிகள் செய்துவந்தான். லக்ஷ்மீதேவி அவனிடம் நிரந்தரமாக வாசம் செய்தாள். தனக்கு வருமானம் கிடைக்க ஆரம்பித்ததும், நரேன், தனியே ஜாகை வைப்பதாகச் சொன்னன். ''கல்யாணம் செய்துகொண்டபின் பார்த்துக் கொள்ளலாம்'' என்று சொல்லிவிட்டார்கள். ராகவய்யாவின் வீட்டில் நரேனும் ஒரு குழந்தைபோல் வளர்ந்து வரலானன். அவனுடைய தினசரி வாழ்க்கை, அவர்களுடைய ஆதரவிலேயே நடந்துவந்தது. சாக்ஷாத் மஹாலக்ஷ்மிபோல்தோன்றும் ராகய்யாவின் சம்சாரத்தைக் காணும்பொழுதெல்லாம், தனது வளர்ப்புத்தாயை நினைப்பான். அவள் நரேந்திரனைச் ''சாப்பிடவா'' என்று அழைக்கும் அன்புத்தொனி, அமுத தாரையாக இருந்தது. ''நாம் தாயை அறியோம். ஆனல் தாயன்பு என்பது இதைவிட மேலாகாது. இதுவும் நாம் செய்த பாக்யமே. நாம் ஆச்ரமத்தை விட்டுப் புறப்படும்பொழுது ஏற்பட்ட துக்கத்தின் இருள், இவர்களின் அன்பின் ஜோதியில் மறைந்துவிட்டதே'' என்று எண்ணி மகிழ்வான். பிள்ளைகள்முதல் வேலைக்காரன் வரை [illegible] அன்பாகவும், மரி[illegible]தைய[illegible] [illegible]ர்கள். அவ[illegible]து குணமும், நடத்தையும், ரூ[illegible]ம் யாவரையும் வசிகரித்தன. நரேன் உடல் ந[illegible]ல சிவப்

218544

பல்ல, மாநிறம் என்பார்களே அதுபோல்நிறம். ஆனால் அழகிய அங்க அமைப்பு உள்ளவன்

அவன் ட்யூஷன் வைத்திருக்குமிடமெல்லாம் மதிப்பு அதிகம். அவனது அடக்கமான குணத்தை மெச்சியே அநேகர் ட்யூஷனுக்கு ஏற்படுத்திக்கொண்டார்கள். ஸ்த்ரீகளைப் போல் இனிய சாரீரம் உள்ளவனானபடியால் அவன் கச்சேரியை அநேகர் விரும்பினார்கள். காலை ஐந்து மணியிலிருந்து ஆறுமணி வரையிலும், இரவு ஒன்பது மணியிலிருந்து பத்துமணி வரையிலும், ராகவய்யா முன்பு மாலதியும், நரேனும், வீணை வாசித்துப்பாடுவது வழக்கம். மற்றப்படி ஒழிந்த நேரங்களில் மாலதிக்குச் சொல்லிக்கொடுப்பான். மாலதியுடன் சேர்ந்து நரேனும் சித்திரம் எழுதப்பழகினான். இப்படியாக, அவனுடைய வாழ்க்கை இன்பகரமாக ஓடிக்கொண்டிருந்தது. என்றாலும், அவனது ஹ்ருதயத்தின் மூலையில் ஒரு சிந்தனைச்சுடர் மங்கி மங்கிப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. மாலதியுடன் இரண்டு மூன்று மாதங்கள் பழகினதும், நமது தந்தையின்சொற்படி, இப்பெண்தான் அமைந்திருக்கிறாள், கிடைத்தால் நம்மைவிடப் பாக்யசாலி ஒருவருமில்லை என்று நினைத்தான். ஆனால், "அவள் உலகத்தின் பலபீடத்தில் நிற்கும் ஓர் கைதி" என்பதை ராகவய்யாவின் வாய் மூலமாகவே அறிந்தான். இதனால் அவன் மனம் சிதறிற்று. எவ்வளவு முயன்றாலும் அவனையறியாமல் அவன் மனம் அவளிடம் அடைக்கலம் புகுந்தது. ஆனாலும் வெளிக்கு இவ்வெண்ணம் தெரியாமல் நடந்து வந்தான்.

மாலதி இவன் விருப்பத்திற்கு மாறாக நடக்கமாட்டாள். முக்யமாக, அவன் சாப்பாடு முதலிய விஷயங்களில் கவனம் செலுத்துவாள். அவனுக்குப் பிடித்தமான சாமான்களைப் பத்திரப்படுத்திக்கொண்டிருப்பாள், மாதவன், ராமு, நரேன் மூன்றுபேர்களிடத்தும் சமமாக நடப்பதாக எண்ணுவாள். ஆனால், இந்த அன்பில், பேதம், ஒன்று குறுக்கிடுவதான உணர்ச்சி தோன்றும். அவள் மனதில் நரேன் இடம்பெற்றான். "இது பிசகு. நாம் இருக்கும் நிலைமை என்ன? மனம் கொள்ளும் எண்ணமென்ன?" என்று மறக்க முயல்பாள், வியர்த்தமாகிவிடும்.

"ஈசனே! களங்கமின்றியிருந்த என் மனதில் காதல் மறுத்தோன்றச் செய்துவிட்டீரே 'கல்யாணம்' என்று நடந்தது ஸ்வப்பனம்போலிருக்கிறது. பத்து வயது பாலிகையான எனக்கு அப்பொழுது ஒன்றும் தெரியவில்லை. 'கணவன்' என்றார்கள். எனக்கு அவரது ரூபமே இன்னதென்று புலப்படவில்லை. அப்படியிருக்க, காதல் என்பது எப்படித்தோன்றும்! இதுவரையிருந்ததுபோல் என்றும் இருக்கக்கூடாதா? நரேனைப் பார்த்த மாத்திரமே, என் மனதில் சலனம் ஏன் உண்டாயிற்று? அவரது குணமாகிலும் கடுமையாக இருக்கக்கூடாதா? அவரது குரல் எங்காவது கேட்டால்கூட என் மனம் ஒருவித உணர்ச்சியுடன் குதூகலிக்கிறதே. அவருடன் பேசும்பொழுதோ, பாடும்பொழுதோ, இதுவரை நான் அனுபவித்து அறியாத ஓர் ஆனந்தம் உண்டாகிறதே. எவ்வளவு கட்டுப்படுத்தினாலும், அவருக்காகச் செய்யும் பணிவிடைக்காக என் கைகள் பறக்கின்றனவே! சித்திரம்வரைய உட்கார்ந்தால் அவர் ரூபமே முன் நிற்கிறது. இதென்ன கொடுமை. ஈசனே உலகில் ரோஜா மலரைப் படைத்து முள்ளையும் படைத்ததுபோல் 'காதல்' என்ற உணர்ச்சியை உண்டாக்கி, அது நிறைவேறாத சமூகக் கொடுமையையும் ஏற்படுத்திவிட்டீரே. 'காதல் என்பது, என் போன்றவர் மனதில் உதிக்கக்கூடாது' என்ற ஓர் சட்டத்தை நீர் ஏன் உண்டாக்கக்கூடாது? உமது நியாயஸ்தலத்தில் இந்த ப்ரச்னைக்குத் தீர்ப்புக்கிடையாதா? "என் பூஜைக்குகந்தவரே! உம்மைச் சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து இந்த வரத்தை விரும்புகிறேன். தகப்பனார் தம் புதல்வனையும், தோழன் தன் நண்பனையும், அன்பன் தன் காதலியையும், எவ்விதம் பொறுத்துக்கொள்வார்களோ, தேவா! அவ்விதம் நீர், எனது இந்தப் பிழையைப் பொறுத்தருளவேண்டும். சரியன்று என்று தெரிந்தும், விலக்கமுடியாத பந்தமாய் பிணைத்துவிட்டது. எனக்குப் பொறுமை, சகிப்புத்தன்மை வேண்டும். என்மேல் இரக்கம்கொண்டு என்னைப் பொறுத்துக்கொள்ளுகிறீர் என்பதற்குப் பிரமாணம், உங்கள் அன்பின் விசேஷத்தால் நானும் எல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ள முடியும் என்பதே" என்று இரவு படுக்கையில் படுத்ததும் வேண்டிக்கொள்வாள். இருவரும் அவரவர் மனதில் எண்ணினார்களே தவிர, செய்கை, பார்வை, இவற்றில்கூட வெளிக்காட்டிக்கொள்ளாமல் ஜாக்கிரதையாக நடந்து வந்தார்கள். பிறர் பார்த்து சந்தேகப்படும்படியும் நடந்துகொள்ளமாட்டார்கள். இந்த நிலைமையில்தான் இரண்டு ஸம்வத்ஸரங்கள் ஓடி மறைந்தன. நரேனது புகழ் ஓங்கவே, யாவரும் அவனுக்குப் பெண் கொடுக்க முன் வந்தார்கள். முக்யமாக, கௌரவமான உத்யோகஸ்தர்கள், இவன் சம்பந்தத்தை விரும்பினார்கள். ராகவய்யாவும் அவனுக்கு ஓர் கல்யாணத்தைச் செய்துவைத்தால், தனது கடமை முடிந்துவிடும் என நினைத்துப் பிரயத்தனம் செய்தார். வரும்பெண்களையெல்லாம் என் தகப்பனார் சொல்லிய அம்சங்கள் இல்லையென்று தட்டிக்கழித்து வந்தான். ஆறுமாதகாலம், பெண்பார்க்கும் படலம் நடந்து வந்தது. அவன் இப்படித் தட்டிக்கழிப்பதால் ராகவய்யாவுக்கு வருத்தமும், வெறுப்பும் உண்டாயின. கடிந்துகொள்ள மனம் வரவில்லை. செய்வது இன்னதெனத்தெரியாமல் சங்கடப்பட்டார்.

4

நரேன் மனதில் ஓர் உறுதியேற்பட்டுவிட்டது. தந்தையின் மரணவாக்குப்படி சகல விதத்திலும் பொருந்தியவள், மாலதி. அவளை மறக்க அவனால் முடியாது. ஆனால் இச்சென்மத்தில் மாலதி கிடைக்கமாட்டாள். அதனால், தான் ஆயுள் பிரும்மசாரியே என்று தீர்மானித்துவிட்டான். அதனால் கடைசியில் தனக்குக் கல்யாணத்தில் விருப்பமில்லை எனத் தெரிவித்தான். ராகவய்யா அதை ஏற்கவில்லை. அதனால் அவனைக் கட்டாயப்படுத்த எண்ணம் கொண்டார். ஒருநாள் அவனிடம் வந்து "நரேன், உனக்கு இஷ்டமில்லாவிடினும், எனது திருப்திக்காகவும், உனது மாமி திருப்திக்காகவும் நீ கல்யாணம்செய்து செய்து கொண்டுதானாகவேண்டும். எங்களை மகிழ்விப்பது உனது கடமை. மாலதியும் இது அவசியம் எனச் சொல்லுகிறாள். என்ன சொல்லுகிறாய்?" என்றார்.

"கடமை, காதல், எது முக்கியம்? கடமை என்ற நினைப்பில் நாலுநாள் அவகாசம் கொடுங்களேன், தீர்மானம் சொல்கிறேன்" என்றான்.

இதைப்பற்றிச் சிந்தித்துப் பார்க்கப் பார்க்க அவனுக்கு ஒன்றுமே முடிவிற்கு வரமுடியவில்லை. கல்யாணம் வேறொருத்தியுடன் என்று அவனால் நினைக்கக்கூட முடியவில்லை. மாலதியை மறக்கமுடியவில்லை. ஏதோ ஒருமாதிரியாக, அவளுடன் பொழுதைக் கழிப்பது சற்று ஆறுதலாக இருக்கிறது என்று நினைத்தால் கல்யாணத் தொந்தரவு அதிகமாயிற்று. கொஞ்ச நாள் வெளியூர்ப் பிரயாணம் செய்தால் இத் தொந்தரவினின்றும் விடுதலை பெறலாம். மாலதியையும் மறக்கமுடியுமா என்பதைப் பார்க்கலாம் என்ற முடிவிற்கு வந்தான். உடனே எழுந்து வெளி ட்யூஷன்களை முடித்துக் கொண்டு, மத்யானம் இரண்டு மணிக்கு மாலதிக்குச் சொல்லிக்கொடுக்க, இருவரும் வீணையுடன் எதிரெதிராக உட்கார்ந்தார்கள். சற்று நேரம் வாசித்தானதும் நரேன் வீணையைக் கீழே வைத்தான்.

"ஏன் இவ்வளவு சீக்கிரம் முடித்து விட்டீர்கள்" என்றாள் மாலதி.

"ஒரு விஷயம் உன்னிடம் சொல்லவேண்டும், அதற்காகவே நிறுத்தினேன். நீ இனிமேல் தானாகவே வாசிக்கலாம். சொல்லிக்கொடுக்க வேண்டிய அவசியமில்லை. நான் கொஞ்ச நாள் வெளியூர் சுற்றுப்பிரயாணம் செல்லலாமென்று நினைக்கிறேன். அநேகமாக நாளையதினமே புறப்படலாமென்பது உத்தேசம்."

"சரி நான்தான் தனியே வாசித்துக் கொள்ளுவேன். மற்ற ட்யூஷன் என்னவாவது?"

"அவர்களைப்பற்றி அவசியமில்லை"

"எதற்காக வெளியூர் செல்லப்போகிறீர்கள்?"

"கல்யாணத் தொந்தரவினின்றும் விடுதலையடைய" என்று குனிந்தவாறே வீணையை வருடிக்கொண்டு கூறினான்.

"என்றாவது ஒருநாள் அது நடக்கத்தானே வேண்டும்".

"ஏன் நீ இப்பொழுது இருக்கவில்லையா? அதுபோல் நானும் இருக்கமுடியாதா?"

"என்விதி இப்படி. உங்கள் விஷயம் அப்படியல்லவே. உங்கள் இஷ்டப்படியெல்லாம் கல்யாணம் செய்துகொள்ளலாமே."

"அதுதான் இல்லை. என் மனதிற்குப் பிடித்தவள் இந்த ஜன்மத்தில் கிடைக்கமாட்டாள்"

"ஏன் அப்படி?"

"தயவுசெய்து அதைப்பற்றிக் கேட்காதே! சொல்லமுடியாது".

"இஷ்டமில்லாவிடில் வேண்டாம். பிரயாணத்தைப்பற்றி அப்பாவிடம் சொல்லியாய்விட்டதா?"

"இல்லை இன்று இரவு தெரிவிப்பதாக உத்தேசம்."

சற்றுநேரம் இருவரும் மௌனத்தைக் கடைப்பிடித்தார்கள். பிறகு "ஒரு விஷயம் என் மனம் விட்டே உங்களிடம் சொல்லுகிறேன். ஏதோ தாங்கள் இவ்விடமிருப்பதால் எனக்கு மனம் சற்று ஆறுதலாக இருந்தது. இப்படியே என் ஆயுள் பூராவும் இருக்கமுடியும் என்று நான் மனக்கோட்டை கட்டமுடியுமா? என் விஷயத்தில் தாங்கள் காட்டிவந்த சிரத்தைக்கு வந்தனம். என்னுடைய இருளடைந்த வாழ்வில் சந்திரோதயம் போல் தாங்கள் வந்து சேர்ந்தீர்கள். ஆனால் உங்கள் விருப்பத்தில் குறுக்கிட நான் யார்? சமூகத்தின் உன்னத லக்ஷ்யத்தில் இருப்பவர் தாங்கள்; நானோ அச்சமூகத்தினின்றும் ஒதுக்கப்பட்டவள். ஆனாலும் உங்களை மறப்பது என்பது என்னால் முடியாது. தாங்களும் 'ஒரு பேதை நம்மிடம் கலை கற்றாள் என்று நினைப்பீர்கள்' என்பது நிச்சயம். நீங்கள் எங்கே சுற்றினாலும் கடைசியில் இவ்விடமே வந்து சேரும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். உங்கள் பிரிவு" என்று சொல்லவந்தவள் சட்டெனத் தன் உதட்டைக்கடித்து வார்த்தையை நிறுத்தி விட்டாள் மாலதி.

இதுவரை இவள் சொல்லிக்கொண்டு வந்த வார்த்தைகளை குனிந்து விரல்களினால் வீணையை வருடினவாறே கேட்டுக்கொண்டிருந்தவன், வார்த்தை பாதியில் நின்றதும் நிமிர்ந்து பார்த்தான். அவள் தலைகுனிந்தாள். கண்ணிலிருந்து ஓர் முத்து வீணைமீது உருண்டது. திடுக்கிட்டு, "மாலதி இது என்ன? ஏன் வருத்தப்படுகிறாய்?

உனக்கு இஷ்டமில்லாவிடில் நான் செல்லவில்லை ஆனால்..............'' என்று சொல்லும்பொழுது இடைமறித்து, "வேண்டாம் எனக்காக உங்கள் விருப்பத்தை மாற்றிக்கொள்வது சரியல்ல. சென்றுவாருங்கள்'' என்று சொல்லிவிட்டு எழுந்து போய்விட்டாள்.

அவனுக்கு ஒன்றும் தோன்றவில்லை. மாலதியும் தனது நிலைமையிலிருக்கிறாள் என்று அன்றுதான் யூகிக்கமுடிந்ததே தவிர அதுவரை அவளிடம் ஒரு மாறுதலையும் அவன் அறியமுடியவில்லை. அவனும் வீணையை எடுத்துக்கொண்டு தன் அறைக்கு வந்தான். ஜன்னல் பக்கமாகப் போடப்பட்ட ஈஸிச்சேரில் சாய்ந்து, ஜன்னல் வழியாக ஆகாயத்தையும், மரம் செடி கொடிகளையும் பார்த்துக்கொண்டிருந்தான். தினசரி நிம்மதியைக்கொடுக்கும் இயற்கை அன்று சஞ்சலத்தையே அளித்தது. "சித்திரத்திலாவது நிம்மதியை நாடலாம்'' என்று நினைத்து எழுத உட்கார்ந்தான்; மனம் அதிலும் செல்லவில்லை. பின்னும் மனதைக் கட்டுப்படுத்தி அன்று கண்ணீர் நிறைந்த மாலதியின் தோற்றத்தை வரையாலனான். மனம் சற்று அதில் ஓடிற்று. ஓர் இடத்தில் பச்சை வர்ணம் தேவையாக இருந்தது. அவனிடத்தில் ஆய்விட்டது, அதனால் மாலதியினிடமிருந்து எடுத்துவரலாமென்று அவள் அறைக்கு வந்தான். கதவு சாத்தியிருந்தது. கையை வைத்தான், திறந்துகொண்டது. அறையின் கடைசியில் மேஜையருகிலுள்ள நாற்காலியில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். அடிமேலடி வைத்துப் பூனைபோல நடந்துவந்து மாலதியின் பின்னால் நின்றான். அவள் கையிலுள்ள சித்திரத்தையே கவனித்துக்கொண்டிருந்ததால் இவன் வரவை அறியமுடியவில்லை. அவள் கையிலிருக்கும் படத்தைப் பார்த்ததும் நரேன் திடுக்கிட்டான். அவன் மனதிலிருந்த பெரியபளு நீங்கினாற்போன்ற உணர்ச்சி ஏற்பட்டதால் தன்னையறியாமலே 'அப்பா!' என்ற சொல் அவன் வாயினின்றும் வெளிவந்தது. சப்தத்தைக்கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள் மால்தி. பயத்தினால் அவள் தேகம் ஆடியது, மார்பு 'படக் படக்' என்று அடித்துக்கொண்டது. முகம் வெளுத்தது. அந்த நிலைமையிலும், சித்திரத்தை மறைக்கப் பிரயத்தனப்பட்டாள்.

"அதை நான் பார்த்தாய்விட்டது, மறைக்க வேண்டிய அவசியமில்லை.''

சித்திரத்தை மேஜைமீது வைத்துவிட்டு, எழுந்து மேஜையின் பக்கவாட்டில் நின்று மேஜையில் கையையூன்றிக்கொண்டு, "இப்படித்திருடனைப்போல் வந்து பிறர் காரியங்களை கவனிப்பது தங்களைப் போன்றவர்களுக்கு அழகாகுமா?'' என்று தலைகுனிந்து கடைக்கண் நோக்காகக் கேட்டாள்.

"திருட்டைத் திருட்டினால்தான் கண்டுபிடிக்க வேண்டும். மேலும் நான், மாதவன், ராமு மூவரும் எந்த நேரத்திலும் உன் அறைக்குள் வரலாமென்பது சட்டம். எனக்குக்கொஞ்சம் பச்சை வர்ணம் தேவையாக இருந்தது. எடுத்துப்போக வந்தேன். ஒருவரும் வரக்கூடாது என்றால் தாளிட்டுக்கொள்ளவேண்டும்'' என்று புன்சிரிப்புடன் கூறினான்.

"கதவைத் தாளிட்டிருப்பதாகவே நினைத்திருந்தேன். நல்லகாலம் கடவுள் காப்பாற்றினார். தங்களையன்றி வேறுயாராகிலும் வந்திருந்தால் என் நிலைமை என்னாகும்? கடவுளை நம்பினோர் கைவிடப் படார் என்பது உண்மையாயிற்று'' என்றாள்.

மேல் என்ன பேசுவது என்ற பிரச்னையில், சற்றுநேரம் மௌனம் நிலவியது. பிறகு "நாற்காலியில் உட்காரலாமே'' என்றாள் மாலதி.

நாற்காலியைப்பின்னுக்கு இழுத்து அதில் உட்கார்ந்துகொண்டு சித்திரத்தை எடுத்து, உற்று நோக்கினான். அதில் ஒரு மலை, அருவிகளுடன் கூடிய இயற்கைக் காக்ஷி நன்றாகத் தீட்டப்பட்டிருந்தது. மலையில் படிகள் செதுக்கப்பட்டிருந்தன. மேல் படியில் நரேன் புன்சிரிப்புடன் வா! என்று அழைக்கும் பாவனையாகக் கையை நீட்டி நின்றுகொண்டிருந்தான். கீழ்ப்படியில் புன்சிரிப்புடன் கூடிய முகத்துடன் ஒரு மல்லிகை மாலையைக் கையில் வைத்துக்கொண்டு மாலதி படியேறும் பாவனையில் காலைவைத்து நின்று கொண்டிருந்தாள். மற்றொரு பக்கத்தில் அதே காட்சி, நரேன் பயந்த முகத்தோற்றத்துடன் தலையில் கையைவைத்து நின்றுகொண்டிருந்தான். மாலதி கண்களில் நீர் தளும்ப மாலையைத் தவிர விட்டுக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள். நடு மத்தியில், ஒரு பெரிய விருக்ஷம் இருவரும் சந்திக்க முடியாவண்ணம், விழுந்து தடுக்கப்பட்டிருந்தது. மாலதி நரேந்திர சந்தர் என்று இரு உருவத்தின் கீழும் பெயர் வரைந்திருந்தது. விருக்ஷத்தினடியில் "சமூகம்'' என்று எழுதியிருந்தது. அதைப்பார்க்க நரேனுக்குப் பிறவிக் குருடனுக்குக் கண் கிடைத்ததுபோன்ற ஆனந்தம் உண்டாயிற்று. மதுவுண்ட வண்டினைப் போல், அவன் மனம் சங்கையற்றது. அப்படியே அவளை அணைத்து முத்தமிடவேண்டும் என்ற உணர்ச்சி உண்டாயிற்று. அவையெல்லாவற்றையும் உள்ளடக்கிச் சாந்தமாகப் புன்சிரிப்புடன், "மாலதி! சற்று முன் எனக்கு இஷ்டமானவள் கிடைக்கமாட்டாள் என்று சொன்னதற்கு, 'ஏன் அப்படி' என்று கேட்டாயல்லவா? அதனுடைய பதிலை நீயே பேசித் தெரிந்துகொள்ளவேண்டிய சததர்ப்பமில்லாமல் சித்திரித்துவிட்டாயே! இப்பொழுது ஒருவரையொருவர் ஏமாற்றிவந்த நாடகம் முடிவடைந்துவிட்டது. மேகத்திற்குள் மறைந்திருந்த சந்திரன் வெளிப்பட்டதுபோல் விஷயம் பிரகாசத்தை அடைந்துவிட்டது. பலநாள் திருடன் ஒரு நாள் அகப்பட்டே தீருவான்.'' என்று சிரித்தான். "ஏதோ, என் மனச்சாந்திக்

உங்கள் கூந்தலைக் காப்பாற்ற மூலமந்திரம்

உங்கள் கூந்தலைக் காப்பாற்றுவது உங்கள் கையிலேதான் இருக்கிறது......மிகவும் எளிதான முறை, ஆயினும் உங்கள் கூந்தலை இயற்கையாக வளர உதவியளித்து, அதன் அழகைக் காக்கும் தன்மை வாய்ந்தது. ஒரு பாட்டில்

காமினியா ஆயில்

(ரிஜிஸ்டர்டு)

இந்த வித்தையைச் செய்யும். ஒருமுறை உபயோகித்தால் மறக்கமுடியாது. அதன் நிகரற்ற மணம் அதைத் தேடிச்செல்லத் தூண்டும்

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்.

ஆட்டோ டில்பகார்

(ரிஜிஸ்டர்டு)

மணங்களுக்குள் தலைசிறந்த அரசன். இதன் வசீகர மணம் நிகரற்றது. மதுசார சம்பந்த மற்றது.

எங்கும் கிடைக்கும்.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். 2 அணா தபால் தலை அனுப்பினால் சாம்பிள் அனுப்பப்படும்,

சோல் ஏஜண்டுகள் :

ஆங்கிளோ-இந்தியன்
டிரக் & கெமிகல் கம்பெனி,
பம்பாய்–2.

காகத் தோன்றியதை எழுதினேனே தவிர உங்கள் மன நிலைமையை என்னால் அறிந்து கொள்ளமுடியவில்லை.'' என்று சொல்லும் பொழுதே இடைமறித்து, "உன் நிலைமையை மாத்திரம் நான் அறிய முடிந்ததா? இன்று இச்சித்திரத்தைப் பார்க்காவிடில், 'அலைக்டல் துரும்பு' எனத் தத்தளிப்பேன். ஒரு விஷயத்தில் இருவரும் ஒற்றுமையாக அவ்வளவு முன்னெச்சரிக்கையாக நடந்து வந்திருக்கிறோம். உன்னை மறக்கவே வெளியூர் செல்ல நினைத்தேன். இனி அதை மாற்றவேண்டியதே.''

"இல்லை இல்லை! நீங்கள் அவசியம் செல்ல வேண்டும். சென்றால் நிச்சியமாக உங்கள் மனதிற்கிசைந்த மங்கை கிடைப்பாள்.''

"அதுதான் இல்லை. எனது தந்தை சொல்லியபடி சகல விதத்திலும் எனக்குகந்தவள் நீயே. "வைதவ்யம் என்றாலும் பரவாயில்லை'' என்பது அவரது மரணவாக்கு. இதோ இந்த விருக்ஷத்தை வெட்டிவிட்டால்?''

''யார் வெட்டுவது?''

"ஏன் நான்தான்?''

"முடியாது. அதை வெட்டும் கோடரி எனது தந்தையின் கையிலிருக்கிறது. அதைக் கொடுக்கவும் மாட்டார், விருக்ஷத்தைவெட்ட சம்மதிக்கவும் மாட்டார்.''

''இல்லை நான் கேட்டால் நிச்சயம் சம்மதிப்பார். தனது குழந்தையின் நன்மையான வாழ்வைத் தடுக்க ஒருவரும் விரும்பமாட்டார்கள்.''

"நீங்கள் நினைப்பது தவறு. இவ்விஷயம் கிணற்றில் போட்ட கல்லைப்போல் மனதிற்குள் புதைக்கப்படவேண்டும். என்போன்றவர்களுக்கு இவ்வெண்ணம் கூடாது. தெரிந்தும், என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை. இது விதியின் விளைவே. உங்கள் மனமாவது இவ்விதியை அறியக்கூடாதா? எனது தாயும் தந்தையும் குடும்ப கௌரவத்தின்மேல் அளவற்ற பற்றுவைத்தவர்கள். நிச்சயம் இதற்குச் சம்மதிக்கமாட்டார்கள். என்னுடைய சுக வாழ்க்கைக்காக அவர்களின் மனம் நோக நடக்கமாட்டேன். உலகத்தில் என் போன்றவர்களுக்கு ஏற்படுத்தி இருக்கும் கட்டுதிட்டங்களிலிருந்து என்னை எவ்வளவு தூரம் விடுதலை செய்திருக்கிறார்கள்! என்னை எவ்வளவு சந்தோஷத்துடனும், சுதந்திரத்துடனும் காலம் கடத்த வசதியளித்திருக்கிறார்கள். முக்யமாக உங்களுடன் நான் சகஜமாகப் பழக எவ்வளவு அனுமதித்திருக்கிறார்கள். இதனால் அவர்களின் இஷ்டப்படியே எனது காலம் கழியட்டும். என் மனம் ஏங்கித் தளர்ந்தது. உங்களுடைய உண்மையான அன்பைப் பெறவே நீங்கள் என்னுடையவர்கள். நான் தங்களுடையவள். இந்த ஒரே எண்ணம் என்னுடைய ஆயுள் பூராவும் இன்பகரமாகக்

கழிக்கப் போதுமானதே. எனது ஹிருதயத்தால் தங்களை அடைந்து சங்கீதத்திலும் ஓவியத்திலும் காலத்தை ஒரு விதமாகக் கழித்து வருவேன். தாங்கள் மனதுக்கிசைந்த வேறு மங்கையை மணந்து, உங்கள் தலைமுறையை முடிவடையச் செய்யாமலிருப்பது உங்கள் கடமை. தாங்கள் இவ்விடமே சம்சார சக்கரத்தைச் சுழலவிட்டால் நான் ஆனந்தமாக பார்த்துக்கொண்டிருப்பேன். எனது அன்பு பரிசுத்தமானால் பொறாமை என் மனதில் உண்டாகாது. இது நிச்சயம்?" என்றாள்.

"தலைமுறையைப்பற்றி அவசியமில்லை. எனது வாழ்நாளே முக்யம். எனது மனதுக்கிசைந்தவள் நீயே. எனது பிதா, குரு, இவர்களின்மீது ஆணையாகக் கல்யாணம் என்பது நடக்குமானால் உன்னுடன்தான். இல்லையேல் உன்னைப்போல் நானும், 'நீ என்னுடையவள்' என்ற நினைப்போடு சங்கீதம் சைத்திரிகம் இவைகளில் ஆனந்தமாகக் காலம் கழிப்பேன். இது நிச்சயம்?" என்றார்.

"ஐயோ! எவ்வளவு பயங்கரமான சபதம் செய்துவிட்டீர்கள்? விதி எவ்விதமான வழி காட்டுமோ? நரேன்! வேண்டாம்" என்றாள்.

"மாலதி! விதி எவ்வழி காட்டினாலும் அவ்வழி நடக்க நான் தைர்யத்துடன் காத்துக்கொண்டிருக்கிறேன். காதல் மனித சக்திக்கு அப்பால் உள்ளது என நினைக்கிறேன். சகடக்கால் உருளுவதுபோல் சந்தோஷமும் துக்கமும் மாறுகின்றன. சற்றுமுன் நான்பட்ட வேதனை சஹிக்கமுடியவில்லை. சில நிமிஷங்களுக்குள் எவ்வளவு ஆனந்தமான நிம்மதி கிடைத்துவிட்டது. காலத்தின் சக்தி வியக்கத்தக்கதே. மாலதி! தந்தையின் வாக்கைக் காப்பாற்ற வேண்டும், பெரியோர்களின் வாக்கைத் தட்டக்கூடாது, என்பதற்காகவே மத்யான வேளையானால் தடுப்பார்கள், மனம் எவ்வித நிலைமையை அடையுமோ, என்பதற்காக நள்ளிரவில் கிளம்பினேன். அச்சமயம், அத்தோட்டம் யமுனா இவைகளை பிரியவேண்டுமே என்று நான் அடைந்த துக்கம் அளவற்றது. பாலைவனத்தில் சுனை நீர் கிடைத்தாற்போலிருந்தன, உனது தந்தையின் வரவேற்பும் அன்பும். அவையெல்லாவற்றையும்விடத் தற்சமயம் என் மனம் அடையும் குதூகலம் சொல்லால் விவரிக்க இயலாது. 'மாலதி! என் நெஞ்சைத் தொட்டுப்பார்!' என்று எழுந்து அவள் கையைப்பிடித்தான். "நரேன்! வேண்டாம் விட்டுவிடுங்கள். இதுவரை இருந்ததுபோலவே இருக்கவேண்டும். மனதைக் கட்டுப்படுத்துங்கள். என்னை மன்னியுங்கள்" என்று அவனை இரக்கமாகப் பார்த்துக்கொண்டே கெஞ்சிக் கேட்டாள்.

"பயப்படாதே! நான் முரடனல்ல. மிருகத்தனமாக நடந்துகொள்ளமாட்டேன். என்னை நம்பு. என் அன்பு பரிசுத்தம், காமகலப்பற்றது. நீ சொல்லியபடியே காலம்கழிப்போம்; பெரியவர்களின் மனம் நோகவேண்டாம். இருவருமாகத் தேசத்திற்குப் பாடுபடுவோம். சங்கீதம், சித்திரம் இவை இரண்டிலும் ஒத்துழைத்துப் பாடுபடுவோம். உலகின்முன் சஹோதரர்கள், ஈசன் முன்னும், நமது ஹ்ருதயத்தின் முன்னும் தூய்மையான காதலர்கள். இனிமேல் நமது வாழ்க்கை ஆனந்தமானது, பரிசுத்தமானது. ஆனால் மாலதி! ஒன்று கேட்டுக்கொள்ளுகிறேன், அதைமட்டும் நிறைவேற்றவேண்டும். தினசரி, சில நிமிஷங்களாவது, நாம் தனியாக மனம்விட்டுப் பேச நீ வசதியளிக்கவேண்டும், வசதியேற்படுத்திக் கொள்ளவேண்டும். இதற்குமேல் நான் வேறொன்றும் எதிர்பார்க்கவில்லை" என்று அவள் கைகளைக் கண்களில் ஒற்றிக்கொண்டு விட்டுவிட்டான்.

ஆவேசம் வந்தவன்போல் அவன் சொல்லிவந்த விஷயங்களைப் பதுமைபோல் அவனையே பார்த்துக்கொண்டு நின்றுக் கேட்டுக்கொண்டிருந்த மாலதி, தானும் அவனது கைகளை கண்களில் ஒற்றிக்கொண்டு "நரேன்! உங்கள் சித்தப்படி நடக்கிறேன். ஆனால், நாம் இதுவரை நடந்து வந்ததுபோல் இருக்கவேண்டும், பிறர் பார்த்துச் சந்தேகம்கொள்ளும் நிலைமைக்கு வரக்கூடாது" என்றாள்.

"எனக்கு இல்லையா! அந்த உணர்ச்சி. கவலைப்படாதே நாம பரிசுத்தமாக காமக்கலப்பற்ற காதலர்களாக நடந்துவந்து நமது இறுதிக் காலத்தில் நமது சரித்திரத்தை எழுதிவிட்டுப் போனோமானால் யாவரும் ஆச்சரியத்தில் அமிழ்ந்துவார்கள். ஓர் நிபந்தனை. நமது அன்பு பரிசுத்தமானால், நமது ஜீவன் ஒரே காலத்தில் பிரியவேண்டும்" என்றான். பிறகு சற்றுநேரம் பிற்காலம் தாங்கள் நடக்கவேண்டிய புரோகிராம் போட்டார்கள். ஆகாயத்தை வில்லாக வளைக்கவும், மணலைக் கயிறாத் திரிக்கவுமான திட்டங்கள் வகுத்தார்கள். ஆனால் விதியும் காலமும் அவர்களின் மனோபீஷ்டம் நிறைவேற வசதியளித்தனவா?

(தொடரும்.)

Edited & Published by N. R. Ramanujan B. A. & Printed by S. Rangaswami B. A.
at The Cauveri Colour Press, Besant Road, Kumbakonam.

சின்னப்பா

கண்ணாம்பா கிருஷ்ணன் மதுரம் நடித்த

ஹரிச்சந்திரா

ஜனவரி 14உ பொங்கல் தினம் முதல்

சென்னை ஸன் & கிரௌன்

பெங்களூர் ... ஆபரா டாக்கீஸ்

மதுரை ... நியூசினிமா

திருச்சி ... முருகன் டாக்கீஸ்

காரைக்குடி ... . ராம விலாஸம்

ஸ்ரீராஜராஜேஸ்வரி
பிக்சர்ஸ் தயாரிப்பு
ஜெமினி ரிலீஸ்

T. S. R.

டி. எஸ். ஆர்.

மூளைக் குளிர்ச்சிக்கும்
கேச வளர்ச்சிக்கும்
நறுமணத்திற்கும்
நிகரற்ற தைலங்கள்

கோகுல் தைலம்

தேங்காயெண்ணை தைலம்

ரக ரகமான ஊதுபத்திகளும்
வாசனைத்திரவியங்களும் கிடைக்கும்

சென்னை ஸோல் ஏஜண்டு
புஷ்பவனம் ஸ்டோர்ஸ்
திருவல்லிக்கேணி—மதராஸ்

T·S·R·&·C°. PERFUMERS KUMBAKONAM

PRINTED AT THE CAUVERI COLOUR PRESS, KUMBAKONAM.